விக்ருதி ஆவணி. 1—9—'50. அணா நான்கு.

# ஜகன் மோகினி

12

இவ்விதழில்

- ஒரு முழு நவீனம் — "நியாயமழை" வை. மு. கோ. 93-வது நாவல்
- வழக்கம்போல் இதர முக்கிய அம்சங்களும்

12
2-51.

27-வது ஆண்டு

இவ்விதழில் ஒரு முழு நாவல்!




3L
M50.27.9

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
- திருவள்ளுவர்.

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.
- வீரராகவ கவி

| | | |
|---|---|---|
| Vol. 27 | விக்ருதி ௵ | September |
| No. 9. | ஆவணி மீ | 1950. |

வித்யாதானம் செய்யுங்கள்!

## மகாத்மாஜி ஸேவா சங்கம்

அன்பார்ந்த சகோதரிகளே!

நம் ஸேவாசங்கத்தின் மகாத்மாஜி ஞாபகார்த்த இலவசச் சம்பள நிதிக்கு உதவிபுரிய ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை உங்களுக்குத் தெரிவித்து உதவியைக் கோருகிறோம்.

ஸெப்டம்பர் மாதம் 9-ந் தேதியன்று திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் சிங்கராசாரியார்ஹாலில் மாலை 6 மணிக்கு

வை. மு. கோ. எழுதிய 94-வது கதை சமூக நாடகம்

# அருணோதயம்

சங்கத்து அங்கத்தினர்களில் சிறந்தமேதைகள், ஏற்கெனவே உங்கள் அபிமானம் பெற்றவர்கள், நடிப்பார்கள்.

சங்கத்தின் சந்தாதாரர்களுக்கு வழக்கம்போல் அரை சார்ஜுக்குடிக்கட்டுகொடுத்து ப்ரத்யேகசலுகைகாட்டப்படும்.

இந்தத் தொகையைக் கொண்டு பல ஏழைகள் படித்து முன்னுக்குவரும் பெரிய கைங்கர்யத்தைச் செய்த மகத்தான புண்ணியம் உங்களுக்கு உண்டாகிறது.

| | |
|---|---|
| முதல் வகுப்பு டிக்கட்டு | ரூ. 3 |
| சந்தாதாரர்களுக்கு | ரூ. 1—8 |
| இரண்டாவது வகுப்பு டிக்கட்டு | ரூ. 2 |
| சந்தாதாரர்களுக்கு | ரூ. 1 |

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு ஒரே சார்ஜ் 8 அணாதான்

ஏற்கெனவே சந்தாதாரர்களாயிருப்பவர், இவ்வருஷ பாக்கிச் சந்தாவைச் செலுத்தவும்.

புதிதாகச் சேருவோர் குறைந்தது ஆறு மாதச் சந்தாவாவது செலுத்தினால்தான் பாதி சார்ஜில் டிக்கட்டு கொடுக்கப்படும்.

ஜகன்மோகினி கட்டிடத்தில் டிக்கட்டுகள் கிடைக்கும்.

## அருணோதயம் — நாடகம்

தனிப் புத்தகம் அணா 12.

# தீராத பிரச்னை

"தீராத வினையெலாம் தீர்த்து வைப்பார் கோவிந்தா, கோவிந்தா!" என்ற கோஷம் புரட்டாசி சனிக்கிழமைகளில் தமிழ்நாடெங்கும் ஒலிக்கின்றது. வினைதீர்க்கும் வல்லவனான அந்த ஸர்வரக்ஷகனிடம்தான் இந்த 'தீராத ப்ரச்னை'யான காஷ்மீர் சிக்கலை விடவேண்டும் போலிருக்கிறது. ஏனெனில், மனித யத்தனத்தில் சாதாரண—சமரஸமான—சுமுகமான—முறையில் அது சீக்கிரம் தீருவதாகக் காணவில்லை. "இதைத் தீர்த்துவிடுகிறேன்" என்று கங்கணம் கட்டிக்கொண்டுவரும் ஒவ்வொருவரும் கையை விரித்துக்கொண்டு உதட்டைப் பிதுக்கிக்கொண்டு திரும்புகின்றனர்.

ஐ. நா. வுக்குச் சென்றதற்குக் கண்ட பலன் வீண் காலதாமதமும், அனாவசியச் செலவும், அசம்பாவிதமான ப்ரேரணைகளும், குற்றவாளிக்குக் குதூகலமும்தான்! உண்மையை உள்ளபடி உணர்ந்து, ஆக்கிரமிப்பாளரைக் குற்றவாளியென்று கண்டிப்பதற்குப் பதிலாக, படையெடுத்தவனை அங்கீகரித்து சம அந்தஸ்து கொடுத்து, பாரபட்சம் காட்டியுள்ளன, ஐ. நா. வும், அதன் அங்கங்களும்.

தற்போது, வடகொரியா தென்கொரியா மீது பாய்ந்ததும் அதை "ஆக்கிரமிப்பாளர்" எனக்கண்டித்து உடனே அதன்மீது நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள ஐ. நா. பாதுகாப்பு சபை, முன்பு இந்திய யூனியனுடன் சேர்ந்த காஷ்மீர் மீது பாகிஸ்தான் பாய்ந்ததைப் பார்த்தும் பாராதுபோலிருந்தது; இந்தியா பிராது செய்தும் பாரபட்சக் கொள்கையைக் கையாண்டு வந்தது—வருகிறது. கண்டனமுமில்லை; நடவடிக்கையுமில்லை; எல்லாம் 'வழ வழ'வும், தட்டிக்கொடுத்தலும்தான்! இந்த அடிப்படைக் கொள்கை மாறும்வரையில் ஐ. நா. மூலமாக இந்தப் பிரச்னை தீரப்போவதில்லை.

'நிபுணர்' 'சரியான நீதிபதி' 'மிகவும் தகுதிவாய்ந்த மத்யஸ்தர்' என்றெல்லாம் வெகுவாகப் பறை சாற்றப்பட்டவர். டிக்ஸனின் கைத்திறனும் பலிக்கவில்லை! ஐ. நா. சபை எப்படி சரியான முறையில் இப் பிரச்னையை அணுகவில்லையோ அதேபோல்தான் அவரது முயற்சியும் அமைந்தது! இருகட்சிகளையும் ஒரே ரீதியில் பாவிப்பது, ஆக்கிரமிப்புக்கட்சிக்கு ஆதரவுகாட்டி, விட்டுக்கொடுத்து நடப்பது என்றால், சரியான முடிவை எப்படிக்காணமுடியும்?

வார்த்தைகளை அளந்து, அறிந்து, பேசும் நேருஜியே டிக்ஸன் ப்ரேரணைகளை மிக அழுத்தமான வாசகங்களால் அலசியிருக்கிறார். குற்றம் செய்தவனையே தட்டிக்கொடுத்து ஊக்கும் மிகப் பொருத்தமற்ற ப்ரமிக்கத்தக்க சிபாரிசுகளைச் செய்திருக்கிறார் 'நடுநிலை நீதிபதி' அவர்கள்! உண்மையை உண்மை என்று உணர்ந்தும், ப்ரேரணைகள் செய்யும்போது ஒரு பக்கம் சாய்ந்துவிட்டதுதான் விந்தையிலும் விந்தை.



1—9—1950

ஆனால் தன்னால் முடிவுகாண இயலவில்லை என்பதை ஒப்புக் கொண்டு, தஸ்தாவேஜுகளை மூட்டைகட்டிக்கொண்டு ஐ. நா. சபைக்குத் திரும்பத் தீர்மானித்து, ஒரு விவரமற்ற 'வழவழ' அறிக்கையை வெளியிட்டாரே அதற்கும், இதற்குமுன் ஷை ஐ. நா. சபையால் சாதிக்கமுடியாமற்போன 'முக்கூட்டு மகா நாடு' பேச்சுவார்த்தைகளை ஐந்துதரம் கூட்டியதற்கும் அவரைப் பாராட்டவேண்டுமல்லவா? ஒருவேளை ஐ. நா. சபைக்குச் சமர்ப்பிக்கும் 'ரிபோர்டில்' விரிவான 'ஜட்ஜ்மெண்ட்' போல் எல்லாவற்றையும் விளக்குவாரோ என்னவோ?

சுருங்கச் சொல்லின், முதன்முதல் ஐ. நா. சபைக்கு இந்தியா பிராது செய்தபோது, தன்னுடன் ஐக்கியமான காஷ்மீர் ப்ரதேசத்தில் ஆக்கிரமிப்பு செய்த பாகிஸ்தானை ஷை சபை கண்டித்து, வெளியேறச் செய்ய உத்திரவிட வேண்டுமென்று கோரி, ஆக்கிரமிப்பை ருஜுப்படுத்தியது. இவ்வாறு எதிரிப்படைகளை வெளியேற்றுவதும், காஷ்மீர் சமஸ்தான அரசாங்கத்திடம் பூரண பொறுப்பையும் மீட்டுக் கொடுப்பதுமே சட்டப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கையாகும். யுத்தநிறுத்த எல்லைக்கு அப்பாலுள்ள எதிரிப்படைகளைக் கலைத்து வெளியேற்றி, அமைதியை நிலைநிறுத்தி, பிறகுதான் பொதுஜனவாக்கெடுப்பு ஐ. நா. ஆதரவில் நடத்த வேண்டும்; காஷ்மீர மக்களின் அரசாங்கம் ராஜ்ய பாரத்தை நிர்வகிக்கவேண்டும்—என்பதே இந்தியாவின் கட்சி.

ஆனால், பாகிஸ்தானின் இஷ்டத்தை அனுசரித்து "மத்யஸ்தர்" டிக்ஸன் செய்த ப்ரேரணை என்னவெனில்,—"ஏற்கெனவே ஷை சமஸ்தானத்தில் சுமார் மூன்றிலொருபங்கு பாகிஸ்தான் வசம் சிக்கியுள்ளதல்லவா? அதில் வாக்கெடுப்பு வேண்டாம்! [தானம் போதும்!] மீதி ப்ரதேசத்தில் மட்டும் மக்கள் அபிப்பிராயத்தை அறிந்தால் போதும்!"

அதுவும் எப்படி? பாகிஸ்தான் கோருகிறது—இந்தியத் துருப்புக்களை வெளியேற்றவேணுமாம்! காஷ்மீர மக்களின் பிரதிநிதிகளான அப்துல்லா கோஷ்டியாரிடமிருந்து ராஜ்ய பாரத்தைத் தற்காலிகமாக "ஐ. நா." வுக்கு ஒப்புவித்து, அந்த சூழ்நிலையில் வாக்கெடுப்பு நடத்தவேணுமாம்! ஒரு ஆக்கிரமிப்பாளர் செய்யும் "சமரஸ ப்ரேரணை" இது! இவ்வாறு பட்சபாதம் காட்ட எந்த சட்டமும் இடந்தராது; எந்த கண்ணியம்வாய்ந்த நாடும் விட்டுக்கொடுக்க இயலாது. அரசாங்கத்தை அப்துல்லா மந்திரிசபையிடமிருந்து மாற்ற வேணும் என்று பாகிஸ்தான் கோரிய விஷயமாக டிக்ஸன் அபிப்பிராயமே கூறாமல் மூட்டைகட்டியிருப்பது விந்தை!

இன்று நிலை என்ன? நேருஜியே கூறியுள்ளார்—ஐ. நா. பாதுகாப்புச்சபையை நாம் அணுகியபோது என்ன நிலையிலிருந்தோமோ அதே நிலைதான் இன்றும்! வருடம் மூன்று உருண்டோடியும், இனிதான் பிரச்னைக்கு முடிவுகாணவேணும்! [கடவுள்தான் வழிகாட்டி நியாயம் வழங்கவேண்டும்!]

— வை. மு. ஸ்ரீ.

183/64

# பேயா?

# பிரமையா?

இருண்ட வானம் நரைத்துக் காண்கிறது, காலைவேளையை எதிர்நோக்கி. வாழ்க்கையின் இறுதிப் பருவத்திலே நல்லின்ப நினைவுகள் மிளிர்வதுபோல மிளிர்கின்றன நட்சத்திரங்கள் மினுக் மினுக்கென்று. குளிரோ, நடுக்கும் குளிரல்ல, கடிக்கும் குளிர்! தன் கந்தல் மேலாடையை இழுத்து இழுத்துப் போர்த்துக் கொண்டு நடந்துபோகிறான் ஒரு கிழவன்—தொண்டுகிழவன்.

இருகால்களும் பொய்க்கால்களாக, ஊன்றுகோலே மெய்க் காலாக நடந்துபோகிறவன், 'இங்கே ஒரு நாயின் குலைப்பு, அங்கே ஒரு பறவையின் கீச்சு—அல்லது கிரீச்சு; அதோ ஒரு வீட்டில் யாரோபாடும் பாட்டு; சிறிதுதூரத்திலே வேலைக்குப் போவோரின் காலடிச்சத்தம்' என்ற கோஷங்களையெல்லாம் தாண்டிப்போகிறான். ஊரைத் தாண்டி வயல்களைத் தாண்டி, மேடும் பள்ளமும் கடந்து, சிரமத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமலே, ஒரு பெரு லட்சியத்தை நோக்கிச்செல்லும் கர்மயோகிபோலச் செல்லுகிறான்.

அதோ கண்டுவிடுகிறான் தன்னுடைய லட்சியத்தைக் கிழவன், பக்தயாத்திரிகன் தன் லட்சியமான திருக்கோயிலை, கோபுரத்தைத் தரிசிப்பதுபோலே.

அந்தக் கட்டடத்தின் அடைத்த கதவு — ஜன்னல்களின் இடைவழியாக மினுக்குமினுக்கென்று மிளிரும் விளக்கொளி கண்டதும் பூரித்துப்போகிறான் கிழவன், ஏழுமலை தாண்டி ஏழுமலையானைக் கண்டு தரிசித்துப் பூரிக்கும் தாசனைப்போலே.

இப்படிக் கிழவன் காணும் கோயில்தான் எது? அந்தக் கட்டடம் கோயில் அல்ல, சாதாரணத் தபால்ஆபீஸ்தான். என்றாலும் கிழவனுக்குக் கோயிலைக்காட்டிலும் ஒரு திவ்ய ஸ்தலம்.

கிழவன் மெள்ளப்போய், வெளிப்பகுதியில் ஒரு பெஞ்சுப் பலகையில் உட்கார்ந்துகொள்கிறான். உள்ளேயிருந்து இருவர் அல்லது மூவர் வழக்கமான தங்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும் சத்தம் காதில் விழுகிறது,—அர்ச்சகர் மந்திர அர்ச்சனைகள் செய்யும் சத்தம்போல.

அங்கே இறைவனுடைய நாமங்களுக்குப் பதில், 'போலீஸ் இன்ஸ்பெக்டர்' 'ஓவர்ஸீர்' 'கிராம முன்சீப்' 'பண்ணைப் பழனியாண்டிமுதலியார்' என்றெல்லாம் நாமாவளி கேட்கிறது. கிழவன் அந்த ஒலிகளில் குலுங்கிக் குலுங்கி அமைதி பெறுகின்றான்!

கடித விலாசங்களை வாசித்துக் குமாஸ்தா தபால்காரனிடம் வீசுகிறான்—'மிராசுதார் வீரபத்திரநாயக்கர்' 'மிட்டாதார் கிட்டப்பவாண்டையார்' 'ராவ்ஸாகிப் ராமசாமிபிள்ளை' என்றெல்லாம். இடையே ஒரு கேலிக்குரல் 'பட்டாளத்து ஜோசப் பாப்பையா நாயுடுகாரு' என்றும். கிழவன் பளிச்சென்று எழுந்து, 'சுவாமீ! கும்பிடு' என்று வானத்திற்கும் தபால்-குமாஸ்தாவுக்கும் நமஸ்காரம் செய்துகொண்டே போய்க் கைநீட்டுகிறான்.

குமாஸ்தாவோ, 'பட்டாணி ரஹீம் ஸாகிப்' என்று மாறிக் கூப்பிட்டுவிட்டு, 'நீதானா அந்தப் பட்டாணி?' என்று கேட்கிறான். அதற்குக் கிழவன், 'பட்டாளத்துப் பாப்பையா என்று என்

பெயரைக் கூப்பிட்டீர்களே, என் கடிதத்தைக் கொடுங்கள்' என்கிறான். குமாஸ்தா போஸ்ட்மாஸ்டரை நோக்கி 'ஸார், வாராத கடிதங்களுக்கு ஒவ்வொரு நாளும் வந்துவந்து பிராணனை வாங்குகிறது இந்தப் பைத்தியம்!' என்று சிரிக்கிறான்.

கிழவன் மெள்ளக் கோலூன்றித் தன் பெஞ்சுக்குத் திரும்புகிறான். இப்படி ஒருநாள் இரண்டு நாளா? ஒருமாதம் இரண்டு மாதமா? ஐந்து நீண்ட வருஷங்களாகக் கிழவன் வந்துவந்து உட்கார்ந்து உட்கார்ந்து தேய்ந்துபோன பெஞ்சுதான்!

பட்டாளத்துப் பாப்பையாவை அந்தக் காலத்தில் தபால் குமாஸ்தா இப்படி நடத்தியிருக்க முடியுமா? போரிலும் வேட்டையிலும் நிபுணனாக இருந்த காலமும் உண்டு. ஆனால் வாழ்க்கையின் அஸ்தமன காலத்திலே அதிசயமாக மாறிப்போய்விட்டான்.

ஏகபுத்திரி பிரியம் மணஞ்செய்துகொண்டு போய்விட்டாள் தன் சிப்பாய்க் கணவனுடன் காஷ்மீரத்திற்கு. சென்ற ஐந்து ஆண்டுகளாக ஒரு செய்தியும் கிடைக்கவில்லை தந்தைக்கு. மகளுக்காகவே உயிர்வாழ்ந்துவந்தான். அன்பும் பிரிவும் இந்த ஐந்து ஆண்டுக்காலத்தில் எவ்வளவு நன்றாய்ப் புரிந்துவிட்டன!

வேட்டையிலும் நாட்டம் இல்லை. 'பறவையுலகிலும் அன்பு உண்டு; தந்தையுண்டு, தாய் உண்டு, புதல்வி உண்டு, பிரிவுத் துயரம் உண்டு' என்றெல்லாம் சிந்தித்தான். கொலைக் கொடுமையை நிந்தித்தான். பாடும் பறவைகளையும், ஆடும் மயில்களையும், பச்சைமரங்களையும் பார்த்துப் பரவசமானான். ஒவ்வொரு நாளும்காலை நாலுமணிக்கு முன்பேஎழுந்து, தபாலாபீஸ் தன்ஊரில் இல்லாமல் அடுத்தஊரில் இருந்ததால், அங்கே போய்வரலானான்.

கடிதம்தான்வரவில்லையேஎன்று ஒருநாள் போகாமல் இருந்ததுண்டா? பனியோ, மழையோ, முதலாவது ஆஜர் பட்டாளத்துப் பாப்பையா நாயுடுகாருதான்! அதே மூலைதான், அதே பெஞ்சுதான்! யார் பரிகசித்தால் என்ன, ஊர் சிரித்தால் என்ன? வெறுங் கையோடு திரும்பினால் என்ன? தன் பெயர் சொல்லிக் குமாஸ்தா கூப்பிட்டதும் கும்பிட்டுக் குதித்தெழுந்து போய்த்திரும்புவான், எல்லையில்லாத நம்பிக்கையுடன், பொறுமையுடன்! அந்த வேடிக்கை பார்க்கவே கூப்பிடுவான் குமாஸ்தா.

பைத்தியத்திலும் பல ரகம் என்று போஸ்ட்ஆபீஸில் பேசிக்கொண்டார்கள் குமாஸ்தாவும் போஸ்ட் மாஸ்டரும். ஒருநாள் எல்லாரும் போனபின் பாப்பையாவும் பெஞ்சிலிருந்து கோலூன்றி எழுந்து தபாலாபீசுக்குத் தாழ்ந்து கும்பிடு போட்டுக் கூனிக் குறுகிப்போனதைக்கண்டதும், வேலை முடிந்ததென்று பேசிக்கொண்ட பேச்சுத்தான் மேலே சொன்ன 'பைத்திய'ப்பேச்சு.

போகட்டும்; அன்றுபோன பாப்பையா பல நாளாகத் தபாலாபீசுக்கு வரவில்லை. கடைசியாக ஒருநாள் மீண்டும் வந்தான். இப்போது மூச்சுவிடுவதே ஒரு போராட்டமாயிருந்தது. இன்று இவனும் பொறுமையிழந்தவன்போல், 'போஸ்ட் மாஸ்டர் சுவாமி என் பிரியம் எழுதிய கடிதம் வந்திருக்கிறதா?' என்றுகேட்டான்.

வந்துவிட்டது கோபம் போஸ்ட்மாஸ்டருக்கு. வெளியே போகிறஅவசரம். 'உனக்குக் கடிதம் வந்தால் கடித்துத் தின்றுவிடுவோமா? போ, போ' என்று எரிந்துவிழுந்துகொண்டே போய்விட்டார். பாப்பையா கண்ணீர் வழியும் முகத்துடன், 'சுவாமி!

மன்னிக்கவேணும்' என்று அவர் போன திசையை நோக்கியும், வானத்தை நோக்கியும் ஒரு கும்பிடு போட்டான்.

தன்னை அடிக்கடி கூப்பிட்டுப் பரிகசித்த குமாஸ்தாவிடம் ஒரு பழைய தகரடப்பியிலிருந்து ஐந்து பவுனை எடுத்துக்கொடுத்து, 'இந்தப் பணம் இனி எனக்குப் பயன்படாது தம்பி! உனக்கு உபயோகமாயிருக்கும். ஆனால் நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேணும்' என்றான்.

'என்ன?' என்று அவன் கேட்கக் கிழவன் வானத்தைக் காட்டி 'அதோ அங்கே என்ன பார்க்கிறாய்?' என்று கேட்டான். 'வானம்' என்று குமாஸ்தா பதில் சொல்ல, 'அங்கே நமக்கெல்லாம் படியளக்கும் பரமன் இருக்கிறார். அவர் முன்னிலையில் நான் இந்தப் பணத்தை உன்னிடம் கொடுக்கிறேன். என் பிரியமான பிரியத்தின் கடிதம் வந்ததும் எனக்கு அனுப்பிவைக்க வேணும்' என்றான்.

'எங்கே ஐயா!' என்றான் குமாஸ்தா ஆச்சரியத்துடன்.

'என் சமாதிக்கு!'

'என்ன?'

'ஆமாம்; உண்மை; அங்கேதான். இன்று என் கடைசிநாள். என் பிரியத்தின் கடிதம் இன்னும் வரவில்லை!' என்றான் ஜோசப் பாப்பையா கண்ணீர் வழியத் தழதழத்த குரலில்.

குமாஸ்தா இப்போது பரிகசிக்கத் துணியாமல் பரவசக் குரலில் 'நமஸ்காரம்' சொல்லித் தன்சட்டைப் பைக்குள்ளே ஐந்து தங்கநாணயங்களையும் போட்டுக்கொண்டுபோனான். அப்பால் பாப்பையாவைப் பார்த்தவர்கள் இல்லை.

இப்படியிருக்க ஒருசமயம் போஸ்ட்மாஸ்டர் தம் மகள் தூரத்திலுள்ள வேறொரு பட்டணத்தில் நோயுற்றிருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தார். அவளைப்பற்றிய செய்தியை எதிர்பார்த்தவராய்க் கவலையுடன் தபால் குவியல்களைப் பல தினங்களாக நோக்கிக் கொண்டிருந்தார். தாம் எதிர்பார்த்த நிறமும் வடிவமும் உள்ள கவர் ஒன்றைக் கண்ணுற்றதும் வெகு ஆவலாய் அதைப் பிரிக்கப் போனார். 'பட்டாளம் ஜோசப் பாப்பையா நாயுடுகாரு' என்ற விலாசம் கண்டதும் அப்படியே போட்டுவிட்டார் கடிதத்தை, ஏதோ ஒரு மின்சார 'ஷாக்' அடித்ததுபோலே!

'லட்சுமணதாஸ்' என்று கூப்பிட்டார். பாப்பையாவிடம் பணம்பெற்றுக்கொண்டிருந்த குமாஸ்தா ஓடிவந்தான்.

'உன் கிழவனார்—பாப்பையாவுக்குத்தான் இந்தக் கடிதம்! அந்தக் கிழவனாரின் பிரிய மகளான பிரியத்தின் பிரியமான கடிதமாகத் தானிருக்கவேணும். பாவம், எவ்வளவு காலமாக எதிர்பார்த்து வந்தார் இதை அவர்!' என்றார் போஸ்ட்மாஸ்டர். பாப்பையாவின் இருதயம் இப்போது புரிந்தது போஸ்ட்மாஸ்டருக்கு.

'நான் கண்டுபிடித்துக் கொடுக்கிறேன், ஸார்' என்றான் குமாஸ்தா தாஸ். அன்றெல்லாம் போஸ்ட்மாஸ்டருக்கு அவர்எதிர்பார்த்த கடிதம் கிடைக்கவில்லை. இரவெல்லாம் உறக்கம் இல்லை. மூன்றுமணிக்கே எழுந்து ஆபீசில் போய்உட்கார்ந்துகொண்டார்.

'பாப்பையா வந்துகொண்டிருந்த வழக்கம்போல் அதிகாலையில் வந்தால் அந்தக் கடிதத்தை நானே கையில் கொடுப்பேன்' என்று தீர்மானித்தார்.

ஓர் இரவு கண்ணுறங்காமல் மகளையே நினைத்துக்கொண்டு அவளுடைய க்ஷேமசமாசாரத்தை எதிர்நோக்கியிருந்தவர், 'அந்த ஏழைக் கிழவனர் ஐந்தாண்டின் இரவுகளையும் இப்படித்தானே கழித்திருப்பார்!' என்று எண்ணமிடலானர். இந்த இருதயத்தி லிருந்து பொங்கிய அனுதாபம் அந்த இருதயத்தையும் எட்டித் தொட்டுப்பிடிக்க முயன்றது.

காலை ஐந்துமணி அடித்ததும் கதவை யாரோ மெள்ளத் தட்டுவது போலிருந்தது. 'வேறு யாராயிருக்கமுடியும்? பாப் பையாதான்' என்று நிச்சயித்துவிட்டார். நாற்காலியிலிருந்து விரைந்து எழுந்தார். புதல்வியை நினைத்து வருந்திய தந்தையுள் ளம் அதே நிலையிலுள்ள தந்தையுள்ளத்தைச் சந்திக்க ஆத்திரப் பட்டது. கதவை அகலத் திறந்து, 'வாரும், வாரும் பாப்பையா அண்ணு! உள்ளே வாரும்' என்று சாந்தமே வடிவாகத் தோன் றிய கிழவனிடம் கடிதத்தைக்கொடுத்தார்.

பாப்பையா வெளியே நின்றுகொண்டிருந்தான், ஊன்று கோலில் சாய்ந்தவண்ணம். கண்ணீர் நனைத்திருந்தது முகத்தை. அந்த முகத்திலே வயதும் கவலையும் சேர்ந்து கிழித்திருந்த கோடு களைத்தான் போஸ்ட்மாஸ்டர் இதற்குமுன் கண்டிருந்தார். இப் போதோ அந்தக் கண்களைப்பார்த்து ஆச்சரியப்பட்டார். சற்றுப் பின்வாங்கிநின்று, 'அந்தமுகத்திலேதான் என்ன அன்பு, என்ன ஆர்வம்!' என்று பிரமித்தார்.

போஸ்ட்மாஸ்டர் பாப்பையாவைநோக்கிச்சொன்ன வார்த்தை ஆபீசுக்கு வந்துகொண்டிருந்த லட்சுமணதாஸின் காதில் விழுந் தது. கண்களை அகலவிரித்து அந்த வாசலையே பார்த்துத் திகைத்துக் கொண்டிருந்த அதிகாரியைக் குமாஸ்தா நோக்கினன்.

'அவர் எங்கே போய்விட்டார்?'

'எங்கேதான் போயிருக்க முடியும்? இப்போது தானே அவ ருடன் பேசிக்கொண்டிருந்தேன்!'

விஷயம்தெரிந்துகொண்டதும்லட்சுமணதாஸ்,'ஸார்,கிழவனர் காலஞ்சென்றுர். அந்தக் கடிதத்தை இங்கே கொடுங்கள் ஸார்'

'என்ன! எப்போது? நிஜமா லட்சுமண தாஸ்?'

'ஆம்! செத்துப்போய் மூன்றுமாசம் ஆகிறது' என்றுன், அப்போதுதான் அங்கே வந்து சேர்ந்த தபால்காரன்.

திகைத்துத் திக்பிரமை கொண்டார் போஸ்ட்மாஸ்டர். கடிதம் கதவண்டைதான் கிடக்கிறது. கதவைத்தட்டியதும் பொய்யா?

தபாலாபீசின் தினசரி நியமம் நடந்து தீரவேணுமே. லட்சு மணதாஸ் உரக்கவாசிக்கிறுன் விலாசங்களை; ஆனல் போஸ்ட் மாஸ்டருக்குகார்டுகளும் கவர்களுமா தோன்றுகின்றன? மனுஷ்ய இருதயங்கள் துடிக்கின்றன,துள்ளுகின்றன ஜீவஉஷ்ணத்துடன்! அன்றுமாலை போஸ்ட்மாஸ்டரும் லட்சுமணதாஸும் ஜோஸப் பாப்பையாவின் சமாதியைத்தேடிப்பிடித்துக் கடிதத்தை அதன் மீது வைத்தார்கள், பயபக்தியுடன் பூவையோ பூமாலையையோ வைப்பதுபோல.

அன்றிரவும் போஸ்ட்மாஸ்டர் கண்ணுறங்காமல் கடவுளைத் தொழுதவண்ணம் தம் அருமைத் திருமகளின் க்ஷேமச்செய்தியை எதிர்நோக்கியிருந்தார்.

## கடவுளை நம்பு

அன்ப,

எம்பெருமான் அந்தர்யாமியாயிருந்து உன்னை நாள்தோறும் பக்குவப்படுத்துகிருன். மூன்றுண்டுகளுக்குமுன் உனது நிலைமை என்ன? இன்று எப்படி? யோசி. இப்படியே மனம் பக்குவமாகி மேன்மேலும் வழி துலங்கும். இறைவன் வைத்த இடத்தில் வாழ் அவன் உன் அந்தக்கரணத்தைப் பார்க்கிருன்.

அந்தரங்க சுத்தியுடன் அகம்பாவமில்லாமல் மதுரகவி ஆழ்வார் சடகோபருக்குத் தொண்டுசெய்ததுபோல் தொண்டுசெய்.

உலகில் கோள், பொய், வஞ்சம், சுயநலம், திருட்டு,பாசாங்கு, காமம், பொருமை—எத்தனையோ கசண்டுகள் நிரம்பிக் கிடக்கின்றன. நாற்பது வருஷம் மூலையில் போட்ட செம்பு, களிம்பு பிடித்துப் பாசியேறிப் போகிறது. அதைத் தீயில் வாட்டி,புளியில் ஊறவைத்து, கரகரவென்று நாரும் செங்கற்பொடியும் போட்டுத் தேய்த்தல்லவா சுத்தம்செய்யவேண்டும்? மனிதர் படுந்துன்பமெல்லாம் திருவருள் வெள்ளாவி வைத்து அந்தக்கரணசுத்தி செய்வதுதான். ஆதலால் திருவிளையாடல்களை நாடகம்போலப் பார். ஒழிவதெல்லாம் அழிவது; எல்லாம் நன்மைக்கே. உன் கடமையை ஆராதனையாகச்செய்.

ஒவ்வொருவருக்கும் இன்பதுன்பங்கள் அளந்து வைத்திருக்கும். எதிலும் பட்டுக்கொள்ளாமல் இறைவனையே பற்றி நிற்பவனே பாக்கியவான். நிம்மதியாயிரு; எல்லாம் நாளடைவில் அவன் செயலால் நடக்கும். கலங்காதே—கடவுளை நம்பு.

## ஜபம் செய்.

அன்ப,

அருளோங்குக! அன்பு என்னும் பொருள் உலகளாவியது! அஃது அகங்காரம் இல்லாத உள்ளத்தில் ஊறும் அமுதம். அது கிடைத்துவிட்டால் நான், நீ, அவன், அவள், என் சாதி, உன் சாதி என்ற பேதமின்றிச் சிறு துரும்பையும் இமாலயம்போல் மதித்துக் கௌரவப்படுத்தி வாழலாம். ஆ! ஒவ்வொன்றிலும் திருவருள் செய்யும் அற்புதத்தைக்கண்டால்எதையும் அவமதிக்கவோ, நான், எனது என்று செருக்காடவோ மனிதனுக்குத் தோன்றுது.

உலகில் வரும் துக்கங்களை யெல்லாம் பக்குவச் சம்மட்டியடிகள் என்று தாங்குக. இதற்கு எத்தனையோ திருவருட் பூசை விழுந்தது. இலட்சம் இழந்தாலும் அருளைவிடாது பற்றிக் கொண்டதால் இலட்சியம் நிறைவேறியது. உலகைக் கண்டு கலங்காதே. உன்னை யறி—உள்ளேயிரு.

மந்திரமிளகை ஒரு சீசாவில் போட்டுவைத்துக் காலையில் பல் விளக்கி அனுட்டானம் முடித்து ஐந்து மிளகு மென்று நன்னீர் குடித்து வருக. உடனே ஜபமாலையில் ஒரு சுற்று சுத்த சக்தி ஜபம் செய்து அலுவலைக் கவனிக்கவும். பசி கண்டதும் சுசி ருசியாகச் சாப்பிடலாம்.

---

சிறுகதை ஒரு பெருங் கலைக்கடலாகப் பெருகிக்கொண்டிருக்கிறது. இதன் ஒரு சிற்றலையைச் சென்றமாதம் பார்த்தோம். வேருெரு சிற்றலை இது. கௌரீசங்கர் ஜோஷி என்ற வட இந்திய எழுத்தாளரின் சிருஷ்டி இது.

உள்ளன்பு எல்லாரிடமும் இருக்கட்டும்; வெளியுறவு அவரவர் இயல்பறிந்து. ஆன்ம உறவே உறவு. உதட்டு நேசம் உதவாக்கரை. உள்ளான்மநேயமே உண்மை நேயம்.

## உலகை அஞ்சாதே

அன்பனே,

உலகை அஞ்சாதே; கலங்காதே. எது வந்தாலும் நல்லது தான். என் வாழ்வில் எனக்குக் கிடைத்த லாபத்தைவிட நான் அடைந்த நஷ்டத்தினாலேதான் ஆத்மலாபம் அதிகமானது. வழிதப்பிச்செல்லும் குதிரையை லகானைச் சுண்டியிழுத்து ஒரு சவுக்கடி தந்து திருப்புவதுபோல், இறைவன், நான் சிறிது வழி தவறினாலும் கடுமையாகத் தண்டித்து என்னைத் திருத்தினான். உலகில் மனிதன் பணத்தில் புரளுமட்டும், சிற்றின்பத்தில் கொட்டமடிக்குமட்டும் ஆண்டவனையோ, ஆத்ம சுத்தியையோ நினைப்பதேயில்லை. இடர்கள் வரும்போதுதான் ஆணவத்திற்கு ஒரு அடிவிழுகிறது. ஆன்மா ஆண்டவனை முறையிட்டு அழைக்கிறது. துன்பம் வரும்போது கலங்காதே. ஒவ்வொரு துன்பமும் மனதைப் பக்குவப்படுத்தி, சுங்கானைத் திருப்பி, இறைவனிடம் உன்னைச் சேர்ப்பதற்கே வழியாகும். திருவருட் சோதனையை அறி. முன்னினும் உறுதியாக அன்புசெய். சோதனையின்றிச் சாதனையில்லை. எல்லாம் நன்மைக்கே.


### வை. மு. கோ நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4–8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2–8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்

ரூ. 2–4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை

ரூ. 1–8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை

ரூ. 1–4
கோபாலரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்

ரூ. 1–2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்

மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்

அணா. 8
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி

அணா. 6.
உளுத்த இதயம்

### வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1–4.
2. மதமா, மனமா? 1–4.
3. அவசரமூர்த்தியின் அபூர்வடயரி 1–8
4. ராணி சீலாவதி 1–0

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
காந்தி கீர்த்தனம்
கிளேஸ் பதிப்பு. ரூ.3-8.

ப்ர.ப.அண்ணங்கராசாரியர்
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்
உரையுடன் ரூ. 1.




## உத்யோக உயர்வும்—நாகரீக உயர்வும்

"உலகத்தின் போக்கும் அதில் காணும் புதியபுதிய நாகரீகங்களின் ஆனந்தமும், காலம் நாளுக்குநாள் மாறிச் செல்லும் அதிசயமும் நீ என்றுதான் உணர்ந்து அதில் மனத்தைலயிக் கச்செய்து நடக்கப்போகிறாய்? சுகுணா! இதோ பாரு. இனி நீ இம்மாதிரி இருப்பது எனக்குச் சற்றும் பிடிக்க

வில்லை. நல்லஷோக்காக அலங்காரம்செய்துகொண்டு நான் போகும் டீபார்ட்டி, டின்னர்பார்ட்டி முதலியவற்றிற்கும் வர வேண்டும். கர்னாடகம்போல் இந்தவேஷத்தைப்பார்க்க எனக்குக் கோபம் வருகிறது. எனக்கு உத்யோக உயர்வு உனக்குத் தெரியாதா? ஒரு ஜட்ஜின் மனைவி இப்படியா இருப்பது? இதை நீயாக உணராவிடினும், பல பெரியமனிதர்கள் வீட்டுப் பெண்மணிகளைப்பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டாமா! முதலில் தலையில் அழகான பிச்சோடாவும் புஷ்பவளேவும், விதவிதமான புடவைகளும் முன்குசவான்வைத்த மாம்பழக் கட்டும் நெத்தியில் சிறிய ஜவ்வாதுப் பொட்டும் அப்படி! ஜில்லென்று இருக்கவேண்டும்...தெரிந்ததா!"...என்று ஜட்ஜ் துரைராஜன் கர்னாடகமாய்நிற்கும் தன் மனைவியைப்பார்த்துக் கூறி, உபதேசம் செய்தார்.

இதைக்கேட்டுக் கடகடவென்று சுகுணா சிரித்தபடியே... "சுமார் நாற்பது வயதுக்கு எட்டிப்பார்க்கும் சமயம் காதை மறைத்தும் கழுத்தில் தொங்கியும் தலையை வாரிய பிச்சோடாவும் 'யூனிபாரம்' ஒரேகலர்ப்புடவை ரவிக்கை முதலிய பல நூதன அலங்காரங்களுடனும் இனிநான் சிங்காரியாய்நிற்கவா நீங்கள் ஆசைப்படுகிறீர்கள்?"......எனக்கு அந்த நாகரீகக் கோலம் சற்றும் பிடிக்கவில்லை......

துரை:—சரிதான். அசட்டுத்தனமாய்ப் பேசாதே. என்னுடன் நீ கட்டாயம் டின்னருக்கு வரத்தான் வேணும். நான் விரும்புகிறபடி அலங்காரத்தைச் செய்துகொண்டுதான் ஆக வேண்டும். சுகுணா! என்ன இது? ஏதோமாதிரி அசட்டுப் பிசட்டென்று விழிக்கிறாய்? நான் சொல்வது உனக்குப் பிடிக்கவில்லையா!

சுகுணா:—ஐயோ! நான் அப்படிச் சொல்லவில்லை. உத்யோக உயர்வு தங்களுக்கேயன்றி என் சிங்காரத்திற்கல்லவே. அதோடு நீங்கள் டின்னருக்குப்போகும் இடத்திற்கெல்லாம் நான் வருவது உசிதமேயல்ல. யார்யாரோ முன்பின் தெரியாதவர்கள் வீட்டிலெல்லாம் நான்...

துரை:—இதோ பார் சுகுணா! நான் எதைச்சொன்னாலும் நீ தட்டாது செய்துதான் ஆகவேண்டும். எனக்கு உத்யோகம் உயர்ந்தால் உன் அந்தஸ்தும் அலங்காரமும் தானே உயர்கின்றன. வீணாகப் பயித்தியக்காரப் பிடிவாதம் செய்யாதே. முன்பின் தெரியாவிட்டால் அவர்களைத் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் வேண்டுமல்லவா?

சுகுணா:—ஆகா! பேஷாய் வேணும். உங்களுக்கு உத்யோகம் உயர்ந்ததற்காக நீங்கள் எல்லோரையும் கூட்டி நம் வீட்டில் விருந்துவைத்தால் நாம் ஒருவரையொருவர் சந்திக்கிறோம்; அல்லது நம் குழந்தைகளின் பிறந்த நாளையோ அல்லது ஏதாவதொரு சாக்கைவைத்து நீங்கள் ஏன்...

துரை:—சரி! சரி! நீ வேண்டுமென்று இம்மாதிரி வீண் பிடிவாதம் செய்கிறாய். இது எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இந்த உயர்ந்த ஜார்ஜெட்டுப் புடவை இப்போதுதான் வாங்கி வந்தேன். நான் வெளியில்போய் சரியாக 5 மணிக்கு வந்து விடுகிறேன். அதற்குள் இப்புடவையுடன் நீ அலங்காரவதியாய், நூதனராணியாய், ஜட்ஜ் மனைவியாய் சந்தோஷமாகக் காட்சியளிக்கவேண்டும்.

சுகு:—நீங்கள் இதுவிஷயத்தில் வீண்பிடிவாதம்செய்வது சரியாயில்லை. இத்தனை வயதுகழித்து உடம்பெல்லாம் தெரியும் இந்த ஜார்ஜட்டும், ஸார்ஜண்டும் எப்படி உடுக்கமுடியும்? அதோடு வீட்டில் குழந்தைகளைவிட்டுவிட்டு நாம் சின்ன குழந்தைகள்மாதிரி "கன்றைவிட்டுக் கல்யாணம்போனாளாம்" என்கிறதுபோல் போவதா?...

துரை:—சேச்சே!...குழந்தைகளை இழுத்துக்கொண்டு குறவனாட்டம் விருந்துக்குப் போவதாவது? அநாகரீகம்! வீட்டில் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்; பார்த்துக்கொள்கிறார்கள். உன்னைப்போன்ற ஒரு பெண்மணிதானே மிஸஸ் தீனதயாளு? அவள் எப்படி சதா அவனுடன் சுற்றுகிறாள். அவளுக்கு மட்டும் வீட்டில் குழந்தைகள் இல்லையா?...உன்னைவிடச் சிறியவளா? இன்னும் கேட்டால் இரண்டுவயது பெரியவளாய்க்கூட இருப்பாள். அதோடு அவள் லேடீஸ்கிளப்பில் தலைவியாய் இருந்து என்ன ஆட்டங்கள் ஆடி ஜெயிக்கிறாள்? அங்கு பார்ட்டீ, இங்கு மீட்டிங்கு என்று ப்ரதிதினமும் அந்த அம்மாளின் பெயர் பத்ரிகையில் வராமலிருப்பதேகிடையாது ...இதோ பாரு சுகுணா! உன்னையும் அதேமாதிரி நான் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுவதால் நீ கட்டாயம் இன்று என் விருப்பப்படி தயாராகவேண்டும்; இல்லாவிட்டால் எனக்கு விபரீதமாய்க் கோபம்வரும்...என்று சற்று கனத்த குரலில் அழுத்தமாகவே சொல்லிவிட்டுப்போய்விட்டார்.

சுகுணாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தன் கணவருக்கு ஏன் திடீரென்று இத்தகைய புத்தியும் ஆசையும் வந்திருக்கிறது என்று அவளுக்குச்சற்று வெறுப்பாகக்கூடத்தோன்றியது. அந்தப் புடவையைப் பிரித்துப்பார்த்தாள். காணச்சகிக்கவில்லை. "வெறும் கண்காக்ஷிச் சேலையேயன்றிவேறில்லை. இதையா நான் உடுப்பது...இதென்ன விகாரம்...ராம ராம! உயர்ந்த வேலை ஆகிவிட்ட பெருமையில் இழிந்த ஆசையா மனத்தில் உதயமாகவேண்டும்?" என்று இதைப் பிரித்துப் பார்த்துக்கொண்டு நிற்கையில் பள்ளிக்கூடத்திலிருந்து இவர்களுடைய மூத்தமகள் மாலதி வந்தாள்.

தன் தாயார் இத்தகைய சினிமாப்புடவையை வைத்துக்கொண்டு நிற்பதைக்கண்டு ஒருவிதமான வியப்புடன் "இது ஏதம்மா...யார் புடவை இது? ஐய்யப்போ!...இத்தனை மெலிசாயிருக்கிறதே!"...என்று அதை வாங்கிப்பார்த்தாள்.

சுகு:—மாலதீ!...உங்கப்பா இன்று இதை எனக்காக வாங்கிக்கொண்டுவந்திருக்கிறாராம். இதை நான் கட்டிக்கொண்டு சினிமாநட்சத்திரம்போல அவருடன்போகணுமாம்.

மாலதி:—என்ன! என்ன!...நீ கட்டிக்கொள்ளவேண்டுமா? ...பேஷ்பேஷ்...வெகு நன்றாயிருக்கிறது நீ சின்னக் குழந்தையாம்மா?...ஏன் எனக்குக்கூட இந்தமாதிரி துணிகளே பிடிக்காதே...போம்மா...இதொன்றும் வேண்டாம். அப்பா வந்தால் நான் சொல்கிறேன்...டிபன்கொடும்மா...என்று குதித்தவாறு குழாயருகில் ஓடினாள்.

இதற்குள் மற்ற குழந்தைகளும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தார்கள். சுகுணா எல்லோருக்கும் ஆகாரங்கொடுத்துத் தலைவாரிப்பின்னி நெத்திக்கிட்டு உடைமாற்றிப் பின் அவர்களை விளையாடஅனுப்பிவிட்டுத் தான் அலங்காரம் செய்துகொள்ளத் தொடங்கினாள். தன் கணவன் சொல்லியபடியெல்லாம் அலங்காரத்தைச் செய்துகொண்டு கண்ணாடியில் பார்த்தாள். அவள் மனத்திற்குச் சற்றும் பிடிக்கவில்லை. அந்த சேலையைக் கட்டிக்கொண்டதில் அவள் சரீரத்தில் சேலை இருப்பதாகவே தோன்றாமல் தாங்கமுடியாத கூச்சத்தையும் வெட்கத்தையும் கொடுத்ததால் உடனே அதைமாற்றி வேறு சற்று கௌரவமான சேலையை உடுத்திக்கொண்டாள்.

இந்த பிச்சோடாவும் மற்ற அலங்காரமும் அவளுக்குத் தலைவேதனையைக்கொடுத்ததால் எப்போதும்போல்சாதாரண அலங்காரத்துடன் தயாரானாள். இதற்குள் பால்கறக்கிறவன் வந்தான். வழக்கம்போல் பக்கத்திலிருந்து பசுமாடுகளுக்கு தீனியை வைக்கச்செய்துபாலைக்கறந்து வாங்கி, ஸ்வாமிக்கு விளக்கேற்றி கறந்தபாலைநைவேத்யம் செய்துஅதைத் தானே காய்ச்சி மூடிவைத்துவிட்டுக் கிளம்புவதற்குள். துரைராஜ் வந்துவிட்டார். அவர் வெகு நாகரீகமாய் ஹாட்டும் ஸூட்டுமாய் ட்ரெஸ்செய்துகொண்டு. "சுகுணா! ரெடியா?" என்று பெரியகுரல் கொடுத்தார்.

இதற்குள் மாலதி ஓடிவந்து "அப்பா! நீ வாங்கிக்கொண்டு வந்திருக்கும் புடவை...என்று ஆரம்பித்தவுடனே...வெகு சந்தோஷத்துடன் துரைராஜ் "உனக்கு ரொம்ப பிடிக்கிறதாம்மா?...உனக்கும் ஒன்று வாங்கித்தருகிறேன். இதே கலர் வேணுமா; வேறு கலர்...மாலதி இடைமறித்து 'சேச்சே!... இதென்ன புடவை அப்பா! எனக்குக்கொஞ்சங்கூடப் பிடிக்கவேஇல்லை. இந்தமாதிரி ஆபாஸப்புடவையை அம்மா எப்படியப்பா கட்டிக்கொள்வா? பார்க்கிறவர்கள் சிரிப்பார்களேப்பா...

துரை:—(சற்றுகோபத்துடன்) சீச்சீ! அதிகப்ரஸங்கி! நாகரீகமான சேலையைப்பார்த்தா சிரிப்பார்கள்?...உங்கம்மா கட்டிக்கொள்ளும் கருடவாகன வேஷ்டிபோன்ற சேலையைப் பார்த்துத்தான் சிரிப்பார்கள். சரி! சரி! உன்னை நான்

யோசனை கேட்கவில்லை. நாத்துப்பாட்டிபோல் நீ பேசாதே! அம்மாவைக்கூப்பிடு...சுகுணு...சுகுணு நாழியாகிவிட்டதே. சரியாய் 5–30 மணி என்ருல் அப்படியே போகவேண்டாமா?...

சுகு:—இதோவந்துவிட்டேன். சின்ன குழந்தைக்குப்பால் போட்டி தாதியிடம் கொடுத்துவிட்டு வருகிறேன்.

துரை:—இதென்ன ந்யூஸன்ஸ்?..தாதியேபாலையும்போட் டும்படிச் சொல்வதற்கென்ன? நீ தான் போட்டவேண்டுமோ?...

சுகு:—குழந்தையின் வயிறறிந்து அவள் போட்டமாட் டாள். அதோடு நானே போட்டினுல்தான் எனக்கு த்ருப்தி. இந்த பத்து நிமிஷத்தில் என்னவாகிவிடும் ? இதோ வந்துவிட் டேன்...என்று போட்டி, தாதியிடம் குழந்தையைக்கொடுத்து விட்டு வந்தாள்.

தான் கொடுத்த சேலையைத்தான் சுகுணு கட்டிக்கொண் டிருப்பாள் என்று எண்ணியதற்கு மாருக எப்போதும் போல் சாதாரண கொள்ளேகாலப்பட்டுப்புடவையே கட்டி யிருந்ததையும் தலையை சாதாரணமாய்ப்பின்னி ரவுண்டுகொட்டு கட்டியிருப்பதையும் பார்த்த துரைராஜனுக்கு ப்ரமாதமாய் கோபம் வந்துவிட்டது. இதென்ன வேஷம் சுகுணு? என்னை அவமானப்படுத்துவதற்காகவா நீ இப்படிச்செய்கிருய்?... நான் சொல்லியது உனக்கு உறைக்கவில்லையா?'' என்று பெரி தாகக்கத்தினர்.

சுகு:—(மிகுந்த வணக்கத்துடன்) இதுவிஷயத்தில் என்னை மன்னிக்கவேண்டும். உங்களுக்கு இந்தஅலங்காரம் பிடிக்கவில்லை என்ருல், தயவுசெய்து என்னை விட்டுவிட்டு நீங்கள்மட்டும் போய் விருந்து நடந்திவிட்டுவாருங்கள்... எனக்கு அந்த புடவை கொஞ்சமும் பிடிக்கவில்லை.

துரை:—சுகுணு! இது உன்னிஷ்டமா என்னிஷ்டமா! கணவனின் சொல்லுக்கு அடங்கி நடப்பவள்தான் மனைவி. அவனுடைய சந்தோஷந்தான் தன்னுடைய வாழ்வுக்கு ஆதா ரம். கணவன் மனங்கோணினுல் அது மிகுந்த பாவமாகும்... என்றெல்லாம் நீ உன் தங்கைக்கு நீண்டகடிதமெழுதிப் புத்தி சொன்னதை மறந்துவிட்டாயா! நீ சொல்வதொன்று செய்வதொன்ரு? "படிப்பது பகவத்கீதை இடிப்பது பெரு மாள்கோவில்" என்று வசனம் சொல்வார்களே. அதை நீ அனுஷ்டித்துக்காட்டுகிருயா?...அல்லது சிலபேர்கள் பகவத் கீதையை ப்ரமாத பக்தி ச்ரத்தையுடன் படித்துக்கொண்டே நடத்தையில் அதிலுள்ள கருத்துக்கு நேர்விரோதமாய்ப் பிறரைப்பழிப்பதும் தூற்றுவதும்விரோதித்துக்கொள்வதும் வீணுகத் திட்டி ஆத்திரப்படுவதுமாக நடக்கிருர்களே. அம் முறையில் நீயும் நடக்கக்கற்றுவிட்டாயா என்ன.?...இந்த வீண் சால்ஜாப்புக்கு இப்போது நேரமில்லை. உடனே போய் நான் சொல்லியபடி வந்துதான் ஆகவேண்டும்...உம்...நேர மாகிவிட்டது...

சுகுணாவுக்கு தர்மசங்கடமான நிலைமை உண்டாகிவிட்டது. அவளுடைய உள்ளத்தில் கணவனே தெய்வம் என்று பரிபூரணமாக நம்பி இருப்பது பகவானுக்கே அர்ப்பணம். எனினும் மிகவும் கேவலமான அலங்காரத்தைச் செய்து கொள்ள மனது பிடிக்காமல் குழம்பினாள். எனினும் முரட்டு சுபாவமுடைய மனிதனுகையால் உள்ளூறப் பயம் நடுக்கியது. தன் மனத்திற்கும் பிடிக்காமலேயே வெறுப்புடன் அவன் பிரியப்படும் அலங்காரத்துடன் வந்துநின்றாள்.

மாலதி கைதட்டிப் பரிகாசம்செய்து, "பேஷ்! அம்மா! உன்னைப்பார்த்தால் இப்போது ஒரு ஜட்ஜின் மனைவி என்று கண்ணியமாகச் சொல்லமாட்டார்கள். சினிமா நட்சத்திரம் என்றுதான் சொல்லிப் பரிகசிப்பார்கள். இதென்ன புடவை? இதென்ன வேஷம்?" என்று சிரித்தாள். சுகுணாவின் முகத்தில் சிரித்த களையே மாறி வேஷம் போட்டுக்கொண்டிருக்கிற உணர்ச்சியின் வெட்கம் பிடுங்கித்தின்றது. துரைராஜனுக்கோ முகம் மலர்ந்து, வாயே பிளந்துவிட்டது. "பேஷ்... சுகுணா! ஜில்ஜில் ராஜாத்தியைப்போலிருக்கிறாய். உம்...வா..." என்று முதுகில் தட்டிக்கொடுத்தார். நாணிக்கோணிக் கூசியபடியே சுகுணா அக்கம்பக்கம் தன்னைப் பார்க்காதபடி தடதடவென்று ஓட்டமாகச் சென்று வண்டியில் ஏறினாள். காரும் பறந்தது.

---

## 2

### விருந்தின் பலனும் — வீட்டின் நிலையும்

பெரிய அழகான ஒரு தோட்டத்தில் ஏராளமான மனிதர்கள் இவர்களுடைய வரவுக்காகக் காத்திருந்தார்கள். தம்பதிகள்வந்திறங்கியதும் ஜட்ஜை கைகுலுக்கிவரவேற்றனர். சுகுணாவையும் சிலர் கைகுலுக்க நீட்டினார்கள். இந்தமாதிரி கூட்டங்களையோ கைகுலுக்கல்களையோ பார்த்திராத சுகுணாவின் சரீரம் நடுங்கியது. இதயத்தில் ஏதோ செய்து, உடம்பு கூசுகிறது. இருகைகளையும் கூப்பிக்கொண்டு யந்திரப்பாவை போல் கணவனின் நிழலில் ஒதுங்கிஒதுங்கிநடக்கிறாள். முகத்தில் அசட்டுக்களை சொட்டுகிறதேயன்றி சுறுசுறுப்பே காணவில்லை.

"சுகுணா! இவர்தான் கலெக்டர் கந்தர்வாவ்...இவர் அவருடைய மனைவி காமதேனு கந்தர்வ்......இவர்தான் ஐ. ஸி. எஸ். வர்மா...இவர் மிஸஸ் வர்மா...இதோ இவர்தான் மாஜிஸ்த்ரேட் மகம்மதுல்லா...மிஸஸ்முகமத் இவர்" என்று தம்பதிகளைத் தன் மனைவிக்கு அறிமுகம்செய்தவாறு தன் மனைவியையும அவர்களுக்கு அறிமுகம் செய்கிறார்.

மேலே சொல்லிய தம்பதிகளைப்பார்த்து சுகுணா ப்ரமித்துவிட்டாள். தான் கட்டியிருக்கும் கண்காக்ஷிச்சேலையைக்கண்டு இவள் சரீரம் கூசி நடுங்குகிறது. இதைவிட ஸஹஸ்ரநாமசத

நேத்ரசேலையைக்கட்டிக்கொண்டு ஒரு சிறிதும் அச்சமோ, கூச்சமோ இல்லாமல் உதட்டிலும் நகங்களிலும் சிகப்புச் சாயத்தை ஏற்றிக்கொண்டு தலையை பாப் செய்துகொண்டு கரள்கரளாக வளைத்து வாரிக்கொண்டும், காதில் அர்த்த மில்லாது பெரிய தோசைக்கல்போன்றும், மீன்போன்றும் ஏரோப்ளேன்போன்றும் முகத்தின் இயற்கையழகைக் கெடுத்துக் குட்டிச்சுவரடிக்கும்முறையில் மாட்டிக்கொண்டும் எல்லோரிடமும் கைகுலுக்கி தஸ்புஸ் என்று இங்கிலீஷிலேயே பேசிக் கும்மாளமடிப்பதைக்கண்டு உண்மையில் சுகுணா நடு நடுங்கி இந்த வெட்கக்கேடான அலங்காரங்களை வெறுத்தாள்.

சுகுணாவும் S. S. L. C. பாஸ் செய்தவள்தான். ஆங்கிலம் படிக்கவும் பேசவும் தெரிந்தவள்தான். எனினும் இந்த மாதிரியான போக்கை அவள் மனது விரும்பவே இல்லை. உலகம் பலவிதம் என்பதையும், நாகரீகத்தின் விபரீத வளர்ச்சியில் பழமையான நாகரீகமும் அதன் பெருமையும் எவ்வளவு தூரம் மங்கி மறைந்துவிட்டதுஎன்பதையும்பார்த்து எண்ணி எண்ணி தனக்குள் பெருமூச்சுவிட்டு வியக்கின்றாளேயன்றி அவர்களிடம் கலகலப்பாய்ப் பேசுவதற்கே தோன்றவில்லை.

"ஒருதனிப்பட்ட உத்யோகஸ்தனுக்கு உயர்ந்த வேலையாயிற்று என்றால் அதைப்பாராட்டுவதற்கு இத்தனை பெண்மணிகளா கூடியிருக்கிறார்கள்? இவர்களுக்கும் அந்த உத்யோகஸ்தருக்கும் என்ன சம்மந்தம்...எதற்காக இத்தனை பெரிய செலவில் அனாவச்யமான விருந்து நடக்கவேண்டும்?" என்ற விஷயங்களே சுகுணாவின் இதயத்தில் அலைமோதின.

பெண்கள் ஒருசிலர்தான் கணவன்மாருடன் வந்திருக்கிறார்கள். சிலரோ தனிப்பட்ட முறையில் வந்திருக்கிறார்கள். காலத்தின் நாகரீக பரிபவத்தில் பெண்களின் மங்களகரத்தைக்குறிக்கும் அறிகுறிகளான மூக்குத்தி திருகாணியோ காலில்மெட்டியோ, கழுத்தில்மஞ்சள் நூல்சரடோ, நெத்தியில்கம்பீரமானகுங்குமப்பொட்டோ கையில்வளையல்களோ காதில்காதணியோ...எந்தவிதசின்னமும் இல்லாதுமொட்டையும், மூளியுமான அலங்கார சிங்காரிகளே அங்குநிறைந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கப்பார்க்க சுகுணாவின் வியப்பு கரைகடந்துவிட்டது. யார்யார் எத்தகையோர் என்று புரிந்துகொள்ளாமல் விழிக்கிறாள்.

"பெண்கள் தம்தம் மங்களவாழ்வை விரும்பி பகவானை சதாவேண்டி ப்ரார்த்தித்து அதற்கான முறையில்அலங்காரங்களுடன் பாடுபடுவதை விட்டு இப்படியா இருப்பார்கள்? இவர்களுக்கு இதயமில்லையா? பயம், பக்தியொன்றுமில்லையா? கணவனின் க்ஷேமத்தைக் கோரி ப்ரார்த்திக்கவேண்டாமா! ஒருபெண் தனது மங்கள ஸூத்ரமாகிய மஞ்சள் சரட்டின் உயர்வையும் அதன் வளர்ச்சியையும் கோரி சதா தேவியை பூஜித்து வேண்டுவது கடமையாயிருக்க, இவர்கள் கழுத்தில்

சிலருக்கு ஒன்றுமே காணவில்லை: சிலருக்கு தங்கச்சங்கிலியாவது மெலிசாக இருக்கிறது. இதிலிருந்து என்ன அறிய முடியும். தலையிலோ புஷ்பம் ஜமாய்க்கிறது!"...

என்று எதையோ யோசனை செய்தவாறு அதிலேயே லயித்துப்போய் உட்கார்ந்திருக்கும் சுகுணு மேஜைமீது பரப்பியுள்ள தின்பண்டங்களில் பார்வையைச் செலுத்தவே இல்லை. இவளுடைய செய்கை துரைராஜுக்குச் சற்றும் பிடிக்காமல் அவளை உற்றுப்பார்த்து ஜாடை காட்டினர்.

இதற்குள் எதிரில் உள்ள "மெனு"—பலகாரவகைகளின் ஜாபிதா— சுகுணுவின் கண்களைக் குத்தியது. அதில் மாமிஸ பலகாரமும் இருப்பதை அறிந்ததும், அவளுக்குண்டான அருவருப்பும் வெறுப்பும் எரிச்சலும் அத்துமீறிவிட்டன. மாம்ஸவகைகளைத் தன் கணவன் புசிக்காமல் தடுப்பதற்காக என்ன செய்யலாம் என்று க்ஷணநேரம் யோசித்தாள். அந்த ஜாபிதாவில் எதுஎது மாம்ஸவகைகள் என்று போட்டிருந்ததோ அந்த பண்டங்கள் உள்ள தட்டுகளை அப்படியே தைரியமாக இழுத்துத் தூரவைத்துவிட்டாள். அதே பதார்த்தங்களை மற்றையோர்சாப்பிடுவதைக்காணச் சகிக்கவில்லை. இந்த ஆபாச பதார்த்தங்களுடன் கூடவிருக்கும் பழவகைகளைக்கூட தொட மனமின்றி பேசாமல் பிரமை பிடித்தவள்போல் உட்கார்ந்திருப்பதைக் கண்ட சிலர் சாப்பிடும்படி வற்புறுத்தினர்கள்.

தனக்கு உடம்பு சரியில்லை என்றும் தன் கணவனுடன் வர வேண்டும் என்ற ஆசையால் வந்ததாயும் தன்னைக்கேட்ட பெண்களிடம்மட்டும் தெரிவித்தாள். சாப்பாடு முடிந்ததும் வேறு இடத்திற்கு எழுந்து சென்றுர்கள். அங்கு பிரம்மாண்டமான பந்தலும் மத்தியில் அழகான ஆட்ட அரங்கமும் அமைத்திருந்தனர். அந்தப் பந்தலில் ஜட்ஜ் துரைராஜனை உட்காரச்செய்துமாலைகள் சூட்டி பிரம்மாண்டமான உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்து கௌரவித்துப் பின் சிலர் இவரைப்பற்றிப் பேசினர்கள்.

துரைராஜ் நல்ல திறமை வாய்ந்த மேதை. அவருக்கு இந்த நீதிபதித்தொழில் மிகவும் பொருத்தமானது. சர்க்கார் இத்தகைய சிறந்த அறிவாளியைப் பொறுக்கி எடுத்தது மிகவும் பாராட்டக்கூடிய விஷயமாகும். நல்ல அனுபவமும் கூர்மையான புத்தியும், ஆராய்ச்சித்திறனும், எது சரி எது தப்பு என்று திராசுநிறையாய் நிறுத்துப்பார்த்து வழக்கில் சரியானபடி நியாயத்தை மழைபோல் வழங்கித் தமது தொழிலைச் செய்து வெற்றிபெறுவார் என்பது நிச்சயம். உலகில் நியாய மழை குறைந்துவிட்டதனுல்தான் வானமழையும் குறைந்துவிட்டது. அதனுல் உண்டாகும் அனர்த்தங்களையும் பிரத்யட்சமாகக் காண்கிறேம்: நியாய பரிபாலனம் சரியான முறையில் நடந்து தேசம் க்ஷேமப்பட்டு நன்ருயிருக்க பகவான் அருள் புரிவாராக"......

என்ற இதே விஷயத்தைப் பலர் பலமாதிரி பேசினார்கள். கடைசியில் துரைராஜனும் தனது நன்றிவிச்வாசத்தைக் கூறியதோடு "நான் கடவுளின் ஆணைக்குக்கட்டுப்பட்டு நியாயாதிபதி என்கிற ஸ்தானத்தைவகித்து மக்களுக்கு நியாய மழையை வழங்கிஉழைப்பேன்" என்றார். அதன்பிறகு நாட்டிய விருந்து நடந்தது.

சுகுணாவுக்கோ, வீட்டில் சின்ன குழந்தை அழுகிறதோ! பெரிய பசங்கள் சாப்பிடும் வேளையாயிற்றே, அவர்கள் என்ன செய்கிறார்களோ! சாப்பிடாமல் இரண்டாங்கெட்டான் குழந்தைகள் தூங்கிவிடுவார்களோ! இரவு காலம்; கதவு பூட்டியிருக்கிறதோ...திறந்திருக்கிறதோ இதுபோன்ற கவலைகளில் நாட்டியம்பார்க்கவும் பிடிக்கவில்லை. கணவனோ எழுந்துவரும் யோசனையில் இல்லை. ஆனந்தமாக நாட்டியம் ரஸிப்பதில் மெய்மறந்துவிட்டார். தவியாய்த் தவிக்கும் சுகுணா, மெல்ல துரைராஜனைப்பார்த்து "மணி 8 அடித்துவிட்டதே" என்று கடிகாரத்தைக் காட்டினாள்.

துரைராஜனுக்கு வீட்டுக்கவலையோ, குழந்தைகளின் நினைவோ இருந்தால்தானே மனத்தில் பரபரப்பு உண்டாகும்? நாட்டியத்தில் வைத்த விழியை வாங்காமல் "பேஷ்! சபாஷ்" என்று ஆரவாரித்துக்கொண்டிருப்பதில் திரும்பிக்கூடப்பார்க்கவில்லை. சுகுணாவுக்கு மிகுந்த எரிச்சலாக இருந்ததால் மெல்ல துரைராஜனின் துடையைத்தொட்டு ஆட்டி "நான் வீட்டிற்குப் போகிறேன். குழந்தைஅழும். நான்போய் வண்டியை அனுப்புகிறேன்" என்று மெல்லக் கூறினாள்.

அதன்பிறகே திரும்பிப்பார்த்தார்...முகத்தைக் கடுத்துக்கொண்டு "இதென்ன நாட்டுப்புறமாயிருக்கிறாய்? எனக்காகத்தானே இந்த வைபவம் நடக்கிறது. இதைவிட்டு அநாகரீகமாய் எழுந்து போய்விட்டால் எப்படி நினைப்பார்கள்? இரு...இரு...போகலாம். தொணதொணப்பாதே" என்று ரகஸியமாய்ச்சொல்லிவிட்டுநாட்டியத்தை ரஸிக்கிறார். சுகுணாவுக்கு முள்ளுமேல் நிற்பதுபோல் வேதனை செய்வதால் உட்காரவே முடியாது தவிக்கிறாள்.

"மணி ஓடவில்லையே, நாட்டியம் எப்போது முடியும்?" என்று தேள் கொட்டியதுபோல் துடிக்கிறாள். இவளுடைய மனத்தவிப்பையறிந்து பகவான் உதவிசெய்ய முன்வந்தது போல் மின்ஸாரம் திடீரென்று கெட்டுவிட்டதால், விளக்குகள் அணைந்து இருள் சூழ்ந்துவிட்டது. ஆங்காங்கே முன்ஜாக்ரதைக்காக வைத்திருந்த 'பெட்ரோமாக்ஸ்' விளக்கைத்தூக்கிக்கொண்டுவந்தார்கள்.

ஜனங்களும் கலைந்துவிட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில் விளக்கை அணைத்துத் தன் கணவனைக் கிளப்பிய பகவானுக்கு மனமார வந்தனத்தைச் செலுத்தியபடியே காரில் ஏறினாள்.

"ஏதோ புது நாகரீகம்...ப்ரமாத விருந்து...என்றெல்லாம் சொல்கிறார்களே! இதற்குத்தானா அத்தனை வைபவம்? இது தானா ஒருதடபுடல்?" என்று மனது சப்பிட்டே தோன்றியது.

வீட்டுவாசலில் கார்வந்து நின்றவுடனே குழந்தை மாடியில் பெரிதாக வீறிட்டு அழும் குரலை முதலில் கேட்டதும் நடுங்கியவாறு உள்ளே ஓடினாள். முன்கட்டு ஹாலில் பெரிய விளக்கு எரிகிறது. அதன்கீழ் மாலதி படிக்க உட்கார்ந்து அப்படியே தூங்கிவிட்டாள். சமையல்காரன் உள்பக்கம் இரண்டாங்கட்டில் தூங்குகிறான். மாடியில் தாறுமாறாகப் பசங்கள் தூங்குகிறார்கள். வேலைக்காரி குழந்தையைத் தோள் மீது சாத்திக்கொண்டு திண்டாடுகிறாள்.

சுகுணா இந்த வைபவக் காட்சிகளைப் பார்த்து மனங் கொதித்தவாறு குழந்தையைவாங்கிச் சமாதானம்செய்ய முற்பட்டாள். பால் ஓரேயடியாகத் திரிந்து கட்டியும் கசடுமாய் குபீரென்று வாந்தி எடுத்ததைக் கண்டு பயந்து "ஏன் இப்படி வாந்திஎடுக்கிறது...என்ன நடந்தது?" ...என்றாள்.

தாதி:—சாயங்காலம் முதல் இப்பிடியே அழுவுதுங்க, சமயக்கார ஐயாவைக்கேட்டு ரவே பால்வாங்கி ஊத்தினேன்...

சுகு:—என்ன என்ன !...வெறும் பாலைவாங்கிப் போட்டாயா? நான்தான் போகும்போது வயிறுநிறையப் போட்டி விட்டுத்தானே போனேன்...உன்னை யார் இதற்குள் போடச் சொல்லியது?

தாதி:—கையிலே காலிலே நிக்காமெ கத்தினால் என்ன பண்றதுங்க? ரெண்டு பாலாடை ஊத்தி வெளியாட்டுக் காட்டினேன். ரவெ சும்மா தூங்கிச்சு. மறுபடி முழுச்சிகிட்டு அழுதுதுங்க. அப்றம் பால்வாங்கி ஊத்தினேன், பிஸ்கோத்தும் என் துட்டுலே வாங்கிக்குடுத்தேன். எதுக்கும் நிக்காமே...

சுகுணாவுக்கு வெகு ஆத்திரம் வந்துவிட்டது. இத்தனை சிறிய குழந்தைக்கு இதற்குள் இரண்டுதரம் பால்போட்டுவதாவது,பிஸ்கேட்டைக்கொடுப்பதாவதுஇதென்னராக்ஷஸத்தனம் ...இத்தனைக்கும் காரணம் அவருடைய அசட்டுப்பிடிவாதமல்லவா! இந்த அல்ப விஷயத்தில் ஏதோ ப்ரமாதமான நாகரீகமும் மரியாதையும் இருப்பதாக எண்ணி என்னையும் மனம்நோகச்செய்து குழந்தையின் உடம்பும் பாழாகும்படிச் செய்துவிட்டாரே...என்ற கோபம் தன்னைமிஞ்சி வந்தது.

துரைராஜன் தன்னறைக்குச்சென்று உடைகளைமாற்றிவிட்டு, தனக்குப் பசி இல்லை, சாப்பாடு வேண்டாம் என்று சொல்லியனுப்பிவிட்டு மூன்றும்மாடிக்குப் படுக்கப்போய்விட்டார். குழந்தை வெறிபிடித்தழுததாலும் வயிற்றுக்கு அளவு மீறி வழக்கமில்லாத ஆகாரத்தைக் கொடுத்ததாலும குழந்தைக்கு இன்னும்இரண்டுதரம் வாந்தியாகிஜுரமும்வந்துவிட்டது. மெல்ல சமாதானப்படுத்தித் தூங்கவைத்துவிட்டு மற்ற குழந்தைகளை எழுப்பி ஆகாரத்தைக் கொடுக்கப்பார்த்தாள்.

சிலது சாப்பிட்டது. சிலது சாப்பிடவில்லை. மணி பத்தடித்து விட்டதால் கோபத்துடன் தானும் சாப்பிடாமல் படுத்துவிட்டாள். தன்கணவனின் அசட்டுஆசையும் முரட்டுப்பிடிவாதமும் செய்த பரிபவத்தால் ஒரேஒரு நாளில் இப்படி வீடு அலங்கோல நிலைமையில் இருக்கிறதென்றால் மற்ற நாட்களில் என்ன செய்வது?...என்கிற பயமே உண்டாகி வருத்துகிறது. தன் கணவனுடைய அந்த எண்ணத்தை மாற்றி நல்ல நிலைமையில் புத்தியைக் கொடுக்கும்படி அவள் உள்ளம் பகவானை வேண்டித் தொழுது பிரார்த்தனை செய்தது.

## 3

### ஒன்றுசேர்ப்பது ஆசையா? பிரிப்பது ஆசையா?

பாதிராத்ரி; மணி ஒன்றடித்தது. இரவு சாப்பிடாமல் பட்டினி படுத்துவிட்ட குழந்தைகள் பசிபசி என்று எழுந்து உட்கார்ந்து அழவாரம்பித்தன. சின்னக்குழந்தை ஜுரத்தால் கைவிடாமல் அழுகிறது. என்ன செய்வாள் பாவம்! இரவு சாப்பிடாமல் தூங்கியதன் பலன் இது. லேசான தின்பண்டங்களைத் தின்பதற்குக் கொடுத்து குழந்தைகளைச் சமாதானப் படுத்தித் தூங்கவைத்தாள். கைக்குழந்தையுடன் இரவு பாடு சரியாகிவிட்டதால் அவளுக்கு ஏற்கெனவே மனத்தில் உறுத்திக்கொண்டிருந்த ஆத்திரம் பின்னும் மூண்டது.

காலையில் துரைராஜ் வழக்கம்போல் எழுந்துவந்தார். சுகுணா காப்பிகொடுக்கையில் துரைராஜ் வழக்கத்திற்கு விரோதமாய் சேரில் உட்கார்ந்து நிதானமாகக் காப்பியைச் சாப்பிட்டவாறே "சுகுணா! நேத்து அந்த நாட்டியக் கச்சேரி வெகு அத்புதம். அந்த விளக்கு மோசம்செய்யாமலிருந்தால் இன்னும் கொஞ்சநேரம் அனுபவித்திருக்கலாம். இல்லையா? நான் ஒரு தீர்மானம் செய்துவிட்டேன்...

சுகு:—(இடைமறித்து)என்ன தீர்மானம்? நேற்று கொண்டுவந்த புடவையைவிட மோசமான புடவையைக் கட்டிக் கொண்டு நானே நாட்டியம் கற்று ஆடவேண்டும் என்று, சியாயாதிபதியாகையால், சட்டம் போட்டுவிட்டீர்களா?...

துரை:—ஏன் இப்படி ஆத்திரப்படுகிறாய்?...இத்தனை குழந்தைகளுக்குத் தாயாயிருப்பினும் நீ சின்னஞ்சிறு பெண்ணாகத்தான் காட்சியளிக்கிறாய். நேற்று நீ எப்படித்தான் இருந்தாய் தெரியுமா... அது கிடக்கட்டும். நம்ம மாலதிக்கு நாட்டியம் சொல்லிக்கொடுக்க இன்றே ஏற்பாடுசெய்யப்போகிறேன். நாட்டியத்தின்மூலம் தேகாப்யாஸம் எவ்வளவு நன்றாக அமைந்திருக்கிறது தெரியுமா?...

சுகு:—சரிசரி! இன்று காலங்காத்தாலே இந்த வீண் விஷயங்களில் நான் பொழுதைச் செலவிடத் தயாராயில்லை. தேகாப்யாஸத்திற்காகப் பணம் காசைச் செலவிட்டு நேரத்

தையும் வீணாகக் கழிக்காமல் எத்தனையோ சிறந்த முறையில் நம் முன்னோர்கள் தினசரி வீட்டு வேலைகளின்மூலம் அமைத் திருக்கிறார்கள். இந்த தேகாப்யாஸத்தில் பின்னால் யாரும் நதிங்கிணதோம் போடவேண்டாம். காலில் கஜ்ஜை கட்டிக் கொண்டு குதிக்கவும் வேண்டாம். பணச்செலவும் விபரீதமாக வேண்டாம். காலை தூங்கிஎழுந்ததுமுதல் இரவு படுக்கும்வரை யில் அளவு அறிந்து வேலை செய்தால் அதைவிடச் சிறந்த தேகாப்யாசம் வேறு என்ன இருக்கிறது? கிணற்றில் தண் ணீர் தூக்குவதும், உடைகளைத் துவைப்பதும், சாப்பாடு பரி மாறுவதும், எண்ணெய்தேய்த்து ஸ்நானம்செய்விப்பதும்...

துரை:—சரி...சரி...போதும் போதும். பெரிய லெக்சரே ஆரம்பித்துவிடுவாய்போலிருக்கிறதே!...

சுகு:—ஆமாம். நேற்று விருந்துக்கு இழுத்ததுபோல் லெக்சரும் பண்ணும்படி என்னை நியாயாதிபதி சட்டம் விதித் தால் நான் செய்துதானே ஆகவேண்டும். நேற்று ஒருவேளை வந்ததற்குப்பலன் சின்ன குழந்தைக்கு மணிக்குமணி பாலைக் கொட்டி அஜீர்ணம் உண்டாகி வாந்தியும் ஜுரமும் வந்து கத்துகிறது. லெக்சருக்கும் வந்துவிட்டால் குடும்பமே உருப் பட்டுவிடும். நான் கண்டிப்பாய்ச் சொல்கிறேன். இனி இம்மா திரி விஷயங்களுக்கு என்னைத் தொந்திரவு செய்யவேண்டாம். உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். வ்யவஸ்தை யற்றக் கூட்டமும் மாமிசவிருந்தும்.....

என்றபோது, யாரோ கூப்பிடுவதாக ஆள் வந்தான். உடனே துரைராஜன் எழுந்துபோனார். மாலதிக்கு நாட்டி யம் சொல்விவைப்பதில் சுகுணாவுக்குச் சற்றும் இஷ்டமில்லை யாதலால் அதைப்பற்றி மகளிடம் சொல்லி "எனக்கு நாட்டி யம் வேண்டாம்" என்று சொல்லிவிடு என்று எச்சரித்தாள்.

மேலும் இரண்டு நாட்களில் குழந்தையின் உடம்பு சற்று குணமாகியது. துரைராஜ் வெகு சந்தோஷத்துடன் சுகுணா விடம் வந்து, "சுகுணா! நேற்றே சொல்ல மறந்துவிட்டேன். இன்றிரவு சரியாக 8 மணிக்கு ஜட்ஜுகளும், வக்கீல்களும் சேர்ந்து நிலாச்சாப்பாட்டிற்கு ஏற்பாடுசெய்து, விருந்து மரக்கட்டைச் சாப்பாட்டு விடுதியில் நடத்துகிறார்களாம். நீ கட்டாயம் தயாராகவேண்டும். அங்கு சாப்பாட்டிற்கு முன்பு அன்று நாட்டியம் ஆடிய அதே பெண்ணின் நாட்டியம் 6 மணிமுதல் 8 மணிவரையில் நடக்கப்போகிறதாம். சாப்பாட் டின்போது விகடக்கச்சேரியாம். சாப்பாடு முடிந்ததும் அரை மணிநேரம் பாட்டுக்கச்சேரியாம். நிகழ்ச்சிக் குறிப்பைப்பாரு, எத்தனை தடபுடலாக அச்சடித்திருக்கிறார்கள்!' என்று காட்டினார்.

சுகுணாவுக்கு உண்மையில் எரிச்சலாகவந்தது. "இதென்ன விருந்து? இதென்ன கூத்தடிப்பு? ஏதோ புதிதாக ஒரு வருக்குக் கல்யாணமானால் வேண்டியவர்கள் வீட்டில் விருந்து

நடத்துவது சகஜம். அல்லது பெரிய பெரிய மகான்கள், மேதைகள், தலைவர்கள், அதிசய வ்யக்திகள், ஊரைவிட்டு ஊருக்குவந்தால் விருந்துகள் செய்வதில் அர்த்தமிருக்கிறது. அவரவர்கள் கடமையுடன் வேலையைச்செய்து அதன்மூலம் உத்யோகத்தில் உயர்வு உண்டானால் புளியேப்பக்காரர்களை ஒன்றுகூட்டி இப்படியா பணத்தை வீணுக்குவது? இன்னும் என்னைக்கேட்டால் நியாயமானமுறையில் உத்யோகம்உயர்ந்த மனிதர் தம்முடைய முதல் சம்பளத்தைக்கொண்டு ஏழைகளுக்கும் மொண்டி, முடம், கூன், குருடு முதலிய அங்கஹீனர்களுக்கும் அனாதைகளுக்கும் வாரி வழங்கி உதவிசெய்து மகிழ்ந்தால் அதை பகவான் உகந்து இவர்களுக்கு மேலும்மேலும் நன்மைகளைச்செய்து காப்பாற்றுவான். இதைவிட்டு இந்த வீண் டம்பாச்சாரி நாடகத்திற்கு நான் வரமுடியாது என்று நீங்கள் மரியாதையாய்ச் சொல்லாமல், நீங்களே ஆசைப்பட்டுக் கொண்டு ஓடுவதுபோல்...

துரை:—ஏய் சுகுணா! ஏதேது? நீ மிகுந்த வாயாடியாகி விட்டாய்! இந்த அதிகப்ரசங்கித்தனமும் உபன்யாசமும் எனக்கு வேண்டாம். பேசாமல் நான் சொல்லியபடி நடந்து தான் தீரவேண்டும். இதோ! இந்த டிஷ்யூ புடவையை இன்று கட்டிக்கொண்டு 5-45 மணிக்கெல்லாம் தயாராக இருக்க வேண்டும். எந்த சாக்குப்போக்கும் சொல்லக்கூடாது...

சுகு:—இத்தனை நாட்கள் நாம் தேனும்பாலும்போலக் குடும்பம் நடத்தியது மறைந்துபோய், சண்டைபோட்டுக் கொண்டு பிறர் சிரிப்பதற்கு உறுப்பாக வாழவேண்டும்போ லிருக்கிறதே. இன்றுதான் சின்னகுழந்தைக்கு உடம்பு சற்றுதேவலை. மறுபடியும் அதைக் கத்தவிட்டுவிட்டு மற்ற சகலத்தையும் அலையவிட்டுவிட்டு நான் கண்டிப்பாய் வர முடியாது. என்னை என்னசெய்தாலும் சரி......

துரை:—என்ன! என்ன! உன்னைவிட உயர்ந்த பதவி வகிக்கும் பெண்களுக்கெல்லாம் குழந்தைகுட்டிகள், வீடு வாசல் ஒன்றுமில்லை என்று எண்ணினாயா?...

சுகு:—வீண்பிடிவாதமும் விதண்டாவாதமும் வேண்டாம். அவர்களைப்பார்த்து நான் ஏன் காப்பியடிக்கவேண்டும்? என்னைப்பார்த்துத்தான் அவர்கள் காப்பியடிக்கட்டுமே; இத்தனை வயது கழித்து இதென்ன சங்கடம்? இந்தமாதிரி அனியாய விஷயங்கள் எனக்குப்பிடிக்கவில்லை. நான் வர முடியாது. வீட்டில் வேறு பெரியவர்கள், கனிகரத்துடன் பார்த்துக்கொள்ள மக்கள் மனிதர்கள் இருந்தால் ஒருவேளை கிளம்பலாம். அல்லது சிறிய குழந்தைகள் இல்லாது எல்லாம் பெரியவர்களாகி இருப்பினும் கிளம்பலாம். இரண்டுமில்லாத என்னை வீண்வம்புக்கு இழுக்கவேண்டாம். நான் அந்த கேளிக்கைகளையோ, மாமிசவிருந்தையோ வெறுக்கிறேன்...

துரை:—சீச்சீ: துஷ்டே? என்னுடைய பெருமையும் எனது கவுரவமும் ஊரறிகிறது. நீ அறியவில்லையா! உன் உதவாக்கரை பிடிவாதத்திற்கு இடமில்லை. நீ கட்டாயம் வந்தே தீரவேண்டும்...என்று வெகுகோபத்துடன் சொல்லி விட்டுப் போய்விட்டார்.

இந்த கஷ்டகாலத்திற்கு என்னசெய்வாள் பாவம்? கோபம்கோபமாக வருகிறது. இதை யாரிடம் சொல்வது, என்னசெய்வது? "நானும் ஒரு பெரிய ஜட்ஜின் மகள்தான்; பலவருஷங்கள் அவர் ஜட்ஜ்வேலை பார்த்துப் பின்னர்தான் காலமானார். அவர் இம்மாதிரி ஆடம்பரத்திற்கு ஆசைப்படவு மில்லை. என் தாயாரை இம்மாதிரி உபத்திரவம் செய்யவுமில்லை. காலத்திற்கேற்ற புத்தி, ஆசை எல்லாம் வந்துவிடும்போ லிருக்கிறது; இவரென்ன சின்னபாப்பாவா? இதென்ன வேடிக்கை வேண்டியிருக்கிறது? அன்று வந்த கண்காக்ஷிச் சேலையையே இது தோற்கடித்துவிடும்போலிருக்கிறதே; டிஷ்யு வாம் டிஷ்யு... பேரைப்பாத்தாலே பிடிக்கவில்லையே! இதையா நான் கட்டிக்கொண்டு நிற்கவேணுமாம்! சரிதான்...இவருக்குச் சரியான புத்திசொல்வதற்குப் பழங்கிழவியாகிய அத்தைப் பாட்டியைத்தான் வீட்டில் ஒருமாதம் இருக்கச்சொல்ல வேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். இதற்குள் குழந்தை அழும்குரல் கேட்டதால் பதைத்து ஓடினாள். தாயுள்ளத்தின் துடிப்பில் அதன் பாதுகாப்பைவிட வேறு ஏதாவது தெரியுமா? குடும்பமும் குழந்தைகளுந்தான் ப்ரதானமாய்த் தோன்றின.

---

## 4

## அபாக்யமனிதனின் அனுபவமொழிகள்.

"தாயே! தர்மதேவதையே! பசி உசிர்போகிறதே! ஒரு வாய்க்கஞ்சித்தண்ணீர் வாத்து என்வயிற்று எரிச்சலைத் தீர்க் கணும் தாயே...கண்ணை இருட்டி காதை அடைக்குதே. கால் நடக்கமுடியவியே...ஐயோ! ஆண்டவனே!"...என்று ஒரு எலும்புக்கூடான பிச்சைக்காரக்கிழவன் கத்தமுடியாது கத்திக்கொண்டு வீதியில் சுருண்டு உட்கார்ந்துவிட்டான். உலகத்தில் அளவற்ற தனிகர்களும் இருக்கிறார்கள்; கணக்கற்ற பிச்சைக்காரர்களும் கதறுகிறார்கள். அத்தனை பேருக்கும் மனமிரங்கிப் பிச்சைபோட்டு ஆதரிக்கும் புண்யாத் மாக்கள்தான் உலகத்தில் அதிகம் கிடைப்பது துர்லபம்.

பிச்சைக்காரர்களின் தொல்லையும் சகிக்கக்கூடாத உபத் திரவத்தைத்தான் கொடுக்கிறது. அதனால் அவர்களுடைய உண்மையான பரிதாபம் கண்ணுக்குத்தெரியாமல் கோபத்தை உண்டாக்கிப் புண்படும்படியான நிலைமையை அவர்களுடைய

பிடிவாத குணமே சிலருக்கு உண்டாக்கிவிடுகிறது. அத்தகைய நிலைமாறிப் பிச்சைக்காரர்களின் துடிப்பையறிந்து கோபிக்காமல் பிச்சைபோடும் புண்யசீலர்கள் ஒருசிலர்தான் இக்காலத்தில் காணப்படுகிறார்கள்.

அந்த முறையில் சுகுணாவும் சேர்ந்தவள் என்பதைக் காட்டுவதுபோல் தன் குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு சமாதானம்செய்கையில் இந்தஈனக்குரல் அவள் உள்ளத்தைஉருக்கியது. வாசல்பக்கம்வந்து எட்டிப்பார்த்தாள்.

சல்லடைக்கண்களுக்கொப்பான ஒரு கந்தையைக்கட்டி உடலை மூடியிருக்கும் பாவனையுடன் சரீரம் நடுங்கும்படியான பாதையைக்கொடுக்கும் பசியின் கொடுமைதாங்காது வீதியில் விழுந்துகிடக்கும்பரிதாபகரமான துர்ப்பாக்யப்பிண்டத்தைப் பார்த்ததும் ஒருக்ஷணம் அப்படியே அசைவற்றுநின்றாள்.

தன்கணவனுக்கு உத்யோக உயர்வினால் அன்று நடந்த தண்டவிருந்தும் இன்றுநடக்கப்போகும் அபரதண்டவிருந்தும், அதை உண்ணும் புளியேப்பக்காரர்களின் கூட்டத்தின் காக்ஷியும் கண்முன்பு தோன்றின. "இந்த ப்ரமாத உயர்வுக்கு இப்படி அனியாயமாய்ச் சாப்பாட்டிற்குச் செலவு செய்வதைவிட்டு இம்மாதிரிப் பரதேசிகளுக்குப்போட்டு ஆத்ம த்ருப்தி செய்தால் எத்தனை நன்றாக இருக்காது. பசிபசி என்று கதறும் தீனக்குரலைக் காதில்வாங்குவாரில்லை. புசி புசி என்று குஷியுடன் உபத்திரவம் செய்யும் பெருங்குரல்தான் உலகத்தில் அதிகமாக இருக்கிறது. இதென்ன ஆச்சரிய உலகம்? இதென்ன மக்களின் மனோபாவம்?" என்று தனக்குள் எண்ணியவாறு வேலைக்காரனைக்கூப்பிட்டு இந்த பிச்சைக்காரனைத் தோட்டத்துப்பக்கம் அழைத்துவரும்படி உத்திரவிட்டாள்.

தள்ளாடித் தடுமாறி வந்தவனுக்கு முதலில் வயிறு குளிர ஆகாரத்தைத்தானே போட்டு அவன் சாப்பிடும் வேகத்தையும் பரபரப்பையும், ருசிகூடப் பார்க்காமல் வயிறு நிரம்பி அந்த பசியின் கோரப்பிணி சற்று தீர்ந்தால் போதுமென்கிற ஒரே எண்ணத்துடன் வாரிவாரி விழுங்கும் உண்மையான உணர்ச்சியைப்பார்க்கும்போது, அன்று டீபார்ட்டியில் உயர்ந்த பண்டங்களை எச்சில்படுத்தி தொட்டுத்தொட்டு சிலர் வைத்ததும், சிலர் லக்ஷியமே செய்யாமல் அலக்ஷியபாவத்துடன் நடந்துகொண்டதும் திடீரென்று நினைவுக்குவந்து படக்காட்சியைப்போல் இரண்டும் கண்முன்பு தெரிந்தன.

"ஐயோ பாவம்! என்னபசி! என்ன ஆவல்!...உம். பார்த்தால் இத்தனை எலும்புக்கூடாக இருக்கிறான். இவன் சாப்பிடும் அளவையும் ஆர்வத்தையும் பார்த்தால் ப்ரமிக்கும்படியாகவன்றோ இருக்கிறது" என்று பலபலஎண்ணங்களால் உலுப்பப்பட்டு சுகுணா கிழவனையே பார்த்து ப்ரமிப்புடன் நின்றாள்,



கிழவன் லபக்லபக்கென்று சாப்பிட்டகளிப்புடன் அன்ன மிட்டவர்களை வாயார வாழ்த்திக்கொண்டே, ''தாயே! நீ நல்ல தர்மதேவதை... உன் குடும்பம் பசுமையாய்ச் செழித்து வாழணும். என்வயிறு பசியறிந்து உணவு போட்ட மகராஜி உன் வயிறுகுளிர்ந்து உன் மாங்கல்யம் மலைபோல வளர்ந்து சகல சுகத்துடன் இருக்கணும் தாயே!...கெழவன் ஏதோ சோத்தைப்பார்த்த சந்தோஷத்திலே ஒளர்ரான்னு நெனைக்காதே. இந்த கெழவன் இந்த ஒலகத்தே நன்னு கண் ணாலே பாத்து அறிஞ்ச பழம்பெருச்சாளி...அம்மாடீ! என் உசிரு வந்தது. இந்த சாண்வயித்துக்குத்தானேம்மா ஒலகம்

பாடுபட்றது. பசிவேளைக்குப் போட்டாக்கா தோத்திரம் பண்ணுவேன், இல்லாட்டா திட்டுவேன்னு நெனைக்காதே...நான் வயிறெரிஞ்சு திட்டக்கூடிய மனுஷனையே நான் என்வாயாலே திட்டலே தாயே! பகவான்ஒத்தன்இருக்கச்சே நாம்ஏன் அந்த பாடுபடணும்? என்னை இந்தகதிக்கு ஆளாக்கின பாவியையே நான் திட்டலியே. ஒருவாய் சோறு போடாதவங்களை நான் ஏன் திட்டப்போறேன்? ஏதோ வயிறு குளிர்ந்த வேளையிலே இப்படிப்பட்டவங்களே நெனச்சு வாழ்த்தணும் தாயே!...

சுகுண:—(மறித்து)...ஏம்பா கிழவா!...ஒன்னே இந்தக் கதிக்கு ஆளாக்கினதா?...யாரு அப்பிடி செய்தா? ஏதாவது கூட்டு வ்யாபாரத்துலே சண்டை வந்துவிட்டதா?

கிழ:—உம்...எந்தவ்யாபாரம் செய்தா என்ன தாயே?... நியாயமானவழியிலே செய்தா ஏன் சண்டைதான் வருது? இந்த கதிதான் வருது? அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. என்னேபோல ஒசத்திபடிப்பு இல்லாத முட்டாள்கள் விஷயம் இருக்கட்டும்.நல்ல படிச்சமேதாவிங்க நியாயத்தை நடுநிலைமை வெச்சு நடக்காட்டிப் போனதான் இந்த கதிவருதுங்க. ஒரு வசனம் சொல்லுவாங்க —நெறய பள்ளிக்கூடங்களும் அறிவு வளரக்கூடிய புத்தகாலயங்களும் திறந்துவைக்கவைக்க, ஜெயில் கதவுங்கள் மூடிவிடும்— இன்னுசொல்லுவாங்க. நல்லா படிச்சு நியாயமழையைப்பெய்யறதாகசொல்லிக்கும்நியாயாதிபதியே அக்ரமமாய் நடந்துகிட்டா ஜெயில்கதவு எப்பிடி தறக்கும்? ஜெயிலே போதாமல் இன்னும் கட்டும்படியா அல்லா ஆவுதுங்க. நான் ஜெயிலில் போனப்பறம் மூணு புதுஜெயில் கட்டினுங்க...

சுகுண சற்று திடுக்கிட்டாள்...''என்ன! நீ ஜெயிலுக்குப் போனயா?...நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. நீ எதற்காக ஜெயிலுக்குப்போனாய்? காங்கிரஸ்காரனா?...

கிழவன் கடகடவென்று சிரித்தான் ''அம்மணி! காங்கிரஸ்காரர்கள்போகும்இடம் ஜெயிலா? அதுசொர்க்கமல்லவா? ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த புனிதக்கோயிலல்லவா...தாயே! சத்யமாக நான் நிரபராதி; ஆனல் நான் கொலைகாரன் என்கிற பட்டத்துடன் 20 வருஷம் ஜெயிலில் இருந்தேன்.

சுகுணவைத் தூக்கிவாரிப்போட்டு "கொலைகாரனா!...... கொலைகாரனா!"...என்று திகைக்கவைத்தது. பதில் பேசவும் முடியாது ஏதோ மனத்தில் வேதனைசெய்தது. தம்பித்து நின்றாள். இதையறிந்த கிழவன் ''தாயே! என் வார்த்தையைக் கேட்கும்போதே உங்களுடைய உள்ளத்தில் எத்தனை தூரம்வேலை செய்ராது என்பது நன்ற தெரிகிறது. கொலை செய்யாத என் தலையிலே கொலைபாதகன் என்று நீதிபதி கூறி, தூக்கு தண்டனையையும் எனக்குக் கொடுத்தபோது என் மனம் எப்படித்தான் இருந்திருக்கும்? "நீ கொலைகாரன்

உனக்குத் தூக்குத்தண்டனை விதிக்கிறேன்'' என்று நீதிபதி சொல்லியபோது, எனக்கிருந்த ஆத்திரத்தில்இரணியன் குடலைக் கிழித்ததுபோல் அந்த மகா கொடும்பாவியைக் கிழித்து விட்டு உண்மையிலேயே கொலைகாரனுக ஆய்விடலாமா என்று கூடத் துணிந்துவிட்டேன் தாயே! தெய்வபலம் என்னை அடக்கியது. "இந்த அல்பநாய்களைக் கொல்ல உன்னால் முடியாது; நான் இருக்கிறேன் பதறாதே'' என்று பகவானே என் இதயத்தில் சொல்லி என்னைத் தடுப்பதுபோல் ஒருதோற்றம் உண்டாகியதால் என்னை நான் அடக்கிக்கொண்டேன்...நியாயம், அநியாயம் இரண்டையும் பகுத்தறியத்தெரியாத மூட மனிதனுக்கு நீதிபதி உத்யோகமாமே!...நீதிபதி. தூத் தூ!...மூஞ்சியைப்பாரு...குத்துடா....கொல்லுடா......என்று அந்த ஜட்ஜையே பொதுமக்கள் வயிறெரிந்து திட்டினர்கள்...

கிழவன் ஏதோ ஆவேசம் வந்தவனைப்போல் சொல்லிக் கொண்டே போகிறுன். சுகுணுவின் வயிற்றில் தாங்கமுடியாத சங்கடம்செய்து வதைக்கிறது. "என்கணவருக்கு நீதிபதி உத்யோகம் ஆயிருப்பதைப்பற்றி அளவளாவிக்கொண்டாடி பல கொண்டாட்டங்களை நடத்துகிறுர்களே, அவருடைய உத்யோகத்தின் பயங்கரம் இப்படியா இருக்கிறது?''... என்று ஏதேதோ எண்ணித்துடிக்கிருள்...அவள் எண்ணம் பூராவும் பயங்கரத்திலேயே தாவிவிட்டது.

கிழவனின் வார்த்தைகள் பூராவும்கேட்டு இன்னும் விஷயமறியவும் ஆவல் தூண்டியது. மெல்ல சமாளித்துக்கொண்டு "ஏம்பா கிழவா!...நீ கொலை செய்யாதிருக்கையில் உன்மீது எப்படி பழிவந்தது? நீபேசுவதைப்பார்த்தால் படித்தவன் போலவும் இருக்கிறது; நாட்டுப்புறத்தான்போலவும் இருக்கிறது. யாரைக் கொலைசெய்ததாகப் பழிவந்தது? எப்படி உன் தலையில் விடிந்தது?'' என்று படபடத்துக் கேட்டாள்.

கிழவன்:—தாயே!...என்விதி என்னை ஆட்டிவைத்த வயிற்றெரிச்சலைச்சொன்னுல் பெண்ணினமாகிய நீங்கள் கதி கலங்கிவிடுவீர்கள். இப்படியும் ஒரு பெண்போர்வைபோர்த்த ராக்ஷஸி இருப்பாளா என்று வியப்புறுவீர்கள். நீங்கள் கேட்டதுபோல் நான் நன்ருக 8 வகுப்பு வரையில் படித்தவன் தான். பிச்சை எடுக்கையில் அப்படியும் விஷயமறிந்தவர்களுடன் பேசுகையில் இப்படியும் என்காலம் கழிகிறது. என்னை அக்கினிசாட்சியாக மாலையிட்ட மனைவி என்கிற ப்ரம்மராக்ஷஸியையே கொன்றதாக என்மீது விதிவந்து அமுக்கியது.

சுகு:—என்ன! என்ன! உன்மனைவியைக்கொன்றதாகவா? ...எப்படி பழிவந்தது? அவள் எப்படி இறந்தாள்? குழந்தை குட்டிகள் உண்டா?

கிழ:—அம்மணி! ஒரே ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தையின்பால் நான் வைத்த பாசத்தின் கொடுமையினல்

தான் வந்த விதிமுழுதும். அந்தப் படுபாவியை நான் பரிபூர்ணமாக நம்பினேன். என் அன்பையெல்லாம் கொட்டியிருந்தேன். அந்த நாசகாலியின் துர்நடத்தையை நான் முதலில் அறியாது பிறகு அறிந்து கண்டித்துவந்தேன். குழந்தையைக் கூட அவள் சரியாகக் கவனிக்காமல் நாடோடியாவதை வெறுத்துக்கண்டித்து அடித்துப் புத்திபுகட்டினேன்.

வேளையின் கொடுமை எப்படி விபரீதத்தை உண்டாக்கி விட்டது தெரியுமா? எந்த அயோக்யனின் பின்னல் இவள் திரிகிருளோ அந்த மனிதனின் மனைவியும் இந்த அக்ரமத்தையறிந்து இந்தப் படுபாவியை அவள் விஷமிட்டுக் கொன்று தன் பழியைத் தீர்த்துக்கொண்ட பரம ரகசியத்தை பகவான் தான் அறிவான். தினம் நான் அடித்து உபத்திரவம் செய்து கொன்றுவிட்டதாக என்மீது சரியானபடிக் கயிறு திரித்துவிட்டார்கள். அந்தப்படுபாவி ஜட்ஜு—அவன் நாசமாய்ப்போக!—அவன்பெயர் உத்தமனும் உத்தமன்! உத்தமன் என்ற பெயருடன் அதர்மத்திற்குத்தான் நீதி வழங்கினன். முத்துப்பேட்டையின் பொதுமக்கள் அப்படியே அந்தப்பாவியைத்தான் திட்டினர்கள். "இத்தனை படிப்பையும் படித்துவிட்டு அநியாயத்தை வழங்கி ஒரு உயிரையே வதைக்கத் தூக்குதண்டனை விதித்த பாவி. இவனு நியாயமழை பெய்யும் நீதிபதி? இவன்தான் கொலைகாரன்"...என்று திட்டினர்கள்.

முத்துப்பேட்டைஜட்ஜு உத்தமன்என்றவார்த்தைகளைக் கேட்ட உடனேயே சுகுணுவின் தலைமீது பெரிய மலையே விழுந்து பாரமாக அழுத்துவதுபோல் தோன்றி வதைத்தது. அந்த ஜட்ஜ் வேறு யாருமில்லை. தனது பிதாதான் என்பது சடக்கென்று புரிந்துவிட்டதும் கூறத்தரமற்ற சங்கடம் செய்து வதைக்கிறது.

கிழவன் மூச்சுக்கூடவிடாமல் "தாயே! நீங்கள் என்னை வெறுப்பது நன்ருகத்தெரிகிறது. அதற்காகத்தான் நான் சொல்வதற்கே தயங்கினேன். கொலைக்குற்றம் செய்தது உண்மை என்று ஊர்ஜிதப்படுத்தி தூக்குதண்டனை விதித்த அன்றே உலகம் என்னை வெறுத்துத்தான் இருக்கும். ஜெயிலில் ஏதோ தர்ம அப்பீல் என்று ஒன்று செய்தார்கள். நிம்மதியாக நான் தூக்குமரத்தில் தொங்கலாடி என்னுடைய துன்பத்தை அன்றே போக்கிக்கொண்டிருக்கலாம். அந்தப் பாழாய்ப்போன அப்பீலில் தூக்குதண்டனையை மாற்றி 24 வருஷம் தண்டனை போட்டார்கள். ஏதோ நான் விதியை எண்ணிக்கழித்ததில் 20 வருஷம் ஆவதற்குள்ளேயே விட்டு விட்டார்கள்.

நான் வெளியில் வருவதற்குமுன்பே எனக்கொரு பெரிய சந்தேகம் தோன்றிக்கொண்டே இருந்தது. அதாவது,—அக்ரமக்காரர்களுக்குக் கடவுள் தண்டனை கொடுப்பான் என்று சொல்வது உண்மையானல் நிரபராதியான என்னைத் தூக்கி

விடும்படி தண்டனை கொடுத்த ஜட்ஜின் நிலைமை எப்படி இருக்கும் என்பதைப்பார்க்க ஆசைப்பட்டேன். நேரே முத்துப் பேட்டைக்கு ஓடிவந்தேன். இத்தனை அவஸ்தைப்பட்டுக்கூட அந்த நீதிபதியின்மீது எனக்கிருந்த ஆத்திரம் தீரவில்லை. அகப்பட்டால் உயிர் போகாதவாறு உதைத்தாவது தள்ளி விடவேண்டும் என்றுதான் வந்தேன். கடைசியில் துர்மரண மாய் ரயில்விபத்தில்தான் அந்த ஜட்ஜு செத்ததாயும் அவருக்கு ஓரேஒரு பெண் இருப்பதாயும் அவளை அப்போதே மாமாவோ அத்தையோ கொண்டுபோய்விட்டதாயும் தகவலே இல்லாத செய்தி கிடைத்தது. அனியாயத்தை வழங்கிய நியாயாதிபதியை உலகத்திற்கெல்லாம் ஜட்ஜாகஉள்ள கடவுள் சரியானபடித் தண்டித்துவிட்டான். கடவுளை நம்பினல் கைவிட மாட்டான் என்ற திடநம்பிக்கை உண்டாகியபிறகு இப்படி பிச்சைச்காரனுய் ஊர் சுற்றுகிறேன்.

சுகுணா தன் துடிதுடிப்பை அடக்கிக்கொண்டு...“எம்பா! அந்த ஜட்ஜின் ஓரே ஒரு பெண் இருப்பதாகச் சொல்கிறுயே. அவளைத் தேடிப்பிடித்து நீ உன் வஞ்சத்தைத் தீர்க்க விரும்பவில்லையா”...என்பதற்குள் கிழவன் இடைமறித்து “தாயே! மக்களுக்குச்சத்ரு மாதாபிதா என்பது பழமொழிஇல்லையா?... அந்த பாதகங்கள் ஒன்றே மக்களைத் தாக்கிவதைக்குமே. நேருக்குநேரான மனிதனையே நான் கொலைசெய்ய எண்ண வில்லையே! அப்படியிருக்க அந்த குழந்தையை நான் ஏன் அம்மா பழிதீர்க்கணும்? பகவான் கிருபையால் நான் அந்தப் பெண்ணைச் சந்திக்க நேர்ந்தால் அவளிடம் என்உண்மையைக் கூறி வருந்தி அவள் தந்தையின் பாவம் அவளை ஒன்றும் செய்யாது காப்பாற்றக் கடவுளைக்கூட வேண்டுவேன்”...என்று சொல்லும்போது, ஜட்ஜு துரைராஜன் வந்துவிட்டதை அவர் குரலாலறிந்த சுகுணா திடுக்கிட்டுப்போய்...“கிழவா! அதோ அந்த மாட்டுக்கொட்டகையில் நீ படுத்துத்தூங்கி ஓய்வெடுத்துக்கொள்ளு. என் எஜமானர் வந்துவிட்டார்; அவர் கண்ணில் படாதே. பிறகு நான் பேசுகிறேன்” என்று கூறி முடித்து நகர்வதற்குள், “சுகுணா! சுகுணா!”...என்று கூப்பிட்டவாறே அவர் தோட்டத்திற்கே வந்துவிட்டார்.

ஒரு பிச்சைக்காரன் சாப்பிடுவதையும் சுகுணா அலங்காரம் ஏதுமின்றி அப்படியே நிற்பதையும்பார்த்து மிகவும் கோபமடைந்து “ஏய் சுகுணா! இதென்னகூத்து? இதொரு பெரிய உத்யோகஸ்தனின் வீடா! தர்மசத்திரம் சாவடியா?... நீ இன்னமா இப்படியே தலையும் வேஷமுமாக நிற்கிறுய்?” என்று கூச்சலிட்டுக்கொண்டு வருவதைக்கண்டு கதிகலங்கிப் போய்விட்ட சுகுணா அப்படியே எதிரில் ஓடி உள்ளே அழைத்துக்கொண்டுபோய் “கோபிக்கவேண்டாம். குழந்தைக்கு மறுபடியும் ஜுரம் காய்வதால் கைவிடாது அழுகிறது; தோள்மீதே சாத்திக்கொண்டு சமாதானம் செய்கிறேன். நம்ம

பால்காரன் திருஷ்டி, தோஷம் இவைகளுக்கு நன்றாக மந்திரிப்பதாயும் குழந்தைக்கு மந்திரித்தால் ஜுரம் குறையும் என்றும் வேலைக்காரன் சொன்னான். அதனால் இங்கு வந்து மந்திரித்தேன். அவனுடன்கூட வந்தவர்கள் நின்றார்களே யன்றி வேறொன்றுமில்லை. இந்த ஜுரம்காயும் குழந்தையை விட்டுவிட்டு நான் எப்படி வருவது? நீங்களே தொட்டுப் பாருங்கள், எப்படிக்காய்கிறது?'' என்றாள்.

கண்களில் கோபக்கனல் தெறிக்கத் துரைராஜன் வெகு மூடுக்காகச்சென்றுடெலிபோனைத்திருப்பி அவசரமாக ஏதோ பேசினார். அடுத்த பத்துநிமிஷத்திற்கெல்லாம் வாசலில் ஒரு



கார் வந்துநின்றது. அதிலிருந்து ஒரு சட்டைக்கார நர்ஸ் கையில் தோல்பெட்டியுடன் இறங்கி "குடீவினிங் ஸார்" என்று பெரிய ஸலாம் போட்டவாறு உள்ளே வந்தாள். அவளை எதிர் கொண்டழைக்கும் துரைராஜா "கமான் நர்ஸ்..." என்று அழைத்துச்சென்று மாடியில் குழந்தையும் சுகுணாவும் இருக்கும் இடத்திற்கு வந்து சுகுணாவியப்புறும்படி "சுகுணா! இதோ பஸ்டுக்ளாஸ் நர்ஸ்; இவர்களிடம் குழந்தையைக்கொடுத்து விட்டு உடனே கிளம்பு; கொஞ்சமும் கவலையில்லாமல் போய் வரலாம். இவர்கள் வெகு பொறுப்புடன் பார்த்துக்கொள்வார்கள். மருந்துகளைக் காட்டி இவரிடம் சகலமும் சொல்லி விட்டு வா...நர்ஸ்...குழந்தையை ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.

இம்மாதிரியும் ஒரு விசித்திர சம்பவம் நடக்குமென்று சுகுணா சற்றும் எதிர்பார்க்கவில்லையாகையால் உண்மையில் அவளைத் தூக்கிவாரிப்போட்டது. சட்டைக்காரியின் ப்ரவேசத்தால் இவளுடைய நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. இன்னது பதில் சொல்வதென்று தெரியாமல் விழிக்கையில், நர்ஸ் தானே வலுவில்போய் குழந்தையை வாங்கிக்கொண்டு "நான் வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் போய்வாருங்கள்." என்று ஆங்கிலத்தில் கூறினாள்.

"சுகுணா! இன்னும் பத்து நிமிஷந்தான் இருக்கிறது. உடனே புறப்படத் தயாராகவேணும்" என்று சொல்லிச் சென்ற கணவனுக்குப் பதில்சொல்ல முடியவில்லை. நர்ஸிடமும் என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. குழந்தையோ நர்ஸிடம் நிற்காமல். "அம்மா! அம்மா!" என்று கத்திக்கொண்டு இவளிடமே ஓடிவருகிறது. அதை விட்டுச் செல்ல மனமின்றி தவியாய்த்தவித்து நின்றுவிட்டாள். தன் கணவனுக்கு ஏன் இத்தகைய புத்திமாருட்டமும் அல்ப ஆசையில் மோகமும் வந்திருக்கிறது! என்ற எரிச்சலே உண்டாகி வதைத்தது.

## 5

## குடும்பமே நீதிஸ்தலம்—தலைவியே நீதிபதி

ஐந்து நிமிஷத்திற்குள் 50 தரம் சுகுணாவை துரைராஜா கூப்பிட்டுவிட்டார். தலைவிதியே என்று குழந்தையை அழ அழக்கொடுத்துவிட்டுச் சென்று ஒரு நல்ல கனமான புடவையின்மேல் இந்த டிஷ்யூ புடவையைச் சேர்த்து உடுத்திக் கொண்டு ஒருவாறு அலங்காரத்தை முடித்து தடதடவென்று சென்று காரில் ஏறிக்கொண்டாள். இன்று காரைத் தானே ட்ரைவ் செய்ய உட்கார்ந்ததால் சுகுணாவையும் முன்னுலேயே உட்காரச்சொல்லி ட்ரைவரைப் பின்னுல் உட்காரச்செய்து

காரைவிட்டார். அந்தவேகத்தில் அவர் சுகுணாவின் அலங்காரத்தைக் கவனிக்கவில்லை.

அவர்கள் போகவேண்டிய இடத்திற்குப்போய்ச்சேர்ந்தும் மற்ற நாகரீக நங்கைகள் சுகுணாவை ப்ரமாதமாக வரவேற்கும் முறையில் கைகுலுக்கி முகமன்கூறி அழைத்தார்கள். இவள் இரட்டைச்சேலை உடுத்திக்கொண்டிருப்பதைக் கண்டு தமக்குள் சிரித்துப் பரிகாஸமாகப் பார்த்தார்கள். தமக்குள் குசமசவென்றுஜாடைகாட்டிப்பேசிஉதட்டைப்புதுக்கும் சேஷ்டைகளை எல்லாம் சுகுணா கண்டும் காணாததுபோல் பொம்மைமாதிரி உட்கார்ந்திருக்கிறாள். அவளுடைய நினைவு பூராவும் தன் குழந்தைமீதும், அன்று வந்த பிச்சைக்காரக் கிழவனின்மீதுந்தான் தாவி அலைகிறது.

தன் பிதாவின் கையில் தூக்குத்தண்டனை வாங்கிய மனிதனைச் சந்திக்கவும் விவரமறியவும் அவனுடைய வயிற்றுக் கொதிப்பு எத்தனை உச்சத்தை அடைந்து என்னசெய்யவும் துணிந்திருந்த பயங்கரத்தையும் நினைக்கநினைக்க மனத்தில் உண்டாகிய புதிய பயங்கர உணர்ச்சியை அவளால் தடுக்கவே முடியவில்லை. தன்கணவனுக்கும் இதே கதிதானே ஆகும். இன்று இத்தனை தடபுடல் விருந்து நடத்தும் இவரை நாளை எந்த கேஸில் எப்படி எல்லாம் திட்டுவார்களோ! என்கிற எண்ணமே பலமாகப்போராடுவதால் அங்கு நடக்கும் எந்த கேளிக்கையிலும் அவள் மனது செல்லவே இல்லை.

ஜட்ஜி அங்கு வந்து உட்கார்ந்த பிறகுதான் சுகுணாவின் இரட்டைச்சேலையின் வைபவத்தைப்பார்த்தார்;முகம் சுருங்கிக் கோபம் பொங்கியது. பகிரங்கமாகச் சொல்வதற்கும் முடியவில்லை. பலர் முன்னிலையிலிருப்பதால் அவமானம்வேறு பாதிக்கிறது. மற்ற பெண்மணிகள் தன் மனைவியைப்பார்த்துச் சிரிப்பதையும் குசமசவென்று பேசிக்கொள்வதையும்கவனித்துவிட்டபிறகு பின்னும் கோபம் அதிகமாகிவிட்டது. மெல்ல முடித்துக்கொண்டு வீட்டிற்குவந்தார். அவருக்கிருந்தஆத்திரத்தில் வண்டியில் சண்டையிட்டுத் திட்டிக்கொண்டு வந்தார்.

ஆனால் சுகுணா வாயைத் திறக்கவே இல்லை. அவருக்கே கோபம் அடங்குகிறபோது அடங்கட்டும் என்று பேசாமலிருந்தாள். வீட்டுக்கு வந்ததும் முதலில் மாடிக்கு ஓடித் தன் இரட்டைச்சேலையை மாற்றிக்கொண்டு குழந்தையைப்பார்த்தாள். முன்பொருநாள் நடந்ததுபோல் குழந்தையை வீட்டுத்தாதி தோள்மீது தாங்கிக்கொண்டு இப்படியும் அப்படியும் உலாவித் தவிக்கிறாள். குழந்தையோ கத்துகிறது.

வேறு தனிஅறையில் சொஸ்தமாய் மின்சார விசிறியைத் திருப்பிவிட்டு நர்ஸ் தூங்குவதைப் பார்த்து, தனக்குள் வியப்புற்று குழந்தையைத் தான் வாங்கிக்கொண்டு "குழந்தை ஏன் அழுகிறது? அன்றுபோல் இன்றும் பாலை நாலுவேளை போட்

டாயா...நர்ஸ் என்ன செய்தாள்?...எப்போதுமுதல் தூங்குகிருள்?"...என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

தாதி:—பசுவின் பால் போட்டலிங்க. புட்டிப்பாலெ அந்தம்மா கொஞ்சங்கொஞ்சமாக இரண்டுதரம் வாத்தாங்க. 8 மணிக்கு முன்னேயே ஒரு மோட்டாகாரு கொண்டாரச் சொல்லி போனு பண்ணினுங்க. அதுவந்ததும் அதிலே ஊட்டுக்குப் போய் துண்ணுபுட்டு வந்தாங்க. "கொயந்தெயே அப்படி வெச்சிகினு ஒலாத்து, நான் ரவே படுக்கறேன்; அம்மா வரநேரத்துக்குள் நான் எயுந்துட்ரேன். மத்யானம் ஒரு ஊட்டுலே கொயந்தே பொறந்திச்சு; அங்கே போனதுலே கயிஷ்டமா இருக்குது. ராத்ரி ஒரு ஊட்டுலே கொயந்தெ பொறந்துச்சு; அதனுலே தூக்கமேஇல்லே"...இன்னு சொல்லிப்புட்டு அந்தம்மா படுத்துகிட்டு நல்லா தூங்கிகிட்டேரோங்க. கொயந்தெயெ, நான்தான் வச்சிகிட்டு திண்டாட்ரேனுங்க" என்ருள்.

சுகுணுவுக்கு மிகவும் வியப்பாகிவிட்டது. "நான் வந்துவிட்டேன் இனிபோகலாம்" என்று எழுப்பிச்சொல்லிவிடுவதற்காக உள்ளே சென்ருள். நன்ருகத் தூங்கும் ஸ்டைலைப் பார்த்து சற்று அச்சத்துடன் நின்ருள். எங்கே தன் கணவன் வந்து பார்த்துவிடுவாரோ என்ற பயத்துடன் தடார்புடார் என்று சத்தத்தை உண்டாக்கி அவளை எழுப்பினுள்.

அலறிக்கொண்டு எழுந்து உட்கார்ந்து..."ஓ! வந்துவிட்டீர்களா! ரொம்ப சந்தோஷம். இரவுகூட நான் இருக்க வேண்டுமென்று ஐயா சொல்லி இருக்கிருர்...என்று முடிப்பதற்குள் சுகுணு "வேண்டாம் வேண்டாம். நான் எங்கே போனேன். இத்தனைநேரம் தாதி குழந்தையைப் பார்த்துக் கொண்டதுபோல் எனக்கும் அவள் உதவி செய்வாள். உங்களுக்கு எவ்வளவு பணம் பேசியிருக்கிறது. நான் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் நிம்மதியாக வீட்டில்தூங்கலாம்" என்ருள்.

நர்ஸுக்குச் சற்று கோபம் வந்துவிட்டது. விரைக்கப் பார்த்தவாறு எழுந்து..."என்னம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள்? நான் இப்போதான் குழந்தையைத் தூங்கவைத்துவிட்டுப் படுத்தேன். எனக்கு 20 ரூபாய் பேசிஇருக்கிறது. டாக்ஸிக்கு 10 ரூபாய். ஆக 30 ரூபாய் சேரவேண்டும்" என்று கனத்த குரலில் கூறுகையில் துரைராஜன் வந்தார்.

சுகுணு எதையுமே சொல்லாமல் 35 ரூபாயாகவே நர்ஸிடம் கொடுத்துத் தங்கள் காரிலேயே அனுப்பிவிட்டாள். "இந்த தண்டசெலவு 35 ரூபாயை மனத்தோடு ஒரு ஏழைக் குடும்பத்திற்குச் செலவிட்டிருந்தால் எத்தனை சந்தோஷப்படுவார்கள்? உண்மையில் வீட்டில் பல விஷயங்களிலும் இராப்பகலாக உழைக்கும் வேலைக்காரிக்கும் குழந்தையை வைத்துக் கொள்ளும் தாதிக்கும் கொடுக்க மனம் வருகிறதா! கொடுக்கிருேமா! உம். கட்டக் கந்தையில்லாமல் வயிற்றிற்குக் கஞ்சி

இல்லாமல் குளிரில் விரைத்துப் போகும்படி இருந்த, இன்று மாலை வந்த பிச்சைக்காரனுக்குக் கொடுத்தோமா! விரயம் என்ற உண்மை இதில்தான் அறிந்தோம்'' என்று தனக்குள் எண்ணியபடியே தடதடவென்று குழந்தையிடம் வந்தாள்.

பின்னாலேயே துரத்திக்கொண்டுவந்த துரைராஜன்...... ''ஏய்! இப்படி வா! நீ என்னை எத்தனை விதத்தில்தான் அவமானப்படுத்த எண்ணியிருக்கிறாய்? நீ இன்று போட்டுக்கொண்டுவந்த வேஷத்தைப்பார்த்து உன்னை எத்தனைபேர் பரிகசித்தார்கள் தெரியுமா?...

சுகுணா இடைமறித்து, ''மன்னிக்கவேண்டும். உங்களுடைய அருமையான புடவையை உடுத்திக்கொண்டு அப்படியே வருவதற்கு இந்த ஜென்மத்தில் என்னால் முடியாது. இனிமேல் இம்மாதிரி எந்த உபத்திரவமும் எனக்கு வேண்டாம். அதை அப்படியே நான் உடுத்திக்கொண்டு வந்திருந்தால் என்னைக் கல்லால்தான் அடித்திருப்பார்கள். இம்மாதிரி சேலையை இனி வாங்கவே வாங்காதீர்கள். நான் நிச்சயமாய் கட்டிக்கொள்ளமாட்டேன். ஏதோ போராத காலத்தினால் தான் உத்யோக உயர்வினால் நமக்குள் மனத்தாங்கலுண்டாகி அபிப்ராய பேதங்களும் வளருகின்றன. இத்தனை குழந்தை குட்டிகளைப் பெற்றபிறகு இம்மாதிரி ஒரு ஷோக்கு அலங்காரத்தை பழுத்த நாகரீகக்காரர்கள்கூடச் செய்துகொள்ள மாட்டார்கள். இதையறியாமல் நீங்கள் என்னை வருத்தவேண்டாம். எடுத்த எடுப்பில் 35 ரூபாயைக் கக்கிக்கொண்டுபோகும்படி ஒரு சட்டைக்காரியைக்கொண்டு நிறுத்தி என்னையும் துன்புறுத்திய அபூர்வ செய்கை இதோடு போதும். நானும் இதுவரையில் எதிர்த்து ஒரு பேச்சுக்கூட பேசியறிய மாட்டேன். இதே தோரணையில் நம் வாழ்க்கைப்படகைச் செலுத்தவாரம்பித்துவிட்டால் அது படுகுழியிலும் பாதாளச் சுழலிலும்தான் அகப்பட்டுத் தவிக்கநேரும். ஆகையால் நானும் இந்த குடும்பத்திற்கு முழு அக்கரையுடன் பாத்யதைப்பட்டவள் என்பதனால் இதைச் சொல்கிறேன். என்மீது அடங்காத கோபம் வருகிறதை அறிந்துதான் பேசுகிறேன்...

துரை:—ஏதேது! பெரிய பிரசங்கமேடை என்று எண்ணிவிட்டாயோ?

சுகு:—எனக்கு என் வீட்டைவிடப் பிரசங்கமேடைவேறு வேண்டவேவேண்டாம்... இனி அந்த தொல்லைகள் உங்களுக்கல்லவா பிடித்திருக்கிறது. புதிதாக எந்த பெரிய உத்யோகமோ, கவர்னர், மந்திரி பதவியோ, கவுன்சிலர்... முதலிய எந்த பதவி வந்தாலும் எத்தனை கூட்டங்களில் தலைமை வகிக்கவும், திறப்புவிழாக்கள், அஸ்திவாரக்கல்நாட்டு விழாக்கள், இசைவிழாக்கள் முதலிய பலபல விழாக்களில் அவர்களைக்கொண்டு நிறுத்துவதுந்தானே...

திருத்தொண்டு. பத்ரிகையைப் பிரித்தால் இதைவிட வேறு செய்தி என்ன இருக்கிறது?...அதைப்போல் உங்கள் பெயரும் புகைப்படமும் இன்னும் சில மாதங்களுக்கு அடிபடாதா? அந்தத் தொல்லைகளிலும் என்னை இழுத்து வம்படிக்கவேண்டாம்...என்று சொல்லிக்கொண்டே தன் காரியத்தைக் கவனிக்கப்போய்விட்டாள்.

பெரிய கோர்ட்டில் இவர் ஜட்ஜாக வேலையாகி தடபுடல் நியாயத்தை வழங்கி அட்டகாசம் செய்யும் பதவி இருப்பினும், வீட்டு நீதிஸ்தலத்தில்—சில குடும்பங்களைத்தவிர மற்ற குடும்பங்களில், மந்திரி மதியுடைய...அன்னை தயையுடைய... அனுபவ ஞானமும் பொறுமையும் பிறவியிலேயே உடைய... பெண்களால் நடத்தப்படும் குடும்பங்களில்—அவர்கள்தான் பிரதான நீதிபதிகளாய் விளங்கித் திறம்படக் குடும்பஅரசை வகித்து நடத்துகிறார்கள். அம்முறையில் சுகுணாவும் சேர்ந்தவளாகையால் அவளுடைய உள்ளத்தில் தோன்றியதைக் கலகலவென்று உதிர்த்துவிட்டுப் போய்விட்டதைப்பார்த்த துரைராஜனே சற்று வியப்புற்றார். எனினும் என்னபதில் பேசுவது என்று தோன்றாமல் போய்விட்டார்.

சுகுணா வேலையுடன்வேலையாகப் பின்புறம் பிச்சைக்காரக் கிழவன் என்ன செய்கிறான் என்று பார்க்கச்சென்றாள். கிழவனைப் படுக்கச்சொன்ன மாட்டுக்கொட்டில் காலியாக இருந்ததைக்கண்டு திடுக்கிட்டாள். பின்தோட்டம் முற்றிலும் ஒரு முறை பார்த்தபிறகு பிச்சைக்காரக் கிழவன் எங்குபோனான் என்று தோட்டக்காரனைக் கேட்டாள்.

"நான் சாப்பாட்டிற்குப் போகும்போது இங்குதான் படுத்திருந்தான். திரும்பிவரும்போது காணவில்லை. எப்படிப் போனானோ எனக்குத் தெரியாது" என்றான் அவன்.

சுகுணாவுக்கு என்னவோ மனத்தில் திக்கென்று துணுக்குற்றது. தன்பிதாவினால் தண்டிக்கப்பட்டு வாழ்நாள் பூராவும் பாழாகிவிட்ட துர்ப்பாக்கியப்பிண்டமாகிய அவனுக்குக் கடைசிகாலத்தில் சிலதினங்களாவது கஞ்சிவார்த்து வேலையும் ஏதாவது கொடுத்து ,வைத்துக்கொள்ள எண்ணியதற்குமாறாக அவன் சொல்லாமல் போய்விட்டது விசனமாகவே தோன்றியது. இரவுபூராவும் இதே நினைவில் தூக்கமே பிடிக்காது புரளச்செய்தது.

---

## 6

### அனுபவமொழிகளும் ஆச்சரியவழக்கும்

வழக்கம்போல் அதிகாலையில் சுகுணா எழுந்து முதலில் பசுமாட்டை நமஸ்கரித்து ப்ரதக்ஷணம்செய்யும் வழக்கம் போல்செய்ய மாட்டுக்கொட்டிலுக்குள்போனாள். அந்தகொட்

டியின் சுவரில் ஆணியில் ஒருகாகிதம் மடித்துவைத்திருந்ததைப் பார்த்து வியப்புடன் அதைஎடுத்துப் பிரித்துப்பார்த்தாள். ''தாயே!...என்று முதலில் எழுதியிருந்ததைப்பார்த்ததும் ஏதோ ஒருமாதிரியான உணர்ச்சி உண்டாகியது. உடனே கீழேகடைசியில்பார்த்தாள். 'பிச்சைக்காரக்கிழவன்' என்றிருந்ததைப்படித்ததும் சுகுணுவுக்கு ஸ்பஷ்டமாகப் புரிந்துவிட்டதால் முதலிலிருந்து படிக்கத்தொடங்கினுள்:

''தாயே! உங்கள் அன்பு வாழ்க! உங்கள் குடும்பம் சகல மங்களத்துடனும் செழித்து வளர்க! பசிக்கு அன்னமுதவிய லக்ஷ்மீயே! உங்கள் மாங்கல்யம் மலைபோல் வளரவேண்டுகிறேன். இந்த துர்ப்பாக்யப்பிண்டத்திற்கு அன்னமிட்டதற்காக உத்தம தம்பதிகளிடையே மனஸ்தாபமும் அபிப்ராயபேதமும் உண்டாகி ஒற்றுமை குலையும்படி நேர்ந்துவிட்டதற்காக நான் விசனப்பட்டு மன்னிப்புக்கோருகிறேன். அதோடு,வயதில் கோட்டானைப் போல் பெரியவனுகையினுல் ஒரே ஒரு விஷயத்தை—என் அனுபவத்திலறிந்த உண்மையைச்சொல்கிறேன்—தங்கள் கணவருக்கு இப்போதுதான்நியாயாதிபதிஉத்யோகம்ஆயிருப்பதாகவும் அதற்காக விருந்துகள் நடப்பதாகவும் கேள்விப்படுகிறேன்.

தாயே! நீர்க்குமிழிபோன்ற வாழ்க்கையைசதமென்றுஎண்ணி மகிழ்ந்து கவிழ்ந்துவிடுவதே உலகத்தின் போக்காகிவிட்டது. என்னை முத்துப்பேட்டைமகானுபாவன் இக்கதிக்கு ஆளாக்கியது போல் உங்கள் கணவர்செய்துவிடாமல்நியாயஅநியாயம் அறிந்து ஆண்டவனுக்குப் பொதுவாகத் தண்டனையைக்கொடுக்கச்செய்யுங்கள். என்விதியினுல் 20 வருஷகாலம் நான் சிறையிலிருந்த போது வெளியுலகையறியாது சிறையிலிருந்ததாகப் பேரேயன்றி உலகானுபவம் பூராவையும் நான் அங்குத் தெரிந்துகொண்டேன். அதில் முக்கியமாக உங்களுக்குச் சொல்லவேண்டியது என்னவென்றுல்,—உண்மையில் குற்றம் செய்த கொலைப்பாதகனும் தான் தப்பித்துக்கொள்வதற்கு ப்ரம்மப்ரயத்தனம் செய்கிறுன். அதனுல் அவனுடைய எதிரிகள்மீதும் அவனைத்தண்டித்த நீதிபதியின்மீதும் கடுங்கோபங்கொண்டு தான் உள்ளே அடைபட்டிருந்தும் வேறெருவன் கையாளைவைத்து தனக்குத் தீங்கிழைத்தவர்களுக்கோ அவர்களைச்சேர்ந்தவர்களுக்கோ சற்றும் அச்சமின்றி மற்றொருகொலையும்செய்து, வெஞ்சம்தீர்த்துக்கொள்வதை நான் கண்ணுரக்கண்டும், காதாரக்கேட்டும் ப்ரமித்துப்போயிருக்கிறேன். குற்றம் செய்யாமல் என்னைப்போல் படாப்பழியாய் தண்டனை அடைந்தவர்களும் பழிக்குப் பழிதீர்க்கிறுர்கள். அதனுல் தங்கள் கணவரின் தீர்ப்பில் நியாயம் மழைபோல் வழங்கி மக்களின் அன்பையும் ஆதரவையும் பெறும்வண்ணம் நடந்து கொள்ளும்படிச்செய்யுங்கள். உங்களுடைய உத்தமமான அன்புக்கு ஒருகுறைவும் வராமல் பகவான் காக்கவேண்டுகிறேன். ஏதோ எழுதி உளறி இருப்பதைப்பற்றி மன்னிக்கவும். இன்று தடபுடல் விருந்து நடத்திக்கொண்டாடும் இதே உத்யோகத்தில் விபரீதமான விபத்தும் நிழல்போல் சூழ்ந்திருப்பதை அறிவிக்கிறேன்.

இப்படிக்கு,

பிச்சைக்காரக்கிழவன்''

இதைப்பலதாம் படிக்கப்படிக்க சுகுணுவின் வயிற்றில் தாங்கமுடியாத சங்கடமும் அபாரமான பயமும் ஒன்றுகூடி வதைக்கத்தொடங்கின. அவள் மனத்தின் போக்கு ஒரு தினுசு, ஜட்ஜின் மனப்போக்கு ஒரு தினுசாக இருக்கிறதை பகவான்தானே அறியமுடியும்?

அன்று ஏற்பட்ட சிறிய மனஸ்தாபத்தின் விளைவினுல் தம்பதிகளிடையே சுமார் ஒருமாத காலம் பழய அன்யோன்யமும் சிரிப்பும் விளையாட்டும் எதுவுமின்றி மெஷின்போல் வீடு வரையில் நடக்கிறது. ஆனுல், ப்ரதிதினமும் பத்திரிகையில் ஜட்ஜின் பெயரும் புகைப்படமும் ப்ரஸங்கங்களின் குறிப்பும் தடபுடல்படுகின்றன. நல்லவேளை அதற்கெல்லாம் சுகுணுவை அவர் கூப்பிடாமல் சென்றது அவளுக்கு மிகவும் த்ருப்தியாக இருந்தது. உயர்ந்த உத்யோகஸ்தருடைய மனைவி என்றுல் மாதர்களின் சங்கங்கள், க்ளப்புகள், பெண்களின் பள்ளிக்கூடங்கள்,வாலிபர் சங்கங்கள் முதலிய இடங்களுக்குத் தலைமைவகித்துப் பேசுவதற்காகப் பலரும் அழைக்கத் துடங்கினுர்கள். ஆனுல் சுகுணு இவைகளுக்குச் செல்லச் சம்மதிக்காது மறுத்துவிட்டாள். சதா பகவானுக்குப் பூஜை செய்து தன் கணவனுக்குப் பக்கத்துணைஇருந்து உதவி புரியும்படி வேண்டி பஜிப்பதையே முக்யகடமையாகக்கொண்டாள். சிறுகச்சிறுக, சிறுசண்டையும் மனஸ்தாபமும் நீங்கி பழயபடி துரைராஜ் சந்தோஷமாய்ப் பழகி விளையாடத் தொடங்கியபிறகு சுகுணுவின் குறை நீங்கிவிட்டது. எனினும் தொழில்முறையில் சதா கவலையே உண்டாகிவதைத்தது.

ஒருநாள் கோர்டிலிருந்து வரும்போது, துரைராஜ் ஒரு மாதிரியாய் முகத்தில் சிறிது கவலையின் சாயைபடிந்து வந்தார். வீட்டில் எத்தனை வேலைக்காரர்கள் இருப்பினும் சுகுணு தானே டிப்பன் காப்பியைக் கணவனுக்குக் கொண்டு கொடுப்பதும் சாப்பாடு பரிமாறுவதும் வழக்கம். அன்று டிப்பன் காப்பியுடன்மாடிக்குச்சென்று கணவனைப்பார்த்ததும் சற்று கலங்கியவளாய் முதலில் உடம்பைத்தொட்டுப்பார்த்து, "என்ன செய்தி...உடம்புக்கு ஒன்றுமில்லையே?" என்றுள்.

துரை:—தொட்டுப்பார்த்து பயப்படாதே. உடம்புக்கு ஒன்றுமில்லை. இன்று ஒரு கிரிமினல் வழக்கு புதிதாக வந்திருக்கிறது. கைதியாகக் கொண்டுவந்திருப்பவள் 30 வயதுகூட நிரம்பாத ஒருபெண்மணி. இதுவரையில் இம் மாதிரி எக்கச்சக்கமான வழக்குகள் வரவில்லை...என்று கேஸின் விவரம் கூறியவாறு சாப்பிட்டார்.

இதுவரையில் கோர்ட்டுவிஷயமானஎந்த செய்தியும் தன்னுடன் சொல்லாதிருந்தவர் இன்று ஏதோ ஆச்சரிய மிகுதியினுல்—அதிலும் ஒரு பெண்பிள்ளையும் இப்படிச்செய்வாளா! இப்படி இருப்பாளா என்கிற வியப்பு அவரையும் விஞ்சிவிட்டதனுல்தான்—இப்படித் தானேசொல்லிக்கொண்டார்—என்று

ஒருபுறம் தோன்றி அதிசயத்தை உண்டாக்கியது. மற்ளுெரு புறம் பிச்சைக்காரக் கிழவனின் அனுபவ மணிவாக்குகள் உள்ளத்தில் ஒலித்துப் பயங்கரத்தை உண்டாக்கின.

## 7

### த்யகா உறுதியும் தேங்கும் கண்ணீரும்

இம்மாதிரி அபூர்வமான வழக்கு விஷயங்களாயின் அதை சுகுணுவிடம் சொல்லி அதுவிஷயமாக இருவரும் சர்ச்சை செய்து பேசுவதில் ஒரு தனி இன்பத்தைக்கண்ட துரை ராஜன் அதன்மூலம் சுகுணுவின் அதிநுட்பமான புத்தி கூர்மையையும் சாமர்த்தியமாகப் பேசும் திறமையையும் நன்ருக அறிந்து சந்தோஷமடைந்தார். மேலும் சில மாதங்க ளாயின. இதற்கிடையில் பல வழக்குகள் நடந்தன.

இன்று புதிதாகக்கொலைவழக்கு ஒன்று வந்திருப்பதைப் பார்க்க அந்த ஊரே வியப்புறுகிறது. துரைராஜனுக்கும் அஸாத்யமான ஆச்சரியம். கைதிக்கூண்டில் நிற்கும் மனி தனைப்பார்த்தால் ராஜவடிவு சொட்டுகிறது. இளமையின் துடிதுடிப்பும் வாலிப யெளவனத்தின் வசீகரமும் ஒவ்வொரு நரம்பிலும் ப்ரகாசிக்கின்றன. கம்பீரமான தோற்றம், கண்ணிய மான பார்வை, பெருந்தன்மையான பேச்சு எல்லாம் ஒன்று கூடிய மனிதன் கொலைகாரன் என்கிற பெயருடன் கூண்டில் நிற்பதைக்கண்டு கோர்ட்டே வியப்புக்கடலாடுகிறது. ஜட்ஜு சில நிமிஷங்கள் இமை இசைக்காமல் அவனைப் பார்த்தார்.

கீழ்க் கோர்ட்டில் நடந்த வழக்கு விவரம் வழக்கப்படி வாசிக்கப்பட்டு விசாரணைக்குத் துடங்கினுர்கள். "நீ குற்றம் செய்தது உண்டா?" என்ற கேள்வியைக் கோர்ட்டார் கேட்டதும், கைதிக் கூண்டில் நிற்கும் பூபதி மிக்கமரியாதை யாய் வணக்கத்துடன்,

"ஆண்டவனின் ஆணையாய், அவன் பாத சாக்ஷியாய் நான் நிரபராதி; குற்றவாளியல்ல. ஆனுல், மனிதர்களின்முன்னுல் இன்று குற்றவாளி என்ற பிருதுடன் நிற்கிறேன்" என்ருன்.

கோர்ட்டார்:—கொலைசெய்யப்பட்டவனுக்கும் உனக்கும் எதனுல் பகை?

பூபதி:—அவனுக்கும் எனக்கும் நேராகப்பகைமையொன் றும் கிடையாது. எங்கள் குடும்பத்திற்கும் அவன் குடும்பத் திற்கும் ஒரு தலைமுறையாகவே விரோதமுண்டு. நாங்கள் உறவுகொண்டாடுவதுகூட இல்லை.

கோர்ட்டார்:—அவனை நீ கடைசியாக எங்கு சந்தித்தாய்?

பூபதி:—நாங்கள் க்ஷத்ரிய வம்சத்தைச் சேர்ந்தவர்க ளாகையால் வேட்டையாடச் செல்வதுண்டு. அதற்காகத் துப்பாக்கி வைத்துக்கொள்ள சர்க்கார் அனுமதியும் உண்டு. எங்கள் ஊருக்கு அருகில் பெரியமலைகள் காடுகள் இருக் கின்றன. அதில் வேட்டையாட நான் என் குதிரைமீது

சென்றேன். அவனும் அன்று வருகிறான் என்பது எனக்குத் தெரியாது. நான் 20 கஜதூரம் சென்றபோது பின்னால் குளம்புச் சத்தம் கேட்டுத் திரும்பிப்பார்த்தேன். இவன் வருவதையறிந்தேன். அவனும் நானும் என்றுமே நேரில் பேசியோ சண்டையிட்டோ திட்டியோ அறியமாட்டோம். நான் என்போக்காகச் சென்றேன். வெகுதூரம் சென்று காட்டில் நுழைந்த பிறகு எனக்கும் அவனுக்கும் 50 கஜதூரத்தில் நான் போகும்போது ஏதோ பெரிய துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. இவன் மானைச் சுடுகிறானோ, வேறு எதைச் சுடுகிறானோ என்று நான் திரும்பிப்பாராமல் போனேன். ஆனால், அதற்குமேல் அவன்வரும் குளம்புச்சத்தம் கேட்காததால் சற்று நின்று திரும்பிப்பார்த்தேன். குதிரை கீழே விழுந்துகிடப்பதுபோல் தெரிந்ததும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எத்தகையகுடும்பவிரோதியாகவிருப்பினும்மனது கேளாது அங்கு ஓடினேன். குதிரை கீழே விழுந்துகிடந்தது. அதிலிருந்த மனிதன் ரத்தவெள்ளத்தில் மிதந்து "ஐயோ!... ஹா!...என்று ஏதோ துடித்தவாறு பேசுவதையறிந்தேன்.

நான் அருகில் நிற்பதைக்கண்டதும் அவன் என்ன எண்ணுவானோ என்றுகூட நான் பயப்படாமல் "இதென்ன விபத்து?"...என்றேன். அதற்குள் அவன் "நீயா என்னைச் சுட்டுக்கொன்றாய்!...நீயா பூபதி! நீயா!"...என்று கோபத்துடன் கூறியபடியே அந்த நிலைமையிலும் ஆத்திரத்துடன் விழித்தான். "சபாபதீ! நான் உன்னைச்சுடவில்லை. ஏதோ வெடிச்சத்தம் கேட்டு ஓடிவந்தேன். சத்யமாக எனக்குஒன்றும் தெரியாது. நாம் பிறகு பேசுவோம்" என்றுகூறிவிட்டு உடனே அருகிலிருந்த க்ராமத்திற்கு ஓடி ஜனங்களுடன் ஆகாரம் ஜலம் முதலியன கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்து ஆஸ்பத்திரியிலும் அவனை நானே என் குதிரை மீது கொண்டுபோய்ச் சேர்த்தேன்.

எத்தகையோராலும் ஆபத்துக்காலத்தில் உதவி செய்வதுதான் மனிததத்வத்தின் முறை என்ற நல்லெண்ணத்துடன் நான் செய்தகாரியம் பழயவிரோதத்தின் பயனாக என்னையே அந்தச் சண்டாளப்பகைமை கைதியாக்கிவிட்டது. இவ்வளவுதான் எனக்குத் தெரிந்த விஷயம். மற்றது கோர்ட்டாரறிந்ததே யாகும். விதி செய்யும் விளையாட்டிற்குக் கட்டுப்படாதவர்கள் யாரிருக்கிறார்கள்? அதுபோல் என்கதியும். நான் என்னுடைய சாவுக்குப் பயப்படவில்லை. என்னுடையக்ஷத்ரிய ரத்தம் என்றும் த்யாகத்திற்குத் தயாராய்த் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது...ஆனால்...என் வயதுமுதிர்ந்த பெற்றோர்களின் பரிதாபத்திற்காகவும் கர்ப்பிணியான என்மனைவிக்காகவும் என்னையறியாது கண்ணீர் வழிகிறதேயன்றி நான் ஏதோ கோழைத்தனமாய் அழுவதாகக் கோர்ட்டார் நினைக்க வேண்டாம்" என்றான், வெண்கலமணி யடித்ததுபோல்.



இந்த வீரவாசகத்தையும் சோகவார்த்தையையும் கேட்ட கோர்டிலுள்ளவர்கள் அப்படியே தம்பித்தார்கள். கண்ணீர் உதிர்த்தார்கள். பூபதியின் குரலில் உண்மையின் நாதம் கம்பீரமாய் ஒலித்தது. சட்டப்படி சாட்சிகளை விசாரிக்கத் தொடங்கி, வழக்கு நடந்துவருகிறது...

பூபதி சிறைச்சாலையில் கம்பிக்கு அப்பால் வெகு சந்தோஷத்துடன் பகவன்னும பஜனையைச் செய்துகொண்டு உலாவும் சமயம் ஜெயிலர் மரியாதையுடன் வந்து, ''உங்களைப் பார்க்கவேண்டுமென்று இதோ இந்தப் பெயருடையவர் வந்திருக்கிறார்கள்'' என்று கூறி ஒரு சீட்டைக் காட்டினான்.

"ப்ரேமவல்லி" என்கிற எழுத்தைப் பார்த்ததும் பூபதியின் உள்ளத்தில் தாங்கமுடியாத அதிர்ச்சியும் விசனமும் ஆனந்தமும் சமமாகப்பொங்கித்துள்ளியது. இந்த தர்மசங்கடமான நிலைமையில் தான் அவளைப்பார்க்கலாமா, வேண்டாமா! என்ற குழப்பமும் உண்டாகியது. எனினும் தான் கடைசித் தரமாகத் தனது ஆருயிர் ப்ரேமாவைப் பார்க்காமலிருக்க மனம்வரவில்லை. ஆகையால் க்ஷணநேரத்திற்குள் இத்தகைய கலக்கங்களில் உழன்று தெளிந்து, அழைத்துவரும்படிக் கூறி அனுப்பினன்.

என்னே பரிதாபக்காக்ஷி! செழுசெழுவென்று நன்ருக வளர்ந்திருந்த மேனி மிகவும் வாடிவதங்கித் துவண்டு சோகப் பதுமைபோல் ப்ரேமா வரும்போதே கண்ணீரைக்கட்டுப் படுத்தமுடியாமல் தாரைதாரையாக வழிந்தவாறு பேச மாட்டாது வந்து கம்பிக்கு வெளியில் நின்ருள்.

பூபதி:—ப்ரேமா!... இதென்ன பேதமை? வீரக்ஷத்திரிய குலத்தில் பிறந்த நீயா கோழைபோல் கண்கலங்குவது? நீயே இப்படி இருந்தால் என்பெற்ருேரின் நிலைமையை யார்கவனிப்பது?...ப்ரேமா...கண்ணீர்விடாதே... இதோபாரு! க்ஷத்திரிய வீரனுக்குப் போர்க்களத்தில் இம்மாதிரி மரணமேற்படுமாயின் அதுவே அவனுக்கு வீரச்சொர்க்கம் போன்றதல்லவா! ஏதோ விதியின் காரணத்தினுல் படாப்பழியைச் சுமந்து சாகப்போகிறேன் என்ருலும் இதற்கும் நான் சளைத்தவனல்ல. சாவைக்கண்டு அஞ்சி நடுங்குகிறவன் க்ஷத்ரிய குலத்தில் இருக்கவேமாட்டான். இது நீ அறியாததல்ல. என்பெற்ருேருக்கு நீயே மகனுயிருந்து அவர்களைத்தேற்று...

ப்ரேமா:—ஸ்வாமீ! அவர்களை மனிதர்களால் தேற்றி எங்கேனும் தலைக்கட்டமுடியமா! இந்த அதிர்ச்சியைக்கேட்டதுமுதல் உங்கள் தாயாரின் நிலைமை மகாமோசமாகிவிட்டது. உங்களுடைய வழக்கு முடிவதற்குள் மாத்ரு கைங்கர்யம்கூடக் கிடைத்துவிடுமோ! என்று பயப்படுகிறேன். அன்னுகாரமின்றி சதா அலற்றுகிருர். "பகவானே! உன்னுடைய ஆட்சியில் நியாயமென்பது நாசமாகிவிட்டதா! அநியாயத்திற்குத்தான் உன் ஆதரவும் அருளும் இருக்கிறதா! நீ நியாயமழையைப் பெய்து உலகரக்ஷணப்பயிரைச் செழிக்கச்செய்யாமல் இப்படியா அநியாயச் சூருவளியால் உலகத்தை அழிக்கிருய்? இதுவா உன்னுடைய அர்ச்சாவதார லக்ஷணம்? நீயா கருணைக்கடல்? நீயா தயாபரன். நீயா பக்த வத்ஸலன்?"... என்று அதீதமான ஆத்திரம் மூண்டு நாஸ்திகனைப்போல் வீட்டிலிருந்த ஸ்வாமி படங்களை யெல்லாம் உடைத்துத்தள்ளிப் படங்களையும் கிழிக்கப்போனுர். நான் அதைத்தடுத்து 'நாம் செய்த பாவத்திற்குப் பகவான் என்ன செய்வார்?' என்று சமாதானம்செய்து படங்களை பத்திரமாக வைத்தேன். ஸ்வாமீ! வெளியூரிலிருந்து ப்ரபல வக்கீல்...

பூபதி:—ப்ரேமா! நீயுமா இப்படிப்பேசுகிறாய்? ப்ரபல வக்கீலும் வேண்டாம். எத்தகைய முஸ்தீபும் வேண்டாம். பகவான் இருக்கிறான். நிரபராதி என்று அவன் திருவுள்ளத்தில் தீர்மானமானால் அதுவே கண்ணாடியில் ப்ரதிபலிப்பது போல் இங்கும் கிடைக்கும்; இதற்காக வீணான பாடுபடவேண்டாம். நீ உன்கடமையைச் செய். இனி இங்கு வராதே. இம்மாதிரிக் கூண்டில் நின்று பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. நீ 'பகவானை நம்பினால் எத்தகைய விபத்தும் நீங்கிவிடும்' என்ற நம்பிக்கையைக் கொண்டவளாயிற்றே. அதைவிடாமல் நம்பி ப்ரார்த்தனை செய்துவா. அம்மா அப்பாவை அக்கரையாகக் கவனித்துவா...அழாதே ப்ரேமா! நீ மனத்தளர்ச்சியுற்று வருந்தினால் உன் கர்ப்பத்திலுள்ள சிசுவும் வீணாகிவிடும். நீ க்ஷத்ரியமங்கையாய் தைரியமாயிரு...

ப்ரே:—ஐயோ! நானா தைரியமாய் இருப்பது? நம்மை விதி செய்த...செய்யப்போகும்...சதியை எண்ணும்போதே என்னுயிர் பறந்துவிடும்போலிருக்கிறதே...

ஜெயிலர்:—தயவுசெய்து நீங்கள் இம்மாதிரி விஷயங்களைப் பேசக்கூடாது. நானும் ஏதோ போனால்போகிறதென்று கேட்டும் கேளாததுபோலிருந்தேன். மணியும் ஆய்விட்டது. வெளியே வரவேண்டும்...என்றார். பூபதியின் தலை சாய்ந்தது.

"ப்ரேமா! இனி நீ இந்தப்பக்கமே வராதே; இன்றே தண்டனை விதித்தாகிவிட்டதுபோல் எண்ணிவிடு...அழாதே ...போய்விடு. பெற்றோருக்காக நீ உன்னைக் காப்பாற்றிக்கொள்ளு. க்ஷத்ரிய வம்சத்தின் கண்ணியத்தை, வீரத்தை மறக்காதே." என்று உறுதியாகக் கூறி ப்ரேமாவைத் தட்டிக்கொடுத்தான். அடுத்த நிமிஷமே கண்ணீர் கீழே கொட்டும்வண்ணம் கலங்கியபடி அந்த மின்னிடை மாதரசி போய்விட்டாள். இந்த காட்சியைக்கண்ட ஜெயிலரின் கண்களும் கலங்கின.

---

## 8

## அபாக்யப் பதுமைகளின் அபயக் குரல்

சரியான வெய்யில் உக்ரகத்துடன் காய்கிறது: பகல் 12 மணி இருக்கும். சுகுணா வீட்டுவேலைகளைச் செய்துவிட்டு பத்திரிகையைப் படிக்க உட்கார்ந்தாள். குழந்தைகள் பள்ளிக்கூடம் போய்விட்டதால் வீடு நிசப்தமாக இருந்தது. அந்த சமயம் ப்ரேமாவும் அவளுடைய மாமனார் மாமியார் மூவரும் மிகுந்த விசனத்துடன் அங்கு வந்தார்கள். ப்ரேமா சுகுணாவின் கால்களில் விழுந்து நமஸ்கரித்துக் காலை கெட்டியாகப்

பிடித்துக்கொண்டு "தாயே! மகாலக்ஷ்மீ! எனக்கு அபயம் தந்து ஆதரிக்கவேண்டும். எனக்கு மங்கல்ய பிச்சை தந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். நான்வேண்டுவது அதொன்று தான்" என்று கண்ணீர்வழியக் கதறிப்புலம்புவதைக்கண்டு சுகுணாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை... ஒன்றும் புரியவில்லை. திடுக்கென எழுந்து அம்மாதரசியைத்தூக்கிநிறுத்திப்பின்... நீ யாரம்மா? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! என்ன சமாசாரம்? ...

என்றுமுடிப்பதற்குள், தள்ளாதகிழவி கண்ணீரை ஆறாய்ப் பெருகவிட்ட வண்ணம், "அம்மணீ! ஸாக்ஷாத்லோகமாதா வாக உங்களையே நாங்கள் எண்ணி எங்கள் குறையை முறை யிட்டுக்கொள்ள வந்திருக்கிறோம். எங்கள் வயிற்றில் பாலை வார்த்து எங்களைக் காப்பாற்றவேண்டும். எங்கள் ஐவருடைய உயிர்களும் உங்கள் கணவரின் கையில்தான் இருக்கின்றன. (நடந்த வழக்கு விவரம் சகலத்தையும் கூறி) தாயே! நடந்தது பூராவும் அக்ரமம். அநியாயம். என் மகன் கடவுள் பாதத்தின்மீது ஆணையாக நிரபராதி. அவன் ஒரு குற்றமும் செய்தவனேயல்ல. வழக்கு பூராவும் பொய்ஜோடனையினால் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. தங்கள் பர்த்தாவை வேண்டி, தீர்ப்பாகிய நியாயமழையைப் பொழிந்து இந்த 5 உயிர்களாகிய பயிர்களை வாழவைக்கவேண்டும்." என்று கதறினாள்.

இந்த கோரக்காட்சியைக் கண்டு மிகவும் இளகி மனம் உருகும் சுகுணாவுக்கு என்ன பதில் சொல்வது, என்ன செய்வது என்றே தெரியாமல், வயிறுதுடிக்கும் கிழவியை வாரியணைத்து ஒரு ஆஸனத்தில் உட்காரவைத்தாள். கிழதம்பதிகளின் வயிற்றுக்கொதிப்பும், அந்தப்பெண்மணியின் இதயத்துடிப்பும் கண்ணாடிபோல் சுகுணாவுக்கு நன்றாகத்தெரிகிறது. இதுவரையில் இம்மாதிரி யாரும் வந்து கேட்டதும்இல்லை. தன் கணவர் தமதுகடமையில் பிறழாமல் நியாயத்திற்கே பாடுபடும் உத்தமர் என்பதும் அவளுக்குத் தெரியும். தர்மசங்கடமான, மிகவும் எக்கச்சக்கமான நிலைமையில் மனிதனைச் சோதிக்கும் சோதனை நிறைந்த ஜட்ஜ் உத்யோகத்தின் போக்கு பளிச்சென்று அவள் இதயத்தில் பெரும்போரைக் கிளறிவிட்டதோடு முன்பொருநாள் பிச்சைக்காரக் கிழவன் சொல்லிய சகல வார்த்தைகளும் நினைவுக்கு வந்துவிட்டன.

இவர்கள் நீதிபதியின் வீடேறிவந்துஇம்மாதிரி கேட்பது மிகவும் பெரியகுற்றம், நியாய விரோதம் என்பதை யறிந்தும் அவர்களுடைய துடிதுடிப்பிற்கு முன்பு சகலமும்பறந்து விட்டது. பாவம்!—என்ற அனுதாபமும் கூடவே தோன்றாமலில்லை. இம்மாதிரி இவர்கள்வந்திருப்பதை பிறர் அறிந்தாலும் விபரீதத்திற்கு ஏதுவாகிவிடும். கணவனுக்குத் தெரிந்தாலும் அனர்த்தமாகிவிடும். என்ன செய்வது?...என்று பலவித குழப்பத்துடன் பதில் பேசமாட்டாது தவிக்கும் சுகுணாவைப்

பார்த்த கிழவர்...“தாயே! நீங்கள் த்ரிசங்கு சொர்க்கம் போல் தவிப்பதை நாங்கள் அறிகிறோம். இதோ இந்தப்பெண் மணி 4 மாத கர்ப்பமாயிருக்கிறாள். இவளுடையபரிதாபத்திற்கு இரங்கியாவது இவ்வழக்கில் பகவான் எங்களுக்கு ஜெயத்தைக் கொடுக்கவேண்டும். இந்த ஜெயம் என்கிற மருந்து தற்போது உங்கள் கணவரின் பேனமுனையிலிருக்கிறது தாயே!...அவரிடம் நீங்கள், நியாயத்தை வழங்கி என்மகன் எங்கள் குடும்பத்தைப் பரிபாலிப்பதற்கு உதவி புரியவேண்டும்” என்று கூறிக் குலுங்கக்குலுங்கக் கதறினர்.

சுகுணாவுக்கு இந்த பரிதாபத்தைக்கண்டு சகிக்கவில்லை. லக்ஷ்மீநாராயணன், பார்வதீசங்கர்போல் தம்பதிகளாக வந்துள்ளவர்களைப் பார்க்கும்போதே அவர்களுக்குள்ள குறையைத் தீர்க்கும் மார்க்கம் தன்கையில் இருந்தால் உடனே செய்துவிடலாமே என்னசெய்வது? என்று சங்கடப்பட்டவாறு “பெரியவர்களே!...தாங்கள் க்ஷத்ரிய வம்சத்தில் பிறந்துள்ள மகாவீரர்களும் மேதைகளுமாகையால் உங்களுக்கு அதிகம் சொல்லவேண்டுவதில்லை. என் கணவர் மகா உத்தமர். நியாயத்திற்கே தாயகமான தீர்ப்பைத்தான் செய்வாரேயன்றி அக்ரமத்திற்குப் போகமாட்டார். நீங்கள் இம்மாதிரி வந்து கேட்பது மகா பிசகல்லவா! தயவுசெய்து போய்வாருங்கள். அவருக்கு இவ்விஷயம் தெரிந்தால் எனக்குத்தான் துன்பமாகி விடும். அம்மணி! உன் பரிதாபத்தைக் காணச் சகிக்கவில்லை.

இதோ பாருங்கள். மனிதர்களையே மனிதர்கள் நம்புவதைவிட எல்லோருக்கும் மேற்பட்ட பகவானையே சதா வேண்டி நம்பித் தொழுதால் கட்டாயம் அவன் கைவிடமாட்டான். அவன் ஸர்வரக்ஷகன். சர்வசக்தன். அவனைப்போன்ற தயாளன் வேறு யாருமில்லை. இது நீங்கள் அறியாததல்ல. தஞ்சம் என்று நம்பி அவனைத் துதியுங்கள். உங்கள் குறை தீர்ந்துவிடும். குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்துவரும் வேளையாகிவிட்டது. அவர்கள் வருவதற்குமுன் தயவுசெய்து போய்வாருங்கள். நான் உங்களுக்காக அந்த ஆண்டவனை வேண்டுகிறேன்.” என்று மிகமரியாதையுடன் கூறினாள்.

ப்ரேமா:—தாயே! பகவானை பஜிக்காத நேரமில்லை பகவானை வேண்டாத வேண்டுதலில்லை. எங்களுடைய பாபக் கடலுக்குமுன் அவனுடைய கருணைக்கடல் வரண்டு சூன்யமாகிவிட்டதென்றே நினைக்கிறோம். எத்தனைக்கெத்தனை பக்தி ச்ரத்தையுடன் நம்பியிருக்கிறோமோ அத்தனைக் கத்தனை பகவான் சோதித்து எங்களை நாஸ்திகராக்கிவிட்டான். பகவானை வேண்டித்தொழுது கதறினால்கூட அவன் நேராக எதுவும் செய்வதில்லையே! யாரையாவது புருஷகாரமாகக் காட்டியல்லவோ செய்கிறான். தற்சமயம் ஸ்ரீ மகாலக்ஷ்மி போன்ற தாங்கள்தான் எங்களுக்குப் பேசும்தெய்வம். தாங்கள்தான் எங்கள் குறைதீர்க்கவல்ல குலதெய்வம். புருஷ

காரபூதையான தேவி தாங்கள்தான். நாங்கள் உங்களைக் கேட்டது குற்றம், நியாய விரோதமென்பது தெரிந்தும் நாங்கள் குற்றமேசெய்து உங்களை வேண்டுகிறோம். தங்கள் கணவரிடம்கூறி இந்த வழக்கைச் சரியான முறையில் ஆராய்ச்சி செய்து எங்கள் குடும்பவிளக்கை ஏற்றிவைக்க வேண்டும்...என்று மறுபடியும் காலில்விழுந்து கதறினாள்.

சுகுணாவுக்கோ இம்மாதிரி ஒரு சம்பவம் நடப்பது எங்கே தன் கணவனுக்குத் தெரிந்துவிடுகிறதோ என்கிற பயம் தூண்டுகிறது. மறுபடியும் அவர்களைச் சமாதானப் படுத்தி "அம்மா! இம்மாதிரி தப்பானவழியில் நீங்கள் வந்தது மிகவும் குற்றம். இதனால் எங்கள் குடும்பத்திற்கே இழிவும் ஹானியும் உண்டாகிவிடும். கட்டாயம் பகவான் உங்களைக் காப்பார். நீங்கள்போய்விடுங்கள்." என்று சற்று கடினமான குரலிலேயே சொல்லி அவர்களையனுப்பிவிட்டுத் தான் ஒன்றுமே தோன்றாத நிலைமையில் கலங்கிப்போய் உட்கார்ந்து விட்டாள். துடிதுடிக்கும் கிழப்பெற்றோர்களின் பரிதாபமும் கதிகலங்கித்தத்தளிக்கும் ப்ரேமாவின்சோகப்பதுமைபோன்ற முகமும் அவளை யறியாது அவள் கண்களில் ஆணியடித்தது போன்று பதிந்துவிட்டதை அவளால் மாற்றவேமுடியாது தவித்தது. "கொலைசெய்தது உண்மையா? கொலை செய்யவில்லை என்பதுஉண்மையா?...எதுஉண்மை?...ஆண்டவனே இந்த உண்மையை எப்படியாவது என் கணவருக்கு எடுத்துக்காட்டி இந்த ஆத்மாக்களைக் காப்பாற்றி என் மனத் துடிப்பைத் தீர்த்துவைக்கவேண்டும். ஒருவேளை இவன் நிரபராதியாகவே இருந்துவிட்டால் அது விளங்காமல் தூக்கு தண்டனை விதித்துவிட்டால் அந்த பாதகம் என்குடும்பத்தை யல்லவா ஆட்டி நசித்துவிடச் செய்யும். அந்த ஒரு பாபகரமானசெயலுக்கு 5 உயிர்களல்லவா பலிவாங்க நேரும்? ஐயோ! நினைக்கும்போதே பயமாயிருக்கிறதே! என்ன செய்வேன்?" என்ற ஒரே திகில் பிடித்துவிட்டது.

## 9

## உள்ளக் களிப்பும், உண்மை இன்பமும்.

அன்று நடந்த சம்பவத்தைச் சற்றும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் ஏதோ மெஷின்போல் வேலைசெய்து வரும் சுகுணாவின் மாறுதல்களை அவள் கணவரும் கவனிக்கவில்லை. மேலும் இரண்டுதினங்கள் சென்றன. தான் பூபதியை எப்படியாவது பார்க்கவேண்டும் என்கிற தடுக்கமுடியாத ஒரு ஆசை எப்படியோ சுகுணாவின் உள்ளத்தில் மிகவும் ஆழமாகத் தோன்றி அதே நினைவாக இருக்கிறது.

எனினும் "நானோ பெரிய நீதிபதியின் மனைவி. அதிலும் இதே வழக்கை விசாரிக்கும் நீதிபதியின் மனைவியாகையால்

பொதுமக்களைப்போல்கோர்ட்டிற்குப்போய்ப்பார்க்கமுடியாது சிறைச்சாலைக்கும் போகமுடியாது. இந்த வீண் எண்ணம் எதற்காகத் தோன்றவேண்டும்? சில சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற எல்லா அம்சங்களிலும் எளிய நிலைமையிலிருந்தால் எத்தனையோ விதத்தில் உபயோகமாக இருக்கலாம். இந்த நிலைமையில் நான் என்ன செய்ய முடியும்? அந்த அபாக்யப் பிண்டங்களுக்குத் தேறுதல்கூடச் சொல்ல இயலாத நிலைமை யிலல்லவா இருக்கிறேன்?" என்று தனக்குள் எண்ணியவாறு தன் கணவனின் மேஜையை ஒழித்து வைக்கத்தொடங்கினாள்.

மேஜைமீது அவருடைய தினக்குறிப்புப் புத்தகம் தற் செயலாகக் கண்ணில் பட்டதும் அதைத்திறந்து பார்த்தாள். பல தேதிகளில் பல குறிப்புகள் எழுதியிருப்பதோடு அவர் சதா தெய்வபக்தியுடன் பகவானின் திருவடிகளை நம்பியே இருப்பதை வெகு தெளிவாய் எடுத்துக்காட்டியது. உடனே இந்த வழக்கைப் பற்றி என்ன எழுதியிருக்கிறார் என்று தள்ளிப்பார்த்தாள்.

தேதி...கிழமை...

ஏதோ சோதனைகாலத்திற்குத்தான் இத்தகைய வழக்கு களை பகவான் என்முன்பு கொண்டு நிறுத்துகிறார். அந்த கைதி யின் கம்பீரமும் அவன் க்ஷத்திரியன் என்பதை நிரூபிக்கும் பார்வை யும் பேச்சும் பிரமிக்கச் செய்கின்றன...அவன் பெற்றோர்களின் பரிதாபம்...அடாடா! நான் பல வருஷங்களுக்குமுன்பு படித்த ஒரு துப்பறியும் நாவலை நினைப்பூட்டுகிறது...பெற்றோர்களின் துடிப்பு முகத்தில் பிரகாசிப்பதுபோல் மனைவியின் தவிப்பும் அடாடா! அந்தக் கைதியை அவள் கண்ணீர் வழியப் பார்க்கும் பார்வையும் கவிகள் வர்ணிக்கத்தொடங்கினால் பக்கம்பக்கமாக எழுதலாம்...ஆண்டவன் ஒருவனிருக்கிறான்.

தேதி...கிழமை...

சாட்சிகளின் பேச்சு மிகவும் அழுத்தமாயிருக்கிறது. பூபதி தான் கொலைசெய்தான் என்பதற்குச் சந்தேகமே இல்லையே... இரண்டு தினங்களுக்குமுன்னர்கூட பூபதியும் சபாபதியும் சந் தித்து ஏதோ வாய்ச்சண்டைபோட்டதாகப் பல ஆதாரங்களுடன் ருஜுவாகிறதே. இந்த தர்மசங்கடத்திற்கு என்ன செய்வது? இதுதான் சரியான சோதனைபோலும்...பூபதியின் நெஞ்சு என்ன துணிகரமாகவும் சளைக்காமலும் இருக்கிறது. இதைப்பார்க்க ஆச்சரியமாகவே தோன்றுகிறது.

தேதி...கிழமை...

என்ன கடும் சினத்துடன் சாட்சிசொன்னான். அவன் சொல் வது அத்தனையும் உண்மையாகவன்றோ தோன்றுகிறது. ஆனால் குற்றவாளியின் முகத்தில் எத்தகைய கலக்கமும் காணப்பட வில்லையே? இதுதான் பெரிய ஆச்சரியம். சாட்சிகூறியவன் அகங் காரத்துடன்கூறும்போது கைதியினுடையமனைவியின் துடிதுடிப்பு உச்சத்தை எட்டியது. கணவனைப்பார்க்கிறாள், சாட்சிகூறும் மனிதனைப் பார்க்கிறாள். இரண்டு கண்களும் நீரைப் பொழிகின் றன. பரிதாபமாக இருந்தது. பகவானே! நீதான் இதுவிஷயத் தில் உதவிபுரிந்து காக்கவேண்டும்.

தேதி...கிழமை...

சில சமயங்களில் எத்தகைய குழப்பமும் இல்லாதிருக்கும் மனத்திற்குள் திடீரென்று கணக்கற்ற குழப்பங்கள் வந்து புகுந்து விடுகின்றன. அம்மாதிரியான சமயத்தில்தான் பகவானின் நினைவும் வருகிறது. இதை என்னுடைய வாழ்க்கையில் இன்றுதான் பிரத்யட்சமாகக் காண்கிறேன். இன்று ஏதனாலோ எனக்கு மன நிம்மதியே இல்லாது தவிக்கிறது. காரணமே தெரியவில்லை. எங்காவது வெளியிலே போய்வருவோம் என்று நினைத்தால் அதுவும் பிடிக்கவில்லை. சுகுணா மனமுருகிப்பக்தியுடன்பாடியும் தோத்திரம் செய்தும் சுலோகங்கள் சொல்லியும் பூஜை செய்ததை மறைந்துபார்த்து மனது சற்று சாந்தியடைந்தது. என்னவிருப்பினும் சுகுணாவின் நிலைபுரளாத குணம் மிக உயர்ந்ததுதான். நான் அவள் பூஜையைக் கவனிப்பதையறிந்தால் அவள் அதை நிறுத்தி என்னைக் கவனிக்க வந்திருப்பாள். இனி பிரதி தினம் 5 நிமிஷ நேரமாவது நாமும் நாமஜெபம் செய்யவேண்டும். இதனால் கட்டாயம் சாந்தி பெறலாம்.

இதுவரையில் படித்த சுகுணாவுக்கு உண்மையில் உள்ளம் பூரித்தது. தான் பூஜை செய்வதைப்பார்த்துத் தன்கணவன் நேரில் புகழ்ந்திருந்தால்கூட இத்தனை ஆனந்தத்தை அடைந்திருக்கமாட்டாள். தினக்குறிப்பிலிருந்ததைப்பார்க்கும்போது அவரது இதயத்திலுள்ள அன்பும் மதிப்பும் அப்படியே தெரிவதுபோல்தோன்றி மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இனி ப்ரதிதினம் அவர்வரும் வேளையில் தான் ஆனந்தமாகப் பூஜையைச் செய்து அவரை மகிழ்விக்கவேண்டும் என்ற பெரிய ஆசை உண்டாகியது. மணியைப்பார்த்தால் நேரமாகியிருப்பதையறிந்ததும் குறிப்புப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அவ்விடத்தை சுத்தம்செய்து மற்ற காரியங்களையும் முடித்துக்கொண்டு உடனே பூஜைக்குத் தயாரானாள்.

இத்தனை நாட்கள் மன நிம்மதியாகப் பூஜைசெய்து இன்பமடைந்த சுகுணாவுக்கு அன்று பூஜைசெய்யும்போது எத்தனை தடுத்தும் அந்தமூவரின் பிம்பங்களும் கண்ணீர் வழிய நிற்கும் பரிதாபகரமானகாட்சியே கண்முன்பு தெரிந்து அவள் மனது நிலையிடங்கொள்ளவில்லை. பெற்றோர்களின் துக்கமும் மனமொத்த இன்ப மனைவியின் துடிப்பும் சுகுணாவின் உள்ளத்தை உருக்கிப் பூஜையைக் கலைத்துவிட்டதென்றால் மிகையாகாது. "ஆண்டவனே! இந்த குற்றவாளி நிரபராதியானால்இவனுக்கு நீ நியாயமழைபோல் தீர்ப்புவழங்கச் செய்யவேண்டும். என்னுள்ளம் இன்று ஏதோ தத்தளிக்கின்றது. என் கணவருடைய மனமும் துடிதுடிக்கிறது என்பதைஅறிந்ததும் பின்னும் வேதனை செய்கிறது"...பகவானை அவர்களுக்காகவே வேண்டி பூஜைசெய்தாள். பொழுதும் சாய்ந்து இருள் சூழ்ந்தது.

# 10

## இடிந்த மனத்திற்கு இன்ப ஊற்று

சுகுணவுக்கு இன்னும் தன் கணவன் வராதது மிகுந்த கவலையாகிவிட்டது. வாசலுக்கும் உள்ளுக்கும் அலைந்து ஏங்கி எதிர்பார்க்கிறாள். எண்ணாததும்எண்ணித்தவிக்கிறாள். மனம் இருப்பு கொள்ளவில்லை. இரவு 8 மணிக்கு வந்து சேர்ந்த கணவனைப் பார்த்தபிறகுதான் சுகுணவுக்கு உயிர்வந்தது. முகத்தில் ஏதோ விசனமும் புதிய உணர்ச்சியும் படர்ந்து ஒரு மாதிரியாகக் காணப்பட்ட துரைராஜன் உடைகளை மாற்றிக் கொண்டு ஈஸிச்சேரில்படுத்தார்.

சுகுணவும் கூடவே வந்து உட்கார்ந்து "ஏன்! ஏதோ மாதிரி இருக்கிறீர்கள்? இன்று ஏதாவது புதிய வழக்கு... என்று முடிப்பதற்குள்" புதிதாகவேறு இப்போதேவேண்டுமா! அன்று சொன்னேனே அதே வழக்குத்தான். இன்று முக்ய மான சாட்சிகளின் வாக்குமூலம் அவச்யமாகிவிட்டதால் கோர்ட்டு நேரத்திற்குமேல் வைத்துக் கொள்ளும்படியாய் விட்டது.அத்தனை சாட்சியங்களும் குற்றவாளிக்கு மிகவும் எதி ராகவே இருக்கிறதேயன்றிச் சாதகமே இல்லை...கொலையில் மாண்டவனின் சகோதரியாம் ஒருத்தி சாட்சிசொல்லவந்தாள்; சீச்சீ! என்ன மனுஷி! அண்ணன் செத்து தங்கை பேசுவ தாகவே காணவில்லை. அதென்ன அலங்காரம்! உடம்பு பூராவும் தெரியும் ஒரு அகியாயச்சேலை...உதட்டிற்குச் சாயம்......

சுகுணவின் உள்ளம்பூரித்ததால் இடைமறித்து "என்னப் பனே, ஆண்டவனே!...அந்த உதவாக்கரை அலங்காரத்தின் அவகேட்டை...அவமானத்தை...அலங்கோலத்தை இப்போ தாவது உங்கள் மனத்தில் படும்படியாகச் செய்த பேருபகாரத் திற்கு நான் என்னிதயபூர்வமாய் வணங்குகிறேன்!...ஸ்வாமீ! இதுவரையில் நான் சொல்லியதெல்லாம்...

"சுகுண! போதும் இதோடு நிறுத்து! உண்மையில் நான் இன்று அந்தப் பிசாசுக் கோலத்தை வெறுத்தேன்...தலையை ஆண்களைப்போல் வெட்டிவிட்டிருக்கிறாள். நாணம் என்பது அவள் பிறந்த ஊரிலேயே இல்லை என்றுதான் தோன்றுகிறது. சுகுண! நீ சொல்லியதுமுற்றும்உண்மை...நீஅன்றுஇரட்டைச் சேலைகட்டியதன் உணர்ச்சியை நான் இப்போது நன்றாக உணர்ந்துவிட்டேன். நீயே ஜெயித்தாய்! சுகுண!...அந்த மனுஷி வாக்குமூலமா கொடுத்தாள்? நாட்டியமாடியும் நாடகமாடியும் நடித்தும் கண்ணடித்தும் கைதியைக்கண்டு ஏதோவிகாரப்பார்வையுடனும் அசம்பாவிதச் சொல்லுடனும் கூத்தடித்ததைக் கோர்ட்டிலுள்ள பொதுஜனங்கள் வெறுத் துச் சிரித்தார்கள். எது எப்படியானால் என்ன...கைதி அந்தப் பக்கமே கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. கைதியின் மனைவி தான் என்ன அடக்க ஒடுக்கத்துடன் அவளுடைய தவிப்

புடன்உட்கார்ந்திருப்பதைப் பார்த்து என்மனதே தவித்தது. ...நாளைதினம் ஜூரிகள் தீர்ப்பு சொல்லும்தினம்...என்ன செய்வதோ! ஒன்றுமேதோன்றவில்லை. அந்தப்பெண்பிசாசின் வாக்குமூலத்தில் கைதிக்கு ப்ரதிகூலமும் வழக்கு இன்னும் ஆழமான ஊர்ஜிதத்தையும் அடைந்துவிட்டது. கைதியைக்கூண்டிலிருந்து சேவகர்கள் அழைத்துப்போகும்போது அவன் தாயார் தாங்கமாட்டாத கதறலுடன் "அப்பா பூபதி" என்று கூப்பிட்டவாறு கூண்டினருகில் வந்தாள்... "அம்மா! இந்த பூமண்டலத்தையெல்லாம் பரிபாலிக்கும் பூபதியை நம்பி அவன் தாளை வணங்கும்மா! இனி இந்த அல்ப நரர்கள்மீது ஆசையை வைக்காதே. ஆண்டவனை நம்பு. உன் க்ஷத்ரியரத்தம் கோழையாகிவிடவேண்டாம்"... என்று கம்பீரமாகக் கூறிக்கொண்டேபோய்விட்டான். அந்தக் காட்சி என்னெஞ்சை உருக்கிவிட்டது" என்னும்போது ஒரு பெருமூச்சு வந்தது.

ஏற்கெனவே அன்றுதான் சுகுணு பூபதியின் தாய்தந்தையையும் மனைவியையும்பார்த்துப் பரிதவித்திருக்கையில்இதைக் கேட்டதும் முடிவு ஒரேமனதாக வருமோ வித்யாஸப் படுமோ! என்ன செய்வது...என்று இருவருடைய உள்ளமும் ஒரேவேதனையை அடைந்தது.

மறுதினம் என்னவாகுமோ என்ற எதிர்பார்ப்பும் துடி துடிப்பும் சுகுணுவுக்கு அபாரமாய் மிஞ்சிவிட்டது. மறுநாள் கணவன் ஆபீஸுக்குச் சென்றபிறகு வேலையே ஓடாமல் வேதனையுடன் உட்கார்ந்திருந்தாள். மணி ஏறஏற நெஞ்சில் திக்குதிக்கு என்று அடித்துக்கொள்கிறது. அன்றுமாலை பூஜை செய்வதற்கும் மனது ஓடவில்லை. ஏதோ மெஷின் போலச்செய்தாள். இரவு 8 மணிக்குமேலாகிவிட்டது. வாசலில் சுகுணு நிற்கையில் அலையக்குலைய ஒருகிழவன் ஓடிவந்து...

"அம்மணி! தாயே!...அன்று வயிறுரச் சோறுபோட்டு என் பசிப்பிணியைத்தீர்த்த மகாலக்ஷ்மிக்கு முதலில் இந்த நல்ல சந்தோஷச் செய்தியைத் தெரிவிக்கவே ஓடிவந்தேன்... பூபதிக்கு தூக்குதண்டனை போடவில்லை தாயே! ஜூரர்கள் 8 பேர்கள் குற்றவாளி என்றுர்கள்; ஒருவர் குற்றவாளியில்லை என்றுர். அதையே வைத்துக்கொண்டு இந்த மகானுபாவர் என்ன அருமையாகத் தீர்ப்புச்செய்தார் தெரியுமா! 'இந்த ஒரு ஜூரர் நினைக்கிறபடியேதான் நானும் நினைக்கிறேன். ஆகையால் இந்த வழக்கை வேறு ஜூரியையும் ஜட்ஜையும் வைத்து மறுபடி விசாரிக்கவேண்டி உத்திரவிடுகிறேன்' என்று மிகவும் கச்சிதமாய்ச்சொல்லிவிட்டார். கோர்ட்டில் என்ன சந்தோஷம் தெரியுமா! தாயே! ஒருகாலத்தில் என்வழக்கிலும் இதேபோல்தான் ஜூரிகள் சொன்னுர்கள். மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு அந்தப்படுபாவி ஜட்ஜு என் குடும்பத்தையே நாசமாக்கிவிட்டான்...

என்ற வார்த்தைகளைக் கேட்டதும் எங்குமில்லாத சந்தோஷமும் உள்ளத்தில் ஒருதனிஉணர்ச்சியும் உண்டாகியது. அதோடு, அன்று வந்த அதே பிச்சைக்காரக்கிழவனே இந்த நல்ல செய்தியைக்கொண்டுவந்திருப்பது பின்னும் ஆச்சரியமாகிவிட்டதோடு தன் பிதாவைப்பற்றிச் சொல்லியதில் மனத்தாங்கலும் உண்டாகியது. வியப்புடன் கிழவனைப்பார்த்து "கிழவா...அன்று சொல்லாமல் மறைந்துவிட்ட நீ இன்று இப்படிப்பட்ட செய்தியுடன் வந்ததுபற்றி மிகவும் சந்தோஷம். வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த உன் கடிதவாசகத்தை நான் பரம ப்ரீதியுடன் வரவேற்றேன். கோர்ட்டுவிஷயம் உனக்கெப்படியப்பா தெரியும் ?...இப்படி வந்து உட்காரு" என்றாள்.

கிழவ:—தாயே! உதவாக்கரைப்பண்டமாகிவிட்ட நான் இம்மாதிரி விசேஷமான வழக்குகள் நடப்பதானால், எப்படியாவது கோர்ட்டு வாசலில் காவல் காக்கும் சேவகன் காலில் விழுந்து கெஞ்சிக்கூத்தாடி தீர்ப்பு விஷயமறிந்துகொள்வது வழக்கம். அதேபோல் இன்றும் போனேன். நீதிபதி உங்கள் கணவர்தான் என்பது தெரிந்ததும், சிக்கலான இந்த வழக்கு எப்படித் தீர்மானமாகுமோ என்று பயந்து ஓடினேன். என்ன ஆனந்தம்! தான் ஒரு ஜூரர் சொல்லியதை ஆமோதித்து வழக்கை மறுவிசாரணைக்கு மாற்றிவிட்டது மிகவும் சந்தோஷமாகிவிட்டது. தன்மனத்தில் தோன்றியதை வெகு விஸ்தாரமாக அந்தக்கரண சுத்தியுடன் அவர் எடுத்துக்கூறியபோது ஜனங்கள் மகிழ்ந்தார்கள்..."அம்மணீ! அதோ கார் வருகிறது. நான் போய்விடுகிறேன்" என்று ஓடிப்போனான்.

காரும் வந்தது. துரைராஜன் தெளிந்த முகத்துடன் ஏதோ பெரும்பாரம் தன் தலையைவிட்டு இறங்கியதான சந்தோஷத்துடன் வந்தார்...இவரை வரவேற்ற சுகுண "பகவான் நம் பங்கிலிருந்து இந்தவழக்கை உங்களிடமிருந்து மாற்றச்செய்துவிட்டாராமே! எல்லா ஜூரர்களும் ஒரேமாதிரியாகச் சொல்லாமலிருக்கவேண்டுமே என்று நான் பகவானை ப்ரார்த்தனை செய்தேன்"...என்று முன்கூட்டியே சொல்வதைக் கேட்டுப் பரமசந்தோஷமடைந்த ஜட்ஜு "பேஷ்... இதற்குள் உனக்கு யார் விஷயத்தைச்சொன்னார்கள்?" என்றார். ..."ஏன் பொதுமக்கள் சொல்லியதால்தான்தெரிந்தது.உங்கள் கையால் தூக்குதண்டனை விதிக்காமல் காப்பாற்றியதே பெரிய ஆனந்தமில்லையா?" என்று கூறியபடி கணவனின் கால் பூட்ஸைக் கழற்றினாள். தம்பதிகளின் மனத்தில் ஆனந்தம் பூர்ணமாக நிலவியது.

# 11

## கடவுளின் லீலைகளைக் கண்டவர் உண்டோ?

மேலும் இரண்டு மூன்று மாதங்கள் ஒரு நிமிஷமாக உருண்டோடிவிட்டன. அன்றைய பத்திரிகையில் வெளியான விஷயத்தைப்பார்த்து சுகுணு இடிவிழுந்துபோய்விட்டாள். "ஐயோ! மறுபடியும் பூபதியின் வழக்கு விசாரணைக்கு வந்தும் மரணதண்டனையே விதித்துவிட்டார்களே! அநியாயம்...அந்தப் பெண்ணின் நிலைமை என்னவாயிற்றோ... அவளுக்கு இப்போது ப்ரஸவகாலமாக இருக்குமோ, கொஞ்சம் குறைந்திருக்குமோ தெரியவில்லையே! அடடா! இப்படியா ஆகிவிட்டது? ஏதோ, இந்த அநியாய தண்டனையை என் கணவர் கையால் கொடுக்காமல் கடவுள் காப்பாற்றினரே, அதுவே போதும்" என்று சுகுணு மனம் கலங்கும்போது துரைராஜாவும் இதைப்பார்த்து வருந்தினர்.

பத்திரிகையில் இதைப்பற்றி எழுதியிருந்ததை சுகுணு விடாமல் படித்தாள். ஜூரர்களில் 5பேர் குற்றவாளி என்றும் 4 பேர்கள் குற்றவாளி இல்லை என்றும் சொல்லியிருக்கையில் ஜட்ஜு மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு குற்றவாளி என்று தண்டித்தது மிகவும் கலக்கத்தையளித்தது.

எனினும் நாள் நெருங்கநெருங்க சுகுணுவின் உள்ளம் ப்ரேமாவின்மீதே சென்று அங்கலாய்த்தது. "ஐயோ! தண்டனையை நிறைவேற்றும் அன்று அவள் எப்படி சமாளிப்பாள்? கர்ப்பிணியாகிய அவள் உயிரேபோய்விடாதா! அல்லது அதற்குள் ப்ரஸவித்திருந்தால் அக்குழந்தையைப் பரதேசியாக விட்டுவிட்டுத் தானும் தற்கொலைபுரிந்துகொள்வாளோ! ஐயோ பாவம்!" என்ற மனவேதனை உண்டாகித் தவிக்கிருள். அவர்களைப்பற்றிய எந்த தகவலும் தெரிவதற்கு மார்க்கமும் இல்லாதுபோய்விட்டது.

மேலும் சில தினங்களாயின...சட்டப்படி தூக்குத் தண்டனையை நிறைவேற்றக்கூடிய நாள் இன்று விடியற்காலை என்பதைத் தேதியின்மூலம் அறிந்ததும் ஜட்ஜின் மனதுகூட வருந்தியது. அன்று கோர்ட்டில் வழக்கு நடக்கும்போது பார்த்த பூபதியின் உருவமும் அவன் மனைவி, பெற்றோர் முதலியவர்களின் முகங்களும் அவரையறியாது கண்முன்பு தோன்றி மிகவும் பரிதாபத்தை உண்டாக்கின. இதைப்பற்றியே தம்பதிகள் பேசிக்கொண்டிருக்கையில் டெலிபோன் மணியடித்ததும் துரைராஜ் அதில் பேசச்சென்ருர். சுகுணுவும் பக்கத்திலேயே நின்ருள்.

"ஹல்லோ!...யாரது...பெரிய ஆஸ்பத்ரி டாக்டர்...ஆம் ...நான்தான். சுகுணு இருக்கிருள். என்ன விஷயம்...... யாருயாரு!...ப்ரேமாவா...உம்...இன்றுதான் ஆண்குழந்தை பிறந்திருக்கிறதா...பிறகு...அவள் யாரு, என்ன, என்று

தெரியுமா...ஒன்றுமே தெரியாதா...சுகுணாவையா பார்க்க வேண்டுமென்கிறாள்...என்ன...மிகவும் கவலைக்கிடமான நிலைமையிலிருக்கிறாளா...பிழைக்கமாட்டாள்என்றுசொல்கிறார்கள் ...சரி...சுகுணாவருகிறாள் என்று சொல்லுங்கள்...என்றுமிகவும் விசனத்துடன் பேசிவிட்டு சுகுணாவைப்பார்த்தார்.

விஷயம் பூராவும் புரிந்துவிட்டதால் சுகுணாவின் கண்களில் கடகட வென்று நீர் பெருகிவிட்டது. "ஸ்வாமீ! இப்



போது என்ன செய்வது.?'' என்றாள். “ தாமதிக்காமல்உடனே அங்கு சென்று, அந்தப்பேதை கடைசிகாலவேண்டுகோள் எதையோ உன்னிடம் தெரிவிக்கவேண்டுமென்கிறுளாம், அதைத் தெரிந்துகொண்டுவா...உடனே, போ''...என்றார்... அடுத்த நிமிடமே காரில் பறந்து செல்வதுபோல் சென்றாள்.

எலும்பும் கூண்டுமாய் ப்ரேமா கட்டிலில் படுத்திருந்த பரிதாபம் சுகுணாவின் உள்ளத்தை உருக்கிவிட்டது. அருகில் சென்று “ப்ரேமா!” என்று அன்புடன் அழைத்தாள். ஆவலே வடிவுடன்...“ஹா!...தாயே!...வந்தீர்களா! இதோ...இதோ... இந்த அபாக்யப்பிண்டத்தின் தலைவிதியை தங்கள்போன்ற வர்களின் கையில் ஒப்படைக்கவே அழைத்தேன். எங்காவது அனாதை ஆச்ரமத்தில் இந்த துர்ப்பாக்யக் குழந்தையை விட்டுவிடுங்கள். இதன் குடும்பத்து மர்மம் எதையும் இத னிடம் எந்தகாலத்திலும் சொல்லவேண்டாம். ஏதோ ஒரு உருப்படி இல்லாத முறையில் வளரட்டும். தாயே! என்றாவது பிழைத்துப் பெரியவனானால் தங்களிடம்வேலைக்காரனாகவாவது வைத்துக்கொண்டு ஏழைக்கு ரக்ஷணமளியுங்கள். அவ்வளவு தான்!” என்றாள்; அதற்குமேல் பேசமுடியாது மூர்ச்சித்தாள்.

சுகுணா வெளியே சென்ற அதே சமயம் துரைராஜனுக்கு மறுபடியும் ஒரு அவசரடெலிபோன் வந்தது. உடனே புருஷர் களுடைய பெரிய ஆஸ்பத்ரியில் அபாயகரமான நிலைமை யிலுள்ள ஒருமனிதன் இவரைப்பார்க்க வேண்டுமென்றுகூப்பிடு வதாக விஷயமறிந்ததும் காரில் சுகுணாபோயிருப்பதால் உடனே வாடகைக்காரில் அங்கு சென்றார். என்ன ஆச் சரியம்! முன்பின் தெரியாத ஒரு மனிதன்—வெகு அபாயகர மான நிலைமையில் படுத்திருப்பவன்—இவரைக் கண்டதும் படுத்தபடியே கைகளைக் கூப்பி. ‘‘ஐயா! அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்றுகொல்லும் என்ற வாக்கியத்தின் சக்தியை உணராமல் மதோன்மத்தனாய்த் திரிந்த நான் அந்த மந்திர மணிவாக்யத்தை உணர்ந்துகொள்ளும்படி யான சந்தர்ப்பத்தைப் பகவான்காட்டிவிட்டார். சபாபதிக்கும் எனக்கும் ஏதோ அல்பப்பெண் விஷயமாகப் பகை உண் டாகி வளர்ந்ததைப் பழிதீர்க்க நானே சபாபதியைச்சுட்டுக் கொன்றேன். ஆனால், பூபதியின் தலையில் அந்தப்பழிமூண்டதும் நான் ஜெயித்துவிட்டதாக எண்ணி மிகக்கர்வியாய்த் திரிந்தேன். இன்று ஒரு மிருகத்தைச் சுடுவதற்கு குண்டு அடைத்துச் சரிபார்த்தபோது அதே துப்பாக்கியின் குண்டு கைதவறி என்மார்பில் பாய்ந்து சுட்டுவிட்டது. இனிநான் பிழைக்கமாட்டேன். என்னுடைய பாதகத்தை என்னுயிர் போகும்முன்பு தெரிவித்துவிடவும், என்னுடைய ஆஸ்தியில் பெரும்பாகத்தை இன்றே ஆஸ்பத்ரியில் பிறந்துள்ள பூபதி யின் குழந்தைக்குக் கொடுத்துவிடவும் நீதிபதியாகிய தங் களைக் கூப்பிட்டேன். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை

உணர்ந்தேன். பூபதியின் உயிரும் இன்றுகாலையில் நீங்கியிருக்கும். என்னுயிரும் இன்றே நீங்கப்போகிறது" என்று கூறும்போதே சடக்கென்று மூச்சு நின்றுவிட்டது!

ஆகா! கனவிலும் எதிர்பாராத இந்தவிஷயத்தைக் கேட்டு, துரைராஜனின் உள்ளம் துடிதுடித்தது. இந்தப் பாழும்கொலைபாதகன்இந்தவிபத்திற்கு நேற்றே ஆளாகியிருக்கக்கூடாதா! இன்று காலை நிரபராதியான பூபதியின் உயிர் நீங்கிஇருக்குமே! நாசகாலன்! இவன் தன் குற்றத்தையொப்புக்கொண்டும் உபயோகமற்றுவிட்டதே...என்று மனக் கோதிப்புடன் ஆஸ்பத்ரி அதிகாரிகளிடம் இதுவிஷயத்தைத் தாக்கல் செய்துவிட்டு உடனே அந்த சுகுண சென்றுள்ள ஆஸ்பத்ரிக்கு ஓட்டமாக ஓடி..."சுகுண! சுகுண! பூபதி நிரபராதியாம்...சபாபதியைக் கொன்ற மகாபாவி இப்போது என்னை வரவழைத்து விஷயத்தைக்கூறி உயிரையும்விட்டு விட்டான்...ஆனால்...இன்றுகாலை, பூபதியை...என்று மேலே கூறமுடியாது நின்றார்...

இதைக்கேட்ட சுகுண வெகு ஆச்சரியத்தை யடைந்தும் சந்தோஷமற்ற விசனமான நிலைமையுடன் கண்ணீர்விட்டாள். பெரியடாக்டரிடம் ப்ரேமாவுக்குச் சரியான மருந்துகளைக் கொடுத்து கவனிக்கும்படிச் சொல்லிவிட்டு வீட்டிற்குவந்தாள்.

"ஐயோ? இந்தப்படுபாவி நேற்றே இக்கதிக்கு ஆளாகி இருக்கக்கூடாதா!"என்று தம்பதிகள் தவித்தார்கள். இதற்குள் கோர்ட்டுக்கு நேரமாகிவிட்டதால் துரைராஜன்கோர்ட்டுக்குச் சென்றார். கடவுளின் அதி ஆச்சரியகரமான லீலைகளின் அத்புதத்தை யாரறியக்கூடும்? அதை அறியும் சக்திதான் மக்களுக்கு ஏது? அன்று கோர்ட்டுக்கு சர்ப்பபுரி சிறையிலிருந்து அவசரத்தந்தியொன்று வந்தது. அதாவது அன்று விடியற்காலையில் சட்டப்படி பூபதியைத்தூக்கிலிடும் போது கயிறு அறுந்துவிட்டதால் உயிர் போகாமல்அடிபட்டு ஆஸ்பத்ரியில் கிடக்கிறான். கோர்ட்டார் மறுபடியும் தூக்கிலிடும் தேதியைக்குறித்து அனுப்பவேண்டும்...

என்றிருந்ததைப் பார்த்ததும் முதலில் துரைராஜனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவேஇல்லை. அதே க்ஷணம் கோர்ட்டுமூலமாகவே "பூபதி நிரபராதி. உண்மைக் குற்றவாளி அகப்பட்டுவிட்டான்" என்பதைத் தந்தியடித்து, பூபதியைச் சரியானபடி கவனிக்கும்படியும் அதிகாரதோரணையிலேயே உத்தரவுகள் பிறப்பிக்கச்செய்தார்.

உடனே டெலிபோனில் சுகுணவை அழைத்து "சுகுண! அதிசயத்திலும் அதிசயம்: கடவுள் ஒருவன் மறைந்து மக்களைக் காப்பாற்றித் தன் லீலைகளைக் காட்டுகிறான் என்பதற்கு இப்போது நீ கேட்கப்போகும் ஆச்சரிய செய்தியேபோதும். பூபதியைத் தூக்கிலிடும்போது கயிறு தவறி அறுந்து விட்டதால் அவன் சாகவில்லையாம். ஆனால், உடம்பு

அதிர்ச்சியினால் ஆஸ்பத்திரியில் இருக்கிறானும். அதே தூக்கு தண்டனை தினத்தில் உண்மைக் குற்றவாளியை பகவான் முடித்து நியாயத்தை நிலைநாட்டிவிட்டார்!...மற்றவை நேரில் சொல்கிறேன்'' என்று கூறியதைக் கேட்ட சுகுணா உண்மையில் தன்னை மறந்து டெலிபோன் ரிஸீவரைக் கையில்வைத்துக் கொண்டே குதித்தாள். உடனே டாக்ஸிகாரைக் கொண்டு வரச்செய்து ஆஸ்பத்ரிக்கு ஓடினாள்.

மிகவும் பலஹீனப்பட்ட நிலைமையில் படுத்துள்ள ப்ரேமாவைப் பார்த்ததும் இவளுக்குண்டான ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை....‘‘ப்ரேமா......ப்ரேமா...இதோபாரு! உன் கணவன் நிரபராதி என்று விஷயம் ருஜுவாகி அவர் விடுதலையாகிவிட்டார். தூக்குதண்டனை தவறிவிட்டது...இனி பயப்படாதே. இந்தக் குழந்தையின் அதிர்ஷ்டந்தான் அவருக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது! நிறைய சொத்தும் வருகிறது...நீ விதவையல்ல...நீ தீர்க்கஸுமங்கலி. உன் மாமியார் மாமனார்கள் பரம பாக்யசாலிகள்'' என்று மூச்சுவிடாமல் சொல்லியதைக்கேட்ட ப்ரேமா ஒரே துள்ளு துள்ளிக் குதித்தது போல்...‘‘ தாயே!...தாயே!...இதுநிஜமா?......நான் இந்த உலகத்திலிருக்கிறேனா? இறந்துவிட்டேனா...என் கணவர் நிரபராதியா?...அவர் தண்டனை நின்றுவிட்டதா?''...என்று கண்ணீர்பெருகக் கேட்டாள்.

‘‘ஆமாம் ப்ரேமா! சகலமும் உண்மை...நீ தைரியமாய் சந்தோஷமாய் உன் மகனைச் சீராட்டு...அதைரியப்படாதே''.. என்று கூறி விஷயத்தை டாக்டர்களிடம் தெரிவித்து மிகவும் ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளும்படியாகச் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தாள். இதற்குள் துரைராஜாவும் வந்தார்.

அடாடா! இருவரும் சிறியகுழந்தைகளைப்போல் ஆனந்தத் தாண்டவமாடிப் பேசிமகிழ்ந்தார்கள். கடவுளின் சக்தியை அப்போதுதான் துரைராஜ் நன்றாக உணர்ந்து பின்னும் ஆழமான பக்திக்கு இதயத்தில் இடம் கொடுத்தார்.

மேலும் ஒரு மாதகாலத்திற்குள் பூபதியின் குடும்பத்தினர் பேரானந்தக்கடலில் மூழ்கிப் பரமசந்தோஷத்துடன் இருப்பதைக் கடிதமூலமறிந்து தம்பதிகள் பூரித்தார்கள். மாண்டவன் மீண்டமாயத்தை எண்ணி எண்ணி தம்பதிகள் ‘‘இதைவிட நித்யகல்யாணமங்களவைபவ சுகம் வேறு என்ன இருக்கிறது ?'' என்று பூரித்தார்கள். அவர்கள் இதயத்தில் சாந்தி நிலவியது!

மங்களம்.

நியாயமழை
முற்றிற்று.

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## 1921-ஸ்ரீ சாரதா வித்தியாலயம் ஆரம்பம்

விதவாச்ரமம் ஆரம்பித்து இந்த 9 வருடங்களில், பிற்பகுதியில், விவாகம் ஆகாத சில பெண்களும் படிப்பதற்காக வந்து சேர்ந்தனர். புருஷனையிழந்த பெண்களின் தங்கைகள், அவர்களுக்குத் துணையாகவும், படிப்பதற்காகவும் வந்தார்கள். ஐஸ் ஹௌஸ் கட்டிடம் பெரிதாயிருந்ததாலும் படிக்க இஷ்டப்படும் பெண்களைச் சேர்த்துக்கொண்டு பெண்கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டும் என்னும் ஆர்வத்தாலும் வெளியூர்களிலிருந்து வரும் சில கன்னிகைகளையும் சேர்த்துக்கொண்டோம். 1921-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் 25 கன்னிகைகள் பல வகுப்புக்களில் படித்துக்கொண்டிருந்தனர்.

பிராம்மணர் பிராம்மணரல்லாதார் கிளர்ச்சி ஒன்று இந்த வருஷத்தில் ஆரம்பமாயிற்று. "பிராம்மண விதவைகளை மாத்திரம் படிக்கவைப்பது ஏன்? பிராம்மணரல்லாத விதவைகளையும் சேர்த்து ஏன் படிக்கவைக்கக்கூடாது? என்று புகார். ஆகவே, 'விவாகமாகாதகன்னிகைகளையெல்லாம்அனுப்பிவிடவேண்டியது; அந்த இடத்தில் மற்றஜாதிக் கைம்பெண்களை எடுத்துக்கொள்ள வேண்டியது' என்று சர்க்கார் உத்தரவுவந்தது, ஏப்ரல்மாதத்தில்.

## FOUNTAIN LODGE

அப்போது இருந்த 25 கன்னிப்பெண்களில் பலர் பெரிய செல்வக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஊர்களில் அந்தக்காலத்தில் உயர்தரப் படிப்புக்கு வேண்டிய வசதிகள் கிடையாது. அந்தப்பெண்கள் பாடசாலையையும் ஆசிரமத்தையும் விட்டுப் போக மனமில்லாமல் அழவே ஆரம்பித்துவிட்டனர். ஆகவே அவர்கள்பெற்றோர்களுக்குஎழுதி அவர்கள் விருப்பத்துக் கிணங்க திருவல்லிக்கேணி ரங்கநாதன் தெருவில் (Fountain Lodge) என்னும் வீட்டை மாதம் ரூ. 110 வாடகைக்கு எடுத்து அங்கு இந்த 25 பெண்களையும் ஜுலை மாதம் 4-ந் தேதியன்று குடித்தனம் வைத்தோம். லேடி வில்லிங்டன் பாடசாலையில் வேலையாயிருந்த ஸ்ரீமதி P. சீதா என்பவள் என் வேண்டுகோளுக்கு இணங்கி ஹாஸ்டல் தலைவியாக இருக்க ஒப்புக்கொண்டாள். வீட்டு வாடகைக்காகவும் சாப்பாட்டுக்குமாக மாதம் தலைக்கு ரூ 25 கொடுக்க ஏற்பாடு. கவர்மெண்டிலிருந்து ஒருவித உதவியும் கிடையாது. P. சீதா என்பவள் செல்வக்குடும்பத்தைச் சேர்ந்தவள். சென்னையில் M. A. முடித்துவிட்டு, சீமைக்குப்போய் மேல் படிப்பும் படித்து வந்தவள். பாடசாலையில் மிகத்திறமையான உபாத்தினி. ஆனால், ஹாஸ்டலை வகிக்கும் திறமை குறைவு. அந்த வேலை அவளுக்கு விருப்பமும் இல்லை. ஆகவே 6 மாதத்துக்குப் பிறகு, வரவுக்குமேல் சுமார் 500 ரூபாய் வரைக்கும் அதிக செலவு செய்துவிட்டு ஹாஸ்டல் வேலையை விட்டு நீங்கிவிட்டாள். இதன்

பிறகு என் ஆப்த சிநேகியான ஸ்ரீமதி பட்டம்மாள் என்பவர் இந்த வேலையை ஏற்றுக்கொண்டு மிகத்திறமையாக வேலைசெய்தார்.

## ஸ்ரீமதி பட்டம்மாள்

ஸ்ரீமதி பட்டம்மாள் என்பவர் காலஞ்சென்ற ஸர் V. C. தேசிகாசாரியாரின் சகோதரி புதல்வி. பாலியவயதில் ஒரு செல்வமான குடும்பத்தில் விவாகமாகி புருஷனை இழந்தவர். இவரது பெற்றோர்கள் இவரை தங்கள் புதல்வனைப்போலவே பாவித்து வீட்டிலேயே சம்ஸ்க்ருதம், சிறிது ஆங்கிலம் இவற்றைக் கற்க ஏற்பாடு செய்திருந்தனர். சம்ஸ்க்ருதத்தில் நல்ல பாண்டித்தியமுடையவர். 1910-வது வருஷத்தில் ஆரம்பித்த எங்கள் இருவருடைய நட்பும் 'ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே' என்றபடி மேன்மேலும் வளர்ந்து வந்தது. 1915-இல் என்னுடைய பிடிவாதமான வேண்டுகோளைத் தடுக்க முடியாமல் ஐஸ்ஹௌஸ்-க்கு மாத்திரம் விடுமுறை நாட்களி வந்து அங்குள்ள மாணவிகளுக்கு ஸம்ஸ்க்ருத பாஷை, தோ திரப்பாக்கள் இவற்றைக் கற்பிப்பார். பிறகு சிறிதுசிறிதா மனோதைரியம்உண்டாகி ஸ்கூலிலும் வந்து பாடம் கற்பிக்க ஆர பித்தார். பிறகு காலக்கிரமத்தில் ராணி மேரி கல்லூரியி ஸம்ஸ்க்ருத உபாத்தினியானார். அந்தக் காலத்தில்தான் சாரதா வித்தியாலய ஹாஸ்டலுக்குத் தலைவியாக 1922-ஆம் ஷம் ஜனவரியில் வந்து ஏற்றுக்கொண்டது.

## பணநஷ்டமும் கஷ்டமும்

Fountain Lodge என்னுமிடத்தை 1வருஷத்துக்கு நான் எடுத்துக்கொண்டது. வாடகை அதிகம். கட்டுப்படியாகவில்லை. அதனால் தெளிசிங்கப்பெருமாள்கோவில் தெருவில் 60 ரூபாய்க்கு ஒரு வீடு கிடைத்தது. மரவியாபாரம் செய்த ஒரு வியாபாரி Fountain Lodge—ஐ தான் எடுத்துக்கொண்டு ஒழுங்காக வாடகை கொ பதாக ஒப்புக்கொள்ளவே (எழுத்தில் இல்லை; வாய்ப்பேச்சுமட்டும்), நான் வித்தியாலயத்தை இடம்விட்டு மாற்றினேன். சுமார் 1922-ம் வருஷம், ஜுலையிலோ ஆகஸ்டிலோ ஒரு வக்கீல் நோட்டீஸ் எனக்குக் கிடைத்தது, 1 வருஷம் வைத்துக்கொள்வதாக நான் கொடுத்த ஒப்பந்தப்படி, Fountain Lodge 5 மாத வாடகை நான் கொடுத்தாக வேண்டுமென்று. ஒரு பெரிய அட்வ கேட் ஜனரலைக் கேட்டேன். "ஒப்பந்தப் பிரகாரம் பணத்தைக் கொடுத்தே ஆகவேண்டும்; வேறு வழியேயில்லை" என்று சொல்லி விட்டார். ஆக, என் சொந்தப்பணத்திலிருந்து ரூ. 600 சொச்ச எடுத்துக்கொடுத்தேன். இப்படியாக ஆரம்பத்தில் சாரதாவித்தியாலய சம்பந்தமாய் கஷ்டமும் நஷ்டமும் மிகுதியாகவேயிருந்த இருந்தாலும், ஆரம்பித்ததை விடக்கூடாதுஎன்ற பிடிவாதத்துடன் நடத்தினேன். ஸ்ரீமதி பட்டம்மாள் ஹாஸ்டல்பொறுப் ஏற்றுக்கொண்டது எனக்கு மிகுந்த உதவியாயிருந்தது.

1921 ஜுலையில், நான் டவுனில் படித்த கான்வெண்ட் தலை Mother Zavier என்பவர் ஆச்ரமத்தை வந்து ... தன் பெண் என்றும், ஆச்ரமத்துப் பெண் ... திகள் என்றும் சொல்லி சிறிது நேர ... ருந்துவிட்டுச்சென்றார். (அடுத்த இதழில் ஒரு விசித்திர சம்பவம்)

13164

# மகாத்மாஜி ஸேவாசங்கம்

## மூன்றவது ஆடி வெள்ளிக்கிழமை

இன்று பாலிகா கழகத்துச்சிறுமிகள் வினோத விவாகம் என் சிறிய நாடகமும், மற்றும் இரண்டு ஹாஸ்ய நிகழ்ச்சிகளும் றமையுடன் நடித்தனர். நடராஜா நாட்டிய நிகேதனத்து மாணவிகள் டியமாடி சபையை மகிழ்வித்தார்கள். உபயத்தை ஸ்ரீமதி ா பாலசுப்ரமண்யம் தேங்காய் பழத்துடன் வெகு சிறப்பாக த்தினார்கள். ஸ்ரீமதி சுபத்திரா வந்தனோபசாரம் கூறினர்.

தாய்தந்தையற்ற பரதேசிச்சிறுமி வஸந்தா என்பவளுக்கு ஒளவை ஹோமில் சேர்ப்பதற்காக இரண்டு துப்பட்டிகள், தகரத் தொட்டி, சிறிய ட்ரங்குபெட்டி, சோப்பு, சோப்புபெட்டி முதலிய வைகளை சங்கத்திலிருந்து இனமாக வாங்கி அளிக்கப்பட்டது.

## கடைசீ வெள்ளிக்கிழமை

சுலோசனமகாதேவன் வெகுவெகு அத்புதமாய்ப்பாடிஜமாய்த்து ட்டார்! பக்கவாத்யம் வாசித்த ஸ்ரீமதி கமலா சுப்ரமண்யம் ரமான திறமையுடன் பிடில்வாசித்துக்கச்சேரியை வெகுவாய் பிக்கச்செய்தார். மிருதங்கமும் கடவாத்யமும் வெகு நன்றாக ந்தன. உபயத்தை ஸ்ரீமதி M. O. ஜானகியம்மாள் நடத்தினர்.

## சுதந்திரத் திருவிழா

வ

ரம் ந் தேதி காலையில் ஸ்ரீமதி சுலோசன மகாதேவன் தேசிய சேர் னர். ஸ்ரீமதி கங்காநாராயணய்யர் வெகு உத்ஸாகத்துடன் 'வி ஏற்றிப் பேசினர். கௌஸல்யா வேங்கடாச்சாரி ராம நாம மையைப் பற்றியும் நாம பஜனத்தினல் சகலத்தையும் சாதிக்க ாம் என்றும் அழகாகப் பேசினர். மாலை 4-30 மணிக்கு ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய் தலைமையில் நூல் நூற்றலும் ஸ்ரீ சீதையம்மாள் கோஷ்டியுடன் கீதாபாராயணமும் வெகுவெகு அத்புதமாய் நடந் தன. ாலிகாகழகமாணவிகளும் நடராஜாநாட்டியநிகேதனமாணவி செல் முறையே மிக்க ஆனந்தமாக நாட்டிய விருந்தளித் ார்கள். அதில் சின்னஞ்சிறு குழந்தை சுமார் 5 வயதுடைய தா என்பவள் வெகு அழகாக ஆடினள். பாலிகா கழகத்து ணவிகள், "பிச்சைக்காரவிடுதி" என்ற ஹாஸ்ய நாடகத்தை த்துச் சிறப்பிக்கச் செய்தார்கள். ஸ்ரீமதிகள் சரோஜாபாய், சுந்தர லி, பத்மினி ஸ்ரீனிவாஸன், சுபத்ரா, குந்தலா, கௌஸல்யா முதலிய கள் சொற்பொழிவாற்றினர்கள். தலைவி வெகு ரஸமாய்ப் சிப்பின் மங்களகானத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

## ஆடிப்பூரம்

ஆகஸ்டு 16-ந் தேதியன்று ஸ்ரீமதி S. ஜானகியம்மாளின் தலைமை திருவாடிப்பூர உத்ஸவம் மிக நன்றாக நடந்தது. பத்ததி ப்ரகாரம் பாடல்களும் பாடி விழாவை நடத்தினர்கள். சீதையம்மாள் னோபசாரம் கூறினர்.

## ஸ்ரீ வரமகாலக்ஷ்மி பூஜை

வ

படி ன்று ஸ்ரீமதி கனகம்மாள் ஜகன்னாதாசாரியாரின் தலைமையில் உப லக்ஷ்மி பூஜை உத்ஸவம் வெகு ஆனந்தமாக நடந்தது. வேலை புராண ஸ்ரீ ஸ்துதியைப் பலரும் ஏககாலத்தில் வெகு சிறப்பாகப் பாடி அர்ச்சனை செய்த காட்சி அபூர்வமாயிருந்தது. செய் மாளின் கோலாட்ட கோஷ்டியாரின் அஷ்டபதி டமும் கும்மியும் முதல்தரமாக இருந்தன.




JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.
*Managing Editor:* V. M. SRINIVASAN, M. A. B. L.